விலை ரூபா 20

பக்கங்கள் 32

# உதயன்

34c - 27c
பரவலான இடி மழை

சுடர் 31 | கதிர் 174 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 05, புதன்கிழமை 18.05.2016


**சுற்றுலா சென்ற 17 மாணவர்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு சாவு**

இந்தோனேசியாவில் பெரும் துயரம்



பக்.14

# ஈழப் பெருந்துயரின் நினைவேந்தல் இன்று

## அனைவரையும் அணி திரள அழைப்பு மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றல்

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்காலில் மூச்சடங் கிப் போன உறவுகளுக்காகத் தமிழர் தாயகப் பிரதேசங்களில் அஞ்சலி நிகழ்வுகள் இன்று கடைப் பிடிக்கப்படவுள்ளன. இதன் முதன்மை நிகழ்வு, பெரும் இன அழிப்பு நடந்தேறிய முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம் பெறுகின்றது.

இந்த நினைவேந்தலில் கலந்துகொள்ளுமாறு தாயகத் தமிழர் களுக்கு 18 மே இயக்கம் அழைப்பு பக்.27

"முள்ளிவாய்க்கால் தந்த துயர வலிகளை மனங்களில் நிறுத்திக் கொண்டு, உயிர் பறித்தெடுக்கப்பட்ட தமது உறவுகளுக்காகச் சுடரேற்றி அஞ்சலி செய்யும் நிகழ்வுகளில் தமிழ் மக்கள் இன்று ஈடுபட வேண்டும். அத்துடன் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காக இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும் விசேட வழிபாடுகளில் ஈடுபட வேண்டும்."

## போரில் உயிர் நீத்தவர்களுக்கு கூட்டமைப்பு சபையில் அஞ்சலி

கொழும்பு, மே 18

போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்குப் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் அஞ்சலி செலுத்தியது.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கூட்ட பக்.30

## இந்திய மீனவர்கள் நேற்று விடுவிப்பு



யாழ்ப்பாணம், மே 18

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் இருந்த இந்திய மீனவர்கள் 21 பேர், மன்னார் நீதிமன்றினால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கடந்த மாதம் 27 ஆம் திகதி குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்தனர். இந்த 21 பேரில் சிறுவர் தொழிலாளி ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

இந்த நிலையில், சட்டமா அதிபரின் பக்.27

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



இடப்பெயர்வே வாழ்க்கையாகிப் போனதே ! படம் - அமரதாஸ்

## கடுகன்னாவ மண் சரிவில் புதையுண்டனர் ஆறு பேர்

மூவரின் சடலங்கள் மீட்பு



கொழும்பு, மே 18

கண்டி மாவட்டத்தின் கடுகன்னாவ, இலுக்குவத்த ரம்மலக எனும் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மண்சரிவில் 6 பேர் புதையுண்டனர். அவர்களில் மூன்று பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

அத்துடன், புதையுண்டவர்கள் பக்.30

## புதிய அரசமைப்பு மூலம் நிரந்தரத் தீர்வு வேண்டும்

ரிச்சர்ட் ஆர்மிடேஜிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

கொழும்பு, மே 18

புதிய அரசமைப்பில் தேசிய பிரச்சினைக்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியநிரந்தரத் தீர்வு எட்டுவது மிகவும் பக்.30

## தாழமுக்கம் கரை கடந்தும் வடக்கில் மழை தொடரும்

இடர்களை முன்கூட்டியே அறிவதற்கான தொழில்நுட்பம் இல்லை என்கிறது அரசு

கொழும்பு, மே 18

காலநிலையில் ஏற்படும் திடீர் மாற்றத்தையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் முன்கூட்டியே அறிந்து முன்னெச்சரிக்கை பக்.28

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் உணர்வெழுச்சியுடன் பங்கேற்போம்

சரவணபவன் எம்.பி அழைப்பு



யாழ்ப்பாணம், மே 18

ஈழத் தமிழர்கள் ஒன்றிணைந்த எழுச்சியாக, முள்ளிவாய்க்காலில் இன்று நடைபெறும் நினைவேந்தலில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். கிளிநொச்சி பக்.27

## வடக்கில் கனமழையால் 20 ஆயிரம் பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 18

வடக்கில் கொட்டித் தீர்த்த மழையால் 5 ஆயிரத்து 628 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 132 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டங்களின் இடர் முகாமைத்துவப் பக்.29






Digitized by Noolaham Foundation

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நினைவேந்தலின் முதன்மை நிகழ்வு இடம்பெறும் முள்ளிவாய்க்காலில் பிரதான சுடர் ஏற்றுவதற்கான பீடம் நேற்று அமைக்கப்பட்டது. (வ-102)

# முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபி அமைப்பதற்கு அனுமதிக்க வேண்டும்

## சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மே 18

இறுதிப் போரின் போது உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தனவிடம், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கடிதமொன்றை இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தனவுக்கு அவர் நேற்று அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின் போது பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு உயிரிழந்தனர். 3 தசாப்த காலமாக இடம்பெற்ற போரிலும் பெருமளவான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்களை நினைவு கூர்ந்து இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுத் தூபியொன்றை அமைக்க வேண்டியுள்ளது. அதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வழங்க வேண்டும். அத்துடன் நினைவுத் தூபியை அமைப்பதற்கான நடவடிக்கையையும் அரசு எடுக்க வேண்டும். இறுதிப் போரில் உயிரிழந்த தமது உறவுகளை பகிரங்கமாக நினைவு கூர முடியாத நிலை காணப்பட்டு வந்தது. ஆனால் புதிய நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர் கடந்த வருடம் மே மாதம் முள்ளிவாய்க்கால் பகுதியில் உயிரிழந்த உறவுகளுக்கு தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுத்தூபி அமைக்கப்படுமானால் வருடந்தோறும் உறவுகளை இழந்த மக்கள் அங்கு ஒன்றுகூடி தமது அஞ்சலியைச் செலுத்தக் கூடியதாக இருக்கும். எனவே இங்கு நினைவுத்தூபி அமைப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டியது அவசியமாகும். இதற்கு அனுமதி வழங்குமாறு கோருகின்றேன் - என்றுள்ளது.

(ந-ஜ-5)

# முள்ளிவாய்க்கால் அவலத்துக்கு பரிகாரம் வழங்கப்பட வேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் அவலத்துக்கு உரிய பரிகாரமாக அந்த மக்களுக்கான நீதி உறுதி செய்யப்பட வேண்டும். இவ்வாறான பெரிய மனித அவலங்களை ஏற்படுத்துகின்ற குற்றச் செயல்கள் இதன் பின்னர் இடம்பெறாத வகையில் சட்டமும், ஒழுங்கும் உறுதி செய்யப்பட வேண்டும். -இவ்வாறு வடக்கு மாகாண முஸ்லிம் சிவில் சமூகம் சார்பில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மின் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

2009 ஆம் ஆண்டில் வடக்கில் இடம்பெற்ற இறுதிப் போர் முள்ளிவாய்க்காலில் ஏற்படுத்திய மனித அவலங்களை எண்ணிப் பார்க்கின்ற போது நாம் மிகுந்த மன வேதனையும், கவலையும் அடைகின்றோம்.

இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரிய மனித அவலமாகவும் - மனித உரிமை மீறலாகவும் அமைந்துள்ளது. இதற்குக் காரணமான வன்முறைப் போரையும் அதில் ஈடுபாடு காட்டிய சகல தரப்பினரது செயற்பாடுகளையும் வடக்கு முஸ்லிம் மக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

மனித அவலங்களுக்கு போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளனர். இத்தகைய மனித அவலங்களுக்குக் காரணமாகச் செயற்பட்டவர்கள் அனைவருக்கும் எதிராக உரிய முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். 2009 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு நடவடிக்கையானது, மனித அவலங்களை பரந்த வடக்கின் எல்லா பிரதேசங்களிலுமே ஏற்படுத்தியுள்ளன. மனிதப் படுகொலைகள், இரசாயன ஆயுதங்களின் பாவனைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர், நோயுற்றோர் மீதான தாக்குதல்கள் அந்த மக்களின் வாழ்வில் பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

உயிரற்றவர்களாக, ஊனமுற்றோர்களாக, விதவைகளாக, அநாதைகளாக, தீராத நோயாளிகளாக, உறவுகளை இழந்தவர்களாக, வாழ்வாதாரமற்றவர்களாக, வீடற்றவர்களாக அவர்கள் மாறியிருக்கின்றார்கள். இதனைப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் முதலில் ஏற்றுக் கொள்ளுதல் அவசியமாகும்.

முள்ளிவாய்க்கால் மனித அவலத்தை, தமிழ் மக்கள் நினைவு கூருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் என்ற நோக்கில் வடக்கு மாகாண முஸ்லிம் மக்களாகிய நாமும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-ஜ-5)

# முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தோரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்

## இந்து மகா சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் அனைத்து சைவத்தமிழ் மக்களும் பங்கெடுக்க வேண்டும் என்று கோரியுள்ள இந்து மகா சபை உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக மரங்களை பொது இடங்களிலும் வீடுகளிலும் நடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பில் இந்து மகா சபை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த எமது உறவுகளின் ஆத்ம சாந்திக்காக சைவத்தமிழ் மக்கள் அனைவரையும் ஆத்மார்த்தமாக பிரார்த்திக்குமாறு வேண்டி நிற்கின்றோம். இயன்றளவில் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படுகின்ற இடங்களிலோ, ஆலயங்களிலோ அல்லது வீடுகளிலோ தமது பிரார்த்தனையை தீபங்கள் ஏற்றி வழிபாடு மேற்கொள்ளுமாறும், உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக மரங்களை பொது இடங்களிலும் வீடுகளிலும் நடுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது சைவ மகா சபையால் வழமை போன்று சைவத் தமிழர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் தொன்று தொட்டு நடைபெற்று வரும் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், மாங்குளம் சிவஞானசித்தர் பீடத்திலும், குழந்தைவேல் சுவாமி சமாதி சிவாலயத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நெய் தீபம் ஏற்றி சிவனிடம் எமது உறவுகளுக்காக பிரார்த்திக்க விரும்புவோர் இன்று மாலை 5 மணிக்கு இந்த இடங்களில் கலந்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

இதேநேரம் வன்னி, யாழ், கிழக்கு, மலையகம், நாட்டின் இதர பகுதிகளிலும் வலிகளோடும் வாழ்க்கைச் சுமைகளோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கு எம்மாலான வகையில் உதவுவதற்கும் இந்தத் தினத்திலே நாம் அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம் - என்றுள்ளது.

(ந-ஜ-5)

# மே 18 நினைவேந்தல் நிகழ்வை கறுப்பு நாளாகக் கடைப்பிடிக்க

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 18

ஈழத்தமிழர்களின் இன அழிப்புப் படுகொலையின் மே 18 நினைவேந்தல் நிகழ்வைக் கறுப்பு நாளாகக் கடைப்பிடியுங்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இன அழிப்புப் போரினால் கொல்லப்பட்ட ஈழத் தமிழ் மக்களை நினைவு கூரும் நிகழ்வு தமிழ்த் தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை இரண்டு இடங்களில் நடைபெறவுள்ளது.

முள்ளிவாய்க்கால் கிழக்கில் பி.ப. 3.30 மணிக்கும், மட்டக்களப்பு மாணிக்கபுரம் ஆற்றங்கரையில் மு.ப. 10 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் அனைத்து பொதுமக்களும் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட எமது மக்களை நினைவு கூரும் அதேவேளையில், தேவையில்லாத கேளிக்கை நிகழ்வுகளையும், மங்கலகரமான நிகழ்வுகளையும் தவிர்த்து மே 18 நினைவை கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம்.

போர்க்காலத்தில் தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தடை காரணமாக பெருமளவிலான மக்கள் பட்டினிச் சாவுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. எமது உறவுகள் சந்தித்த அந்தத் துயரத்தை நினைவு கூரும் வகையில் அன்றைய நாள் அறுசுவையற்ற கஞ்சியை ஒரு வேளை உணவாக மக்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். - என்று தெரிவித்தார். (ந-ஜ-ரி)

# நினைவேந்தல் நிகழ்வுகளில் அனைவரும் பங்குகொள்க

## யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 18

எமக்காக உயிர் நீத்த அனைத்து தமிழ் உறவுகளையும் நினைவு கூரும் முகமாகவும் அவர்களது ஆத்ம சாந்திக்காகவும், முள்ளிவாய்க்காலில் இன்று நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழ் மக்களின் வரலாற்றில் இன்று ஒரு முக்கிய நாள். தங்கள் இன்னுயிரைத் துறந்த அனைத்து எமது உறவுகளையும் நாம் வணங்க வேண்டிய நாளாகும். எனவே இந்தப் புனிதக் கடமையை நிறைவேற்ற இயலுமானவரை, ஒவ்வொரு வர்த்தக நிலையம் சார்பிலும் குறைந்தது ஒருவராவது இந்த நிகழ்வில் பங்குபற்றி பிரார்த்தனையில் ஈடுபடுமாறு கோருகின்றோம்.- என்றுள்ளது.

(ந-5-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை கோபுரத்து வைரவர் வைகாசிப் பொங்கல் சனியன்று

## நீண்ட காலத்தின் பின்னர் பெருமெடுப்பில்

யாழ்ப்பாணம், மே 18

வேலணை வட கிழக்கு மணியகாரன் வீட்டடி கோபுரத்து வைரவர் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை பெருமெடுப்பில் வெகு விமரிசையாக இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டு பின்னர் மறுசீரமைப்புச் செய்யப்பட்ட கோபுரத்து வைரவர் ஆலயத்தின் பொங்கல் விழா கடந்த சில வருடங்களாக பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இடம்பெற்று வந்தபோதும் இந்த வருடம் அதனை மீண்டும் பழைய நிலையில் பெருமெடுப்பில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று தர்மகர்த்தாவான சமாதான நீதிவான் ப.தேவநாயகம் தெரிவித்தார்.

“போருக்கு முன்னரான காலப்பகுதியில் மிகப் பெரும் கோடை விழாவாக பொங்கல் இடம்பெறுவது வழமை. அது ஒரு கலாசார விழாவாகவும் அமைந்திருக்கும். போரால் மக்கள் இடம்பெயர்ந்து சென்ற பின்னர் ஆலயத்தில் நாளாந்தப் பூசை நிகழ்வுகளை நடத்துவதே பெரும் சவால் என்றாகிவிட்டது. அதனால் பொங்கல் விழாவையும் சிறியளவிலேயே கடந்த சில வருடங்களாக நடத்திவந்தோம். இந்த வருடம் அதனைப் பெருமெடுப்பில் நடத்துவதற்கு வைரவர் அருள்பாலித்துள்ளார். அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன” என்று அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்வின் பின்னர் வேலணைக்கு வெளியே வசிக்கும் மக்கள் பலருக்குப் பொங்கல் பற்றிய விவரங்கள் தெரியாமையால் கடந்த சில வருடங்களாக அவர்களால் பொங்கலில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது என்று தெரிவித்த அறங்காவலர், இந்தத் தடவை அவர்கள் அனைவரும் ஆலயத்துக்கு வருகை தந்து பொங்கல் நிகழ்வில் பங்கேற்பதுடன் வைரவரின் அருளையும் பெற்று உய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (உ)

# கச்சதீவில் திட்டமிட்டபடி புதிய ஆலயம் அமையும்

## யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

கச்சதீவில் புதிய அந்தோனியார் ஆலயம் அமைப்பதற்கு, இந்திய அரசின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. திட்டமிட்டவாறு புதிய ஆலயம் அமைக்கப்படும் - இவ்வாறு யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் தெரிவித்தார்.

கச்சதீவு அந்தோனியார் ஆலய வளாகத்தில் புதிய ஆலயத்துக்கான கட்டடம் அமைப்பது தொடர்பாக தென்னிந்தியாவில் விமர்சனங்கள் எழுந்துவரும் நிலையில், யாழ்.மறைமாவட்ட குருமுதல்வருடன் தொடர்புகொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கச்சதீவு என்பது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இலங்கைக்குச் சொந்தமானது என்று தெரிவித்து இலங்கையரிடம் கையளிக்கப்பட்ட தீவு.

எனவே இந்தத் தீவில் ஆலயம் அமைப்பதற்கு இந்திய அரசிடம் அனுமதி எடுக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை. திட்டமிட்டபடி ஆலயம் அமைக்கப்படும், கச்சதீவில் புதிய ஆலயம் மட்டுமே அமைக்கப்படுகின்றதே தவிர, வேறு எந்த கட்டடங்களும் கட்டப்படவில்லை.

ஆலயத்துக்கான கட்டடம் மட்டுமே அங்கு கடற்படையினரால் அமைக்கப்படுகின்றது. தற்போது உள்ள ஆலயம் 10 அடி அகலமும், 20 அடி நீளமும் கொண்டதாகவே உள்ளது. புதிதாகக் கட்டப்படும் ஆலயம் 70 அடி நீளத்திலும் 30 அடி அகலத்திலும் கட்டப்படுகின்றது. பழைமையான ஆலயத்தை இடித்துப் புதிய ஆலயம் கட்டப்படவில்லை. அந்த ஆலயத்துக்கு அருகிலேயேயே இந்தப் புதிய ஆலயமும் அமைக்கப்படுகின்றது. - என்றார். (ற-ஜ-21)

# கடை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், மே 18

கொட்டும் மழையைப் பயன்படுத்தி, ஈச்சமோட்டைப் பகுதியில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். அங்கு கடை ஒன்றை உடைத்து பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பக்கக் கதவுகளை உடைத்து, உள்ளே சென்ற திருடர்கள் அங்கு இருந்த பெறுமதிமிக்க பொருள்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

பால்மா பைக்கற், பிஸ்கட் வகைகள், அரிசி, சினி, மா மூடைகள் மற்றும் டிஜிற்றல் தராசு போன்றவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர். அதனைவிட இந்தப் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் நுழைந்து திருடர்கள் திருடுவதற்கு முயற்சித்துள்ளனர். வீட்டுக்காரர் விழித்துக் கூக்குரல் போட்டதும் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

வர்த்தக நிலையத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-17)

## மகோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 18

இருபாலை கோப்பாய் கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 2 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (வ-ரி)

# குடும்பஸ்தரை கத்தியால் குத்தி 14 பவுண் நகைகள் கொள்ளை!

## சங்கானையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 18

சங்கானை அம்பிகாபதி வீதியிலுள்ள வீடு ஒன்றினுள் புகுந்த கொள்ளையன் குடும்பஸ்தரைக் கத்தியால் குத்தி 14 பவுண் நிறையுடைய நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளான்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கதவுகளை உடைக்காது வீட்டுக்குள் நூதனமாக உட்புகுந்த கொள்ளையன் அங்கு நித்திரையில் இருந்த 15 வயதுப் பெண்பிள்ளையைப் பிடித்து அச்சுறுத்திய போது அவர் சத்தமிட்டுள்ளார்.

இந்தச் சத்தத்தைக் கேட்ட பெற்றோர் நித்திரையால் எழும்பிய போது அவர்களைக் கத்தி முனையில் அச்சுறுத்தி 4 சங்கிலி, 1 நெக்லஸ், 4 காப்பு, 1 பூட்டுக்காப்பு உட்பட 14 பவுண் நகைகளையும் 24 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஓர் அலைபேசியையும் எடுத்ததோடு வீட்டு உரிமையாளரையும் முதுகில் கத்தியால் குத்திவிட்டுக் கொள்ளை அடித்த பொருள்களுடன் தப்பிச் சென்றுவிட்டான். கத்திக் குத்தில் காயடைந்த வீட்டு உரிமையாளரான எஸ்.ஜீவராஜ் சங்கானை வைத்தியசாலையில் அருகில் உள்ளவர்களால் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அங்கு வந்த பொலிஸார் திருடனால் விட்டுச் செல்லப்பட்ட கத்தி ஒன்றைக் கண்டெடுத்துள்ளனர். அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,29)

# கடும் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகம்



யாழ்ப்பாணம், மே 18

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக பாதிப்புக்கு உள்ளான குடும்பங்களுக்கு சிவன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நேற்று உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

வீரபத்திரர் கோவிலடி சுள்ளித் தெரு (உடுப்பிட்டி) மல்லந்தரை, தூப்புலம் (கோம்பு), இமையாணன் மேற்கு, போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு அவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமான சிவாஜிலிங்கம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பரப்புரைச் செயலாளரும் சிவன் அறக்கட்டளையின் நிறுவுநருமான கணேஸ்வரன் வேலாயுதம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வெளிநாட்டுக்கிளைகளின் இணைப்பாளர் கீரன் நகுலேந்திரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர் மோகன், வல்வை நகர சபையின் முன்னாள் உறுப்பினர் சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-4)

## கஞ்சாவுடன் இருவர் மாதகலில் கைது

மாதகலில் 11 கிலோ 900 கிராம் கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

35, 38 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மாதகல் பகுதியில் உள்ள வீட்டில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (வ-4)

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.8,06,78,320/=
011
2016-05-17
கோடீபதி ஷனிதா
H 03 07 41 74
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 2016-05-17 | வெற்றி வாரம் 1980 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்
20 37 41 52
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ 2,222,740/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 1919

நியத்த ஜய
வெற்றி வாரம் : 462
திகதி : 2016-05-17
வர்ணம் : மஞ்சள்
வாசி தவச
விஷேட வெற்றி இலக்கம்
1 1 4 3
ரூ. 10,000,000
வெற்றி இலக்கங்கள்
24 37 41 47
ஆங்கில எழுத்து
T
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்
011 4 824 824

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் கீழ்க் கொடுக்கப்பட்ட வேலைகளுக்கு வெற்றிடம் உள்ளன.

1. Quantity Surveyor
2. Technical Officer
3. Store Keeper
4. Watcher
5. Office clerk
6. மேசன்
7. தச்சு தொழிலாளர்கள்
8. கம்பி வேலை செய்பவர்கள்(Bar bender)

**Apply with your detailed Biodata to:-**
**Manoharan and Vettivel**

**No.49A, Ambalavanar Road, Ariyalai,**
**Jaffna.**
**email : manokrishna@yahoo.com**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு. அ.கனகரத்தினம்**



மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் உப தலைவரும் ஓய்வு நிலை அதிபரும் சமாதான நீதிவானும் கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின்தலைவரும் கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவைத் தலைவரும் கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமான திரு.அ. கனகரத்தினம் அவர்கள் அண்மையில் **‘சாமஸ்ரீ தேசமானி’** என்னும் உயர் பட்டம் பெற்றதையிட்டு மனமார வாழ்த்துவதோடு மென்மேலும் உயர்ந்த பட்டங்கள் பல பெற்று சகல சௌபாக்கியத்துடன் நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**
**தலைவர் தி.இராசநாயகம், இல்ல நிர்வாகத்தினர், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் , ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

எமது நாட்டின் தலைநகரான கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் கிளினிங் கேட்டரிங், லொன்றி, கிச்சின் போன்ற பகுதிகளுக்கு ஆண், பெண், இருபாலாரும் தேவை. முற்கொடுப்பனவு 25000 - 30000 ரூபா வரை மூன்று மாத காலங்களின் பின்னர் நிரந்தரமாக்கப்படுவதுடன் 45000 - 75000 ரூபா வரை சம்பளம் வழங்கப்படும். வயது எல்லை 18- 40 வரை

075 718 4659, 071 921 5892

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் மூக சீராக்கல் (Consultant Orthodontist)
- மூக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல். (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)


# கடந்தாண்டு ஆஸ்துமா நோயால் 2 ஆயிரத்து 953 பேர் உயிரிழப்பு

கடந்த வருடம் மாத்திரம் ஆஸ்துமா நோயால் 2 ஆயிரத்து 953 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார கல்வி பணியகம் தெரிவித்துள்ளது. ஆஸ்துமா நோயாளர்கள் வைத்தியசாலைகளில் எந்தவொரு சிகிச்சைகளும் பெறாத நிலையில் உயிரிழந்துள்ளனர் என சுகாதார பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

உலக ஆஸ்துமா தினம் நேற்று முன்தினம் கடைப் பிடிக்கப்பட்ட நிலையில் அதில் கலந்துக் கொண்டபோதே சுகாதார பணிப்பாளர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

முறையான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஆஸ்துமாநோயிலிருந்து சுகமடையலாம் என்றும்பணிப்பாளர் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-ஜ-5)


## வருடாந்த பொதுக்கூட்டம்

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த அபிவிருத்தி சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் (01.06.2016) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்துப் பெற்றோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
யா/புனித தெரேசா மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

## தையல் வேலையாள்கள் தேவை

யுக்கி மெசின் தைப்பதற்கு அனுபவ உள்ள ஆண், பெண் வேலையாள்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

மங்களா காட்சியறை
இல. 536 K.K.S வீதி, (மனோகராச் சந்தி) யாழ்ப்பாணம்.
021 222 8367, 077 7286069

## காணவில்லை

திருநெல்வேலியில் உள்ள வீடொன்றில் ஒரிஜினல் ஜேர்மன் செப்பர் (கறுப்பு நிறம் மார்பு மஞ்சள் நிறம்) 4 வயது நிரம்பிய நாய் 2016.05.16 ஆம் திகதியிலிருந்து காணவில்லை. கண்டறிந்தால் தொடர்பு கொள்ளவும்.

077 023 7576


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
## மானிப்பாய் கிராம உபஅலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் : 05**
**ஆதன இலக்கம்: 28 (புதிய இலக்கம்)**
**கல்லுண்டாய் வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு: J/133**

வட்டாரம் 05, கல்லூண்டாய் வீதி, ஆதனஇலக்கம் 28(புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிறை "தூக்குமரத்துக்காடு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 03 குளி 03.79 கொண்ட) இவ்வாதனமானது யாழ்ப்பாணம், சுதுமலை தெற்கு, சாவற்கட்டு சின்னத்தம்பி ஆறுமுகம் பெண் தவமயில் இவர்களால் மகன் ஆறுமுகம் தனஞ்சயன் என்பவருக்கு பிரசித்த நொத்தரிஸ் திரு. மா. தியாகராசா அவர்கள் முகதாவில் 15782 ஆம் இலக்கம் 2014.09.13 ஆம் திகதிய நன்கொடை மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைகோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு. ரி. பாலசுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 0052 இலக்க 2014.04.01 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது **"தூக்குமரத்துக்காடு" நிலப்பரப்பு 03 குளி 03.79** கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஆறுமுகம் தனஞ்சயன் என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**
**மானிப்பாய்.**

(தே/625)(12.6)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பேராசிரியர்.சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை
## " புலமைச்சிரத்தைக்கு உட்படாத தமிழ்க் கவிதைப் பாரம்பரியம் "
## (தனிப்பாடற்றிரட்டினை முன்னிறுத்திய நோக்கு)

பேருரை வழங்குனர் : **கலாநிதி.எஸ்.சிவலிங்கராஜா**
ஓய்வு நிலைப்பேராசிரியர்,
முன்னாள் தலைவர் - தமிழ்த்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இடம் : கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி : 19.05.2016

நேரம் : பிற்பகல் 3.00 மணி

***ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

பதிவாளர்.



## பச்சிலைப்பள்ளி, முகாவில், இயக்கச்சி
## அருள்மிகு திரியாய் அம்பாள் தேவஸ்தான
## திருக்குளிர்த்திப் பொங்கல்விழா
## 2016.05.20 வெள்ளிக்கிழமை

அம்பிகை மெய்யடியார்களே !

இயக்கச்சி, முகாவில், திரியாய் அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல் நிகழும் துர்முகி வருடம் வைகாசித் திங்கள் 7 ஆம் நாள் 2016.05.20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

அன்று பகல், இரவு தொடர்ந்து விசேட அபிசேக ஆராதனைகளும், காவடி, பாற்செம்பு, தீச்சட்டி, கரகம், பறவைக்காவடிகள் போன்ற நேர்த்திக்கடன் நிறைவேற்றல்களும் தொடர்ந்து நீராகாரம், அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறும்.

***குறிப்பு:***

அன்றைய தினம் விசேட போக்குவரத்து ஒழுங்குகள், பாதுகாப்பு, முதலுதவி, சுகாதாரம் பேணல், குடிநீர் வசதி போன்றவை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் திருப்திகரமாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:**
**077 347 4011/ 077 921 8830 / 077 975 4537**

ஆலயத்தின் வளர்ச்சி கருதி அர்ச்சனைப் பொருள்கள் பரிபாலன சபையினரால் விற்பனை செய்யப்படும்.

**முகாவில்,**
**இயக்கச்சி.**

**ஆலய பரிபாலன சபையினர்.**



## வரணி சிட்டிவேரம்
## கண்ணகை
## அம்மன் ஆலயம்
## வருடாந்த அலங்கார
## உற்சவம்

துர்முகி வருஷம் வைகாசித் திங்கள்
10 ஆம் நாள் (23.05.2016)
திங்கட்கிழமை பொங்கல்
உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து
அலங்கார உற்சவம்
நடைபெற அன்னையின்
திருவருள் கூடியுள்ளது.

23.05.2016 திங்கட்கிழமை பொங்கல் (1ஆம் திருவிழா)
04.06.2016 சனிக்கிழமை தேர்த்திருவிழா
05.06.2016 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா

அனைவரும் வருக அன்னையின்
அருள் பெறுக.

**விழாக்காலங்களில் வியாபார நடவடிக்கைக்கான அனுமதிகள் 21.05.2016 சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு வழங்கப்படும்.**

**ஆலய பரிபாலன சபையினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புளொட்டின் தேசிய மாநாடு வவுனியாவில்

வவுனியா,மே 18

ஜனநாயக மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) எட்டாவது தேசிய மாநாடு வவுனியாவில் நடைபெறவுள்ளது என்று கட்சியின் வவுனியாமாவட்ட இணைப்பாளர் க. சந்திரகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியா கோவில்குளம் உமாமகேஸ்வரன் சந்தியில் அமைந்துள்ள ஆதி திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மாநாட்டில் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், அங்கத்தவர்கள் அனைவரும் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து வந்து கலந்துகொள்ளவுள்ளனர்.

அமைப்பின் சர்வதேச கிளைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில், தற்கால அரசியல் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று வவுனியா மாவட்ட இணைப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(ற-ஐ-21)

## கச்சதீவில் உள்ள பழைமை மிக்க தேவாலயம் இடிக்கப்பட மாட்டாது

### கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கச்சதீவில் உள்ள பழைமையான தேவாலயம் இடிக்கப்படமாட்டாது. - இவ்வாறு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜயகுணவர்த்தன தெரிவித்துள்ளார். 'த ஹிந்து' ஆங்கில ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவில் கடற்படைத் தளத்தை இந்திய மத்திய அரசு அமைக்கவுள்ளதுஎன்று வெளியான செய்திகளை அவர் நிராகரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:-

இத்தகைய செய்திகள் அடிப்படையற்றவை. இங்கு புதிய தேவாலயம் கட்டும் பணிகளை மாத்திரம் கடற்படை மேற்கொள்கிறது.

இந்தியாவின் தலையீடு காரணமாக கட்டுமானப் பணிகள் நிறுத்தப்படவில்லை. மோசமான கால நிலையால் தான் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. காலநிலை சீரானதும், விரைவில் இந்தப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும். தற்போதுள்ள தேவாலயம் 1901 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அது ஒரு புராதனச் சின்னம். அதற்குக் கடற்படை பாதிப்பு எதுவும் செய்யாது - என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

## மின்தடை அறிவிப்பு

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை பின்வரும் இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, வெற்றிலைக் கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு, கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் குட்செட்வீதி பிரதேசம், கோவில்குளம் சிவன் கோயிலடி பிரதேசம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் அரிப்பு சவேரியார் குளம், வெள்ளி மலை, சி.இ.சி.பி. ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி

# முருகன் தேவஸ்தானம்

## 7 ஆம் திருவிழா கைலாயவாகனம்

## இன்று (18.05.2016) புதன்கிழமை

## விசேட தவில் நாதஸ்வர கச்சேரி

இன்று (18.05.2016) புதன்கிழமை ஸ்ரீஞானப் பழனி தேவஸ்தான 7 ஆம் திருவிழா கைலாயவாகனத் திருவிழாவில் இலங்கை, இந்திய தவில் நாதஸ்வரகச்சேரி இடம் பெறும்.

- ஆலய ஆஸ்தான வித்துவான் இருபாலை கதிரமலை குழுவினர்
- வட்டுக்கோட்டை ராமநாதன் புதல்வர்கள் இவர்களுடன் தமிழகத்திலிருந்து வருகை தந்த
- கலைமாமணி ஷேக் மெகபூர் சுபானி
- கலைமாமணி ஸ்ரீமதி கலீஷாபி மெகபூர்
- நாதஸ்வர வித்துவான் S. பெரோஸ்பாபு
- காரைக்குடி தவில் வித்துவான் கல்யாணசுந்தரம்
- லய ஞானபாலன் ஈழநல்லூர் P.S. செந்தில்நாதன்

ஆகியோரின் நாதஸ்வர இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

7 ஆம் திருவிழா உபயகாரர்கள்

(c2016)(13.17.18)



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி யின்
60வது பிறந்த நாளை முன்னிட்டு
சுவாமி சத்யோஜாதாஜி யின்
மகா சத்சங்கம்



வாழும் கலையின் இசைக்கலைஞர்
முருகதாஸ்ஜி யின் இசைச் சங்கமம்



காலம்: பி.ப. 5.00 மணி
19.05.2015, வியாழக்கிழமை
இடம்: இந்து சமயப் பேரவை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
வாழும் கலை குடும்பம்
யாழ்ப்பாணம்

# விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வமங்கலகரமான
துர்முகி வருஷம் வைகாசி மாதம் 5 ஆம் நாள் (18.05.2016) புதன்கிழமை
அத்த நட்சத்திரமும் துவாதசித் திதியும் சித்தயோகமும் பவகரணம் கூடிய சுபயோக சுபதினத்தில்
காலை 8.24 முதல் 9.41 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபவேளையில்

சிவஸ்ரீ க.சாமிநாதக் குருக்களின் பௌஹித்திரனும்
சிவஸ்ரீ ச. பஞ்சாட்சரக் குருக்களின் தௌஹித்திரனும்
எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய
**சிரஞ்சீவ் கஜானந்தக் குருக்கள்**
என்கின்ற வரனுக்கு



சிவஸ்ரீ வைத்திலிங்க ஐயரின் பௌஹித்திரியும்
சிவஸ்ரீ இரத்தினசபாபதி ஐயரின் தௌஹித்திரியும்
எமது கனிஷ்ட புத்திரியுமாகிய
**சௌபாக்கியவதி கீர்த்தனா**
எனும் வதுவையை

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் திருவருளுடனும் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியின் திருவருட் துணையுடனும்பெரியோர்களின் நல்லாசியுடனும் கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய நிச்சயித்து மேற்படி முகூர்த்தத்தில் "தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் கல்யாண மண்டபத்தில்" நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்

**வரவேற்புபசாரம்:** 19.05.2016 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

முக்கிய குறிப்பு: அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்களும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

வரவேற்பாளர்கள்: மதிமுகன் குருக்கள்
வாமநேசன் குருக்கள்
சிவஸ்ரீ பஞ்சாட்சர விநாயக மூர்த்திக்குருக்கள்
(P.V.M) குருக்கள்)
ஸ்ரீமதி மனோன்மணி தம்பதிகள்
இலங்கை வங்கி அருகில்
யாழ். வீதி, மானிப்பாய்
தொ.பே.077 711 1482

வரவேற்பாளர்கள்: பிரதீபன், தீபா, கஸ்தூரி,
கமலாம்பிகை
சிவஸ்ரீ சி.பேரம்பலநாதர் ஐயா,
பே.யோகேஸ்வரி அம்மா,
எல்லை ஒழுங்கை, கற்கோவளம்,
பருத்தித்துறை.
தொ.பே.077 904 7587

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துக்கு விருது

சாவகச்சேரி,மே 18
2015 -2016 காலப் பகுதியில் சிறந்த செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காக, சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பு.டினேஸ்குமார் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநரால் சிறந்த தலைவருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
நடப்பு வருட காலத்தில் சிறந்த சேவைகளை ஆற்றிய லயன்ஸ் கழகப் பிரமுகர்களைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற போது இந்த விருது வழங்கப்பட்டது.
நடப்பு வருட காலத்தில் சிறந்த சேவைகளை வழங்கியமைக்காக சாவகச்சேரி லயன்ஸ் கழகம் , ஏழு விருதுகளைப் பெற்று யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களுக்கிடையில் முதலிடத்தையும், சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட நிலையில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது என கழகத்தின் செயற்பாட்டுத் தலைவர் லயன் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஈ-ஜ-9)

ஏழாம் ஆண்டில் நீங்காத நினைவுகள்

அமரர் சண்முகராசா நல்லநாதன்
(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தரிசும்
வேலணை மேற்கு, வேலணை)



எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
எங்கள் இதயத்தில்
குடியிருக்கும்உங்கள் உயிர் மூச்சு
எங்கள் வாழ்க்கையை
நடத்தும் வழிகாட்டியாக
இருந்து கொண்டிருக்கும்
நிஜ வாழ்க்கையில் நீங்கள்
இல்லாது இருந்தாலும்
எங்களுடன் சேர்ந்து
எங்களின் உணர்வுகளாக நீங்கள்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்
வாழ்ந்த காலத்தில்
நினைத்தது எவ்வளவு
நடந்தது என்ன இருந்தும் எல்லாம்
இறைவனின் நியதி என மனத்தை
ஆற்றி வாழ்ந்து
கொண்டிருக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
மனைவி, மக்கள், மருமகள் ,
குடும்பத்தினர்.

மலர்வு 17.07.1950
உதிர்வு 18.05.2009

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 30 . 09 . 1947



உதிர்வு 19 . 04 . 2016

மாதகலைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் வினாசித்தம்பி சச்சிதானந்தம்
(அண்ணை, மாமா)

கடந்த 19.04.2016 சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு வினாசித்தம்பி சச்சிதானந்தம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (19.05.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இல.40, 6C பண்ணை, கனகபுரம்,
கிளிநொச்சி.

ச. அருந்தவம் (மனைவி)
மற்றும் குடும்பத்தினர்.

# போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் மிருசுவில் தெற்கு பழைய வாய்க்கால் வீதி

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 18
போர்க்காலத்தில் மண் அரண் அமைத்து இராணுவத்தால் பயன்படுத்தி வந்த மிருசுவில் தெற்கு பழைய வாய்க்கால் வீதி தற்போது புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது. கற்கள் பெயர்க்கப்பட்ட நிலையில் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு இந்த வீதி காணப் படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மக்கள் மீளக்குடியமர்ந்ததன் பின்னர் இராணுவத்தால் போடப்பட்ட மண் அரணை வெட்டி அகற்றிய போது, அந்த வீதி பெரும் கிடங்குகளுடனும் கற்கள் வெளியே தெரியும் நிலையிலும் உள்ளது. தினமும் பாடசாலை மாணவர் கள், அரச அலுவலர்கள், பொது மக்கள் எனப் பல பேர் இந்த வீதியைப் பாவித்து வருகின்றனர். கற்கள் பெயர்க்கப்பட்டு ஒரு பகுதி மணலாகவும் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் அவற்றால் விபத்தைச் சந்தித்து வருகின்றனர். உரிய அதிகாரிகளிடம் இது பற்றிப் பேசியும் எந்தவிதமான தீர்வையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பிரதேசசபையோ ஒவ்வொரு வருடமும் நிதி இல்லை என்ற சாட்டையே முன்வைக்கிறது. ஆயினும் கிராமத்துக்கு ஒருமில்லியன் என்ற திட்டத்தில் கூட எமது வீதி இணைக்கப்படவில்லை. அரச அதிகாரிகளால் எமது வீதி வந்து பார்வையிடப்பட்டும் இந்த வீதிக்கு இன்னமும் விமோசனம் கிடைக்கவில்லை – என்று தெரிவித்தனர்.
இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளரிடம் கேட்ட போது–
இந்த வீதி தொடர்பான எந்த விதமான முறைப்பாடும் என்னிடம் கிடைக்கவில்லை. தற்பொழுது இந்தப் பிரதேச சபைக்கு நான் புதிதாகப் பதவியேற்று மூன்று நாள்களே ஆகின்றன. இது சம்பந்தமாக ஏற்கனவே முறைப்பாடு கிடைத்திருந்தால் அதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றார். (ஈ-ஜ-ரி)

# தமிழீழத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கை இந்தியாவில் ஆரம்பம்

## இப்படிக் கூறுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மே 18
தமிழீழத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக, புதிய அர சமைப்பின் ஊடாக வடக்கு - கிழக்குக்குத் தன்னாட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை நரேந்திர மோடி, மைத்திரிபால சிறிசேன, சம்பந்தர் ஆகிய மும்மூர்த்திகள் மூலம் இந்தியாவில் அரங்கேற்றப்பட்டுள்ளது.– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதுகுறித்து அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:-
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதிக்கும், சம்பந்தனுக்கும் ஒரே நேரத்தில் இந்தியாவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அத்தோடு பேச்சுக்குகளும் நடத்தப்பட்டுள்ளன. அனைத்து நிகழ்ச்சி நிரல்களிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முயற்சிக்கும் வட – கிழக்குக்குத் தன்னாட்சியைப் பெற்றுக்கொள்ளும் விடயமே முன்னெடுக்கப்படுகிறது.
இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தன்னாட்சியை வழங்க இணங்கியுள்ளனர். இது சம்பந்தனுக்குக் கிடைத்த வெற்றியாகும். புதிய அரசமைப்பில் தன்னாட்சி உள்வாங்கப்படவுள்ளது.
தன்னாட்சியை இலங்கையின் அரசமைப்பு ரீதியாகப் பெற்றுக் கொள்ளும் சம்பந்தன் அதன் பின்னர் ஐ.நா.வின் ஆதரவுடன் தனித் தமிழீழத்துக்கான தனது நிகழ்வுகளை முன்னெடுப்பார். அரசமைப்பு ரீதியாக தன்னாட்சி வழங்கப்படும் போது, ஐ.நா. அதனைப் பயன்படுத்தி தமிழீழத்துக்கான அங்கீகாரத்தை வழங்கும்.27 ஆயிரம் படையினர் தங்களது உயிர்களை அர்ப்பணித்து பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்துப் பிரிவினையைத் தடுத்தனர். ஆனால் இன்று மைத்திரி, ரணில் அரசு படையினரைக் காட்டிக் கொடுத்து புலிப் பயங்கரவாதிகளின் தேவைகளை நிறைவேற்றுகின்றது.
ஆயுதங்களுடன் தனித் தமிழீழத்தைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சி தோல்வியடைந்த நிலையில், இன்று அரசமைப்பு ரீதியாக ஐ.நா.வின் உதவியுடன் அதனை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சி சம்பந்தனால் முன்னெடுக்கப்படுகிறது. இலங்கையில் விக்கினேஸ்வரன் அதற்கான அடிப்படை நடவடிக்கைகளைப் படிப்படியாக முன்னெடுக்கின்றார். மோடி மறுபுறம் தனது நாடகத்தை அரங்கேற்றுகிறார். இதனை நாம் ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்பதாகவே சொன்னோம். இன்று நாம் சொன்னவை அனைத்தும் உண்மையாகிக் கொண்டிருக்கின்றன – என்று தெரிவித்துள்ளார். (ஈ-ஜ-5)

3 ஆம் வருட நினைவலைகள்



அமரர்
கந்தையா
முத்துக்குமாரசாமி
(ஓய்வுநிலை தபால் அதிபர்)
அன்னை மடியில்
17.03.1935
ஆண்டவன் அரவணைப்பில்
22.05.2013
திதி: துவாதசி
(18.05.2016)
புதன்கிழமை

இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும்
என்றும் எம் மனங்களை விட்டுப் பிரியாமல்
எமது நினைவில் வாழும் எம் பாசம்
நிறை பொக்கிஷமே!
எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும்
நாள்தோறும் உங்கள் நினைவுகள் எங்களுடனே!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
அன்பு உள்ளங்கள்.

மனைவி, சகோதரர்கள்,
உறவினர்கள்.
ஊரெழு மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்க ஏற்பாடு

கொழும்பு, மே 18

மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் முடக்கப்பட்ட - கொல்லப்பட்ட - அவயவங்கள் இழக்கச் செய்யப்பட்ட - முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலம் நிகழ்ந்து ஏழு ஆண்டுகள் இன்றுடன் முடிவடைகின்றன.

தமிழினத்தின் குருதிக்கறை படிந்த இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகப் பகுதிகள் எங்கும் பெரும் உணர்வெழுச்சியுடன் இன்று முன்னெடுக்கப் படவுள்ளன. அதேபோன்று புலம்பெயர் தேசத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப் படவுள்ளன என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

**ஆஸ்திரேலியா**

ஆஸ்திரேலியாவில் விக்ரோரியா தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று மாலை 6.30 மணிக்கு (ஆஸ்திரேலிய நேரப்படி) நடைபெறவுள்ளன.

நினைவேந்தலுக்கான அழைப்பை விடுத்துள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடக அறிக்கையில்–

சுடர் விட்டுப் பிரகாசித்த எமது தாய் நிலம், புதிய நூற்றாண்டின் கொடிய இனவழிப்பின் சாட்சியாய், அழிவுகளையும் அவலங்களையும் சந்தித்து ஏழாண்டுகள் உருண்டோடிவிட்டன.

> இலங்கை அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழின அழிப்பை தடுத்து நிறுத்தி, நீதியைப் பெற்றுத் தரவும், சர்வதேச விசாரணையை முன்னெடுக்கவும், தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைகளை ஏற்றுக் கொள்ளக் கோரியும் நடைபெறவுள்ள கவனவீர்ப்பு நிகழ்வில், வரலாற்றுக் கடமையை உணர்ந்து அனைத்து தமிழ் மக்களும் கலந்து கொள்ள வேண்டும்.

விடுதலைக்காய் போராடிய போராளிகளும், தேசத்தின் மக்களாய் எம்மண்ணோடு வாழ்ந்த எமது உறவுகளுமென, நிறைந்த எமது தாயகம் இனவாதப்படைகளின் கொடிய போராயுதங்களின் மூலம் மனிதாபிமானமற்ற போரில் சிதறடிக்கப்பட்டது.

ஈழத்தில், தமிழினத்தின் இருப்பை அழிப்பதிலேயே, காலம்காலமாய்க் குறியாயிருந்த சிங்கள தேசத்தின் படைகள், முள்ளிவாய்க்காலில் அதன் உச்சக்கட்ட இனவழிப்பை நிகழ்த்தின.

எனினும் மீண்டும் எழுவோம் என்ற நம்பிக்கையுடன், இந்தக் கொடிய போரில் இழந்துபோன எம்முறவுகளை நினைவில் ஏந்தி, உலகப்பரப்பெங்கும் தமிழர் வாழும் தேசங்களில் மே மாதம் 18 ஆம் நாளை "தமிழர் இனவழிப்பு நினைவு நாள் என்று நினைவு கூரப்படுகின்றது.

எமது இனத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்பை நினைவு கூரும் இந்த நிகழ்வில், தமிழர்கள் அனைவரும் அணிதிரண்டு பங்கேற்குமாறு அன்புடனும், உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தஞ்சாவூர் - தமிழ்நாடு**

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி ஈழத்தமிழ் மக்களை நினைவு கூரும் வணக்க நிகழ்வு தஞ்சை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

**பிரிட்டன்**

பிரிட்டன் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள், கடந்த ஒரு வாரமாக இடம்பெற்று வருகின்றன. இதன் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று இடம் பெறவுள்ளன. இதே வேளை – நினைவேந்தலை முன்னிட்டு குருதித்தான மும்இடம்பெற்று வருகின்றது.

**சுவிஸ்**

நினைவேந்தல் நிகழ்வு இன்று பி.ப. 2 மணிக்கு சுவிஸ் நாடாளுமன்றத்தின் முன்பாக இடம் பெறவுள்ளது. இதனை சுவிஸ் ஈழத் தமிழரவை, சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பு, சுவிஸ் தமிழ் பெண்கள் அமைப்பு, அக்கினிப் பறவைகள் அமைப்பு என்பவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

**ஐரோப்பா**

ஐரோப்பிய தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 4.30 மணிக்கு, ஐரோப்பிய ஆலோசனைச் சபை முன்றிலில் நினைவேந்தல் நிகழ்வு நடை பெறவுள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்–

இலங்கை அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழின அழிப்பை தடுத்து நிறுத்தி, நீதியைப் பெற்றுத் தரவும், சர்வதேச விசாரணையை முன்னெடுக்கவும், தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைகளை ஏற்றுக்கொள்ளக் கோரியும் நடைபெறவுள்ள கவனவீர்ப்பு நிகழ்வில், வரலாற்றுக் கடமையை உணர்ந்து அனைத்து தமிழ் மக்களும் கலந்து கொள்ள வேண்டும்– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-5)

### விழிப்புணர்வு கருத்தரங்கு

சாவகச்சேரி நகர்ப் பிரிவு மக்களுக்கான எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள மண்டபமொன்றில் நடத்தப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலக அலுவலர்கள் இதில் கலந்து கொண்டு பாலியல் நோய்கள் தொடர்பான கருத்துக்களை வழங்கினர்.

எதிர்வரும் ஜூன் 28 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ள பால்நிலை நோய் பரிசோதனை தொடர்பான விழிப்புணர்வு அறிவுறுத்தல்கள் இதன் போது வழங்கப்பட்டன.

இவ்வாறான கருத்தரங்குகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் நடத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)




பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200, மோட்டார் சைக்கிள் காட்சியறை : 195, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ:011-7607450.
மட்டக்களப்பு. தொ.பே:065-7607200.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# போரால் அதிகம் பாதிக்கப்பட்டபோதும் பெண்கள் சுயதொழிலில் முன்னேற்றம்

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மே 18

நாட்டில் இடம்பெற்ற போரால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. அவர்கள் குடும்பங்களுக்குத் தலைமை தாங்குவதால், சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளனர்.

குறிப்பாக பால் உற்பத்திச் செயற்பாடுகளில் 41 வீதமான உற்பத்தியில் பெண்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். இவற்றை விட வங்கிகளில் கடன் எடுப்போரில், 99 வீதமான பெண்கள் கடனை மீளச் செலுத்துகின்றனர்.- இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலக தரிசன நிறுவனத்தினால் நியூசிலாந்து நாட்டு நிதியுதவியுடன் முள்ளியவளையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பால் குளிரூட்டும் நிலையம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமக்குப் போசாக்கையும், ஊட்டச் சத்தையும் வழங்குகின்ற, தூய பசும்பாலை பதனிட்டு குளிரூட்டி வடபகுதியிலுள்ள ஏனைய பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கக் கூடிய ஒரு தொழில்நுட்ப அமைப்பைக் கொண்ட பால் பதனிடும் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து நாடு பால் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்ற உலக நாடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. பால் உற்பத்தியில் மிகப்பெரிய அளவில் ஈடுபடுகின்ற அந்த நாட்டின் தொழில்நுட்பத்தை எமது பகுதியில் உள்ள, முக்கியமாக போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு, தற்பொழுது ஓரளவு தம்மை சுதா கரித்துக் கொண்டிருக்கக் கூடிய வன்னி மக்களுக்கு வழங்குவது மிகவும் பிரயோசனமாக இருக் கும்.

அந்தப் பகுதியில் கிடைக்கப்பெறும் நாளாந்த தேவைக்கு அதிகமான பாலை அவர்களிடமிருந்து பெற்று பதனிடுவதற்கும், அவற்றை வடபகுதியின் ஏனைய பிரதேசங்களின் பால் தேவையுடைய இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் ஏற்ற வகையில் இந்த நிலையம் அமைந்துள்ளது.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் வேள்ட் கென்சென் நிறுவனம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பணியாற்றி வருகின்றது.

வடபகுதியில் இடம் பெற்ற கடுமையான போரால் இவர்களின் சேவைகள் தடங்கலுற்றிருந்த நிலையில், 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 2012ஆம் ஆண்டு தொடக்கம் முல்லைத்தீவு பகுதியிலுள்ள பாற் பண்ணையாளர்களுக்கு பசுக்களை வழங்குதல், பால் உற்பத்தியை அதிகரிக்க ஆலோசனைகளை வழங்குதல் போன்ற பல வழிகளில் உதவி ஒத்தாசைகளை வேள்ட் கென்சென் நிறுவனம் வழங்குகின்றது.

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்தப் பால் பதனிடும் நிலையத்தில் பதினையாயிரம் லீற்றர் வரையான பாலைச் சேகரித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. ஒவ்வொரு குளிரூட்டித் தாங்கிகளிலும் இரண்டாயிரத்து ஐந்நூறு லீற்றர் வீதம் பாலைச் சேமித்து வைக்கவும் குளிரூட்டவும் ஆறு தாங்கிகளை அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் வன்னிப் பகுதியில் மாதாந்த மேலதிகப் பால் சேகரிப்பின் அளவு கிட்டத்தட்ட 4 ஆயிரம் லீற்றர் வரை மட்டுமே காணப்பட்ட போதிலும், 2015 இல் இதன் அளவானது ஒரு லட்சத்து 70 ஆயிரம் லீற்றர் வரை அதிகரித்துள்ளது. ஆரம்பத்தில் 8 பண்ணையாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பால் உற்பத்தி இன்று பல மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் முதலாம் கட்ட நடவடிக்கையாக பரந்தன் சந்தியிலிருந்து, முல்லைத்தீவு வரையான பண்ணையாளர்களின் பாலுற்பத்தியை பெருக்குவதற்கான உதவிகளையும், தொழில்நுட்ப அறிவுரைகளையும் வழங்கியிருந்தார்கள்.

அதேபோன்று முல்லைத்தீவில் இருந்து மாங்குளம் வரையான இரண்டாவது பிரதான வீதியின் இருமருங்கிலும் உள்ள பண்ணையாளர்களை ஊக்குவிக்கின்றனர்.

இந்தச் செயற்பாடுகளின் மூலம் முல்லைத்தீவில் இருந்து மாங்குளம் வரை பெறப்படுகின்ற மேலதிக பாலுற்பத்திகளை வவுனியா நகரம் வரை விநியோகிப்பதற்கும், அதே போன்று முல்லைத்தீவிலிருந்து பரந்தன் வரையான உற்பத்திகளை யாழ்ப்பாணம் வரை விநியோகிப்பதற்குமான திட்டங்களை முன்னெடுத்துள்ளார்கள்.

இதன் மூலம் பாலுற்பத்தியாளர்களின் மாதாந்த வருமானம் இலங்கை ரூபா மதிப்பில் 2 ஆயிரம் ரூபாவிலிருந்து 12 ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் 2026 ஆம் ஆண்டு வரை திட்டமிடப்பட்டுள்ளதுடன் 2 ஆம், 3 ஆம் கட்டங்களில் பாலுற்பத்தி விஸ்தரிப்பை வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களில் மேலும் ஒன்பது பிரதேசங்களில் விரிவுபடுத்தப்பட இருப்பதுடன், நேரடி உற்பத்தித் தேவைகளுக்கு அதிகமான பாலைப் பயன்படுத்தி ஐஸ்கிறீம், யோகட் மற்றும் இதர பாலுற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதற்கு உதவிகள் செய்யவும் உள்ளார்கள்.-என்றார். (ற-ஐ-ரி)

# நட்ட ஈடுகள் வழங்குவது தொடர்பில் மன்னார் மீனவருடன் கலந்துரையாடல்



மன்னார், மே 18

மன்னார் பேசாலைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை வீசிய கடுங் காற்றுடன் கூடிய மழையால் சேதமடைந்த படகுகள் மற்றும் மீனவர்களுக்கான நட்டஈட்டைப் பெற்று கொடுப்பது தொடர்பான அவசர கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாலை பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள திடீர் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள கடும் காற்றுடன் கூடிய மழையால் மாவட்டத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை அதிகாலை வீசிய கடும் காற்றால் மன்னார் பேசாலைக் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெரிய படகுகள் பல காற்றால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

47 பெரிய படகுகள் கற்றால் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் 30 படகுகள் பலத்த சேதங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனினும் 17 படகுகள் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை அதனால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மீனவர்களால் தெரிவிக் கப்பட்டிருந்தது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக வடமாகாண முதலமைச்சர், மீன்பிடி அமைச்சர்களினூடாக உடனடியாக நட்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பது என மாகாண சபை உறுப்பினர் சிராய்வா உட்பட கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களால் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் மீனவர்களின் பாதிப்புக்கள் குறித்து உரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

குறித்த அவசர கலந்துரையாடலில் மன்னார் பிரதேச செய லர் கே.எஸ்.வசந்தகுமார், இடர் முகாமைத்துவ பிரிவின் மாவட்ட இணைப்பாளர் முஹமட் றியாஸ், பேசாலை பங்குத் தந்தை பெனோ அலெக் சாண்டர் சில்வா, பேசாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஏனைய பலர் கலந்துகொண்டனர். (ற-ஐ-5இ)

# ஆசிரிய கலாசாலைக்கு இம்முறை 440 பேர் தெரிவு

அச்சுவேலி, மே 18

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு 2016 மற்றும் 2017 கல்வியாண்டுக்கான ஆசிரிய பயிற்சிக்கு 440 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு கல்வி அமைச்சு ஆசிரியர் கல்விப் பிரிவில் நடைபெற்று பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ஆரம்பக்கல்வி பாடத்துறைக்கு 288 ஆசிரியர்கள், கிறிஸ்தவப் பாடத்துறைக்கு 54 ஆசிரியர்கள், சங்கீதப் பாடத்துறைக்கு 40 ஆசிரியர்கள், வர்த்தகவியல் பாடத்துறைக்கு 13 ஆசிரியர்கள், விசேட கல்வி பாடத்துறைக்கு 4 ஆசிரியர்கள், உற்கல்வி பாடத்துறைக்கு 41 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மே 30 ஆம் திகதி ஆசிரிய கலாசாலையில் பதிவுகளை மேற்கொண்டு பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள வேண்டும். பயிற்சி ஜூன் முதல் வாரத்தில் ஆரம்பமமாகவுள்ளது.

இந்த வருடம் ஆசிரிய பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் 85 வீதத்துக்கு மேற்பட்டவர்கள், மலையகத்தில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்கள் எனவும் தெரிவிக்கப்புட்டுள்ளது. (ற-ஐ-11)



வடக்கு மாகாண கால்நடை அமைச்சால், சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட விசேட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள் நேற்று முன்தினம் 30 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இந்தக் கோழிக் குஞ்சுகள் அச்சுவேலி கைத் தொழில் பேட்டையில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும். சாவகச்சேரி பிரதேச கால்நடை வைத்தியர் ஜீ.இரகுநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கினார். இந்தத் திட்டத்தில் 41 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும், அடுத்த வாரம் ஏனையோருக்கும் கோழிக்குஞ்சுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 12,000 குடும்பங்கள் போசாக்கற்ற நிலையில்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 ஆயிரத்து 932 குடும்பங்கள் போசாக்கற்ற நிலையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்களின் போசாக்கற்ற நிலைமையை போக்கும் செயற்றிட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. -இவ்வாறு யாழ்.மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

குடாநாட்டில் உள்ள போசாக்கற்ற குடும்பங்களை இனம் காணும் விசேட வேலைத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதில் 12 ஆயிரத்து 932 குடும்பங்கள் போசாக்கு அற்ற நிலையில் உள்ளமை கண்டறியப்பட்டது.

> அடையாளப்படுத்தப்பட்ட குடும்பங் களுக்கு சமுர்த்தி மற்றும் ஏனைய வாழ்வாதார உதவித்திட்டங்களில் முன்னுரிமை வழங்கி அவர்கள் முன்னேற்றம் அடைகின்றனரா என்று அவதானிக்கப்படும். இந்தச் செயல்திட்டத்தின் மூலம் மாவட்ட மக்களின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்கு வினைத்திறனான செயற்திட்ட மூடாக அனைத்து தரப்பினரும் செயல்பட வேண்டும்

அவ்வாறு இனம் கானப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி போசாக்கை வளப்படுத்தும் நோக்கில் நேற்று யாழ்.ம்ாவட்ட செயலகத்தில் தேசிய போசாக்கு நிகழ்ச்சித் திட்ட மாவட்டக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர்-
அடையாளப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு சமுர்த்தி மற்றும் ஏனைய வாழ்வாதார உதவித் திட்டங்களில் முன்னுரிமை வழங்கி அவர்கள் முன்னேற்றம் அடைகின்றனரா என்று அவ தானிக்கப்படும்.

இந்தச் செயல்திட்டத்தின் மூலம் மாவட்ட மக்களின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்கு வினைத்திறனான செயற்றிட்டமூடாக அனைத்துத் தரப்பினரும் செயல்பட வேண்டும்.-என்றார்.

நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் பா.செந்தில்நந்தனன், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் கே.நந்தகுமரன், பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் யாழ் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
(ற-ஜ-101)

### உரிமை கோரப்படாத வாகனங்களை பொறுப்பேற்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள் மற்றும் உழவு இயந்திரம் என்பவற்றை உரிமை கோரிப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்ட எப்.எம்.ஜி. 0601009 இலக்க 49 சிசி வர்க்க மோட்டார் சைக்கிளும், சி.இ.311664792394 இலக்கமுடைய உழவு இயந்திரம்மற்றும்பதிவுசெய்யப்படாத உழவு இயந்திரத்தின் பெட்டி ஆகியவை மன்றில் உள்ளன.

இந்த வாகனங்களுக்குரிய உரிமையாளர்கள் அலுவலக நேரங்களில் ஆறு மாத காலப் பகுதிக்குள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து வாகனங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)

### சமூக சேவைகள் அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் மாற்றம்

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் நேற்றுத் தொடக்கம் மாற்றப்பட்டுள்ளது. அலுவலக நாள்களில் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் 021 -228 -3363 என்ற இலக்கத் துடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

### கதிர்காமத்துக்கு பாதயாத்திரை

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு அடியார்கள் பாதயாத்திரை செல்லவுள்ளனர்.

தி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பாதயாத்திரையானது 25 ஆம் திகதி புதன்கிழமை நல்லூர் ஆலயத்தைச் சென்றடைந்து, அன்றிரவே சன்னதி முருகன் ஆலயத்துக்குச் சென்று, அங்கிருந்து 26 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 4 மணிக்கு மீண்டும் கதிர்காமம் நோக்கி பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

வற்றாப்பளை அம்மன் ஆலயம், திருகோணமலை லக்சுமி நாராயணர் ஆலயம், திருக்கோணேஸ்வரம், வெருகல் முருகன் ஆலயம், மயிலம்பாவெளி காமாட்சி அம்மன் ஆலயம், மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், திருக்கோயில் முருகன் ஆலயம், பாணமை விநாயகர் ஆலயம், உகந்தை முருகன் ஆலயம், செல்லக்கதிர்காமம் ஊடாக எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள கொடியேற்றத்துக்கு முன்னதாக கதிர்காமத்தைச் சென்றடையவுள்ளது.

யாத்திரையில் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் மேற்படி ஆலயங்களில் இருந்தும் யாத்திரையில் இணைந்துகொள்ள முடியும்என அறிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஜ-ரி)

## பாடசாலைச் சிறுமி துஷ்பிரயோகம்: 64 வயது முதியவர் விளக்கமறியலில்

வவுனியா, மே 18
பாடசாலை மாணவியான 11 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, வவுனியா பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 64 வயதுடைய முதியவரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா கலாபோவஸ்வெள பிரதேசத்தில் வசித்து வந்த சிறுமி அயல் வீட்டுக்குச் சென்றபோது அங்கிருந்த முதியவரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுமியின் உறவினர்களால் நேற்று முன்தினம் காலை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்தே குறித்த பகுதிக்கு சென்ற பொலிஸார், அயல் வீட்டில் வசித்து வரும் 64 வயதுடைய குறித்த முதியவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில், வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 64 வயதுடைய அயல் வீட்டு முதியவர் நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது வழக்கை விசாரணை செய்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தார்.

சிறுமி தற்போது வவுனியா வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்று வருகின்றார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-ஜ-21,402)



வடமராட்சி வலயப் பாடசாலைகளிலுள்ள உடற்கல்வி ஆசிரியர்களுக்கான யோகா பயிற்சி வகுப்பு நேற்று வடமராட்சி வலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி நெறியில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் யோகா பயிற்றுவிப்பாளருமான எஸ். சூரியகுமார் பயிற்சிகளை வழங்கினார். [illegible]

## கஞ்சாப் பொதிகளுடன் மன்னாரில் ஒருவர் கைது



மன்னார் இலுப்பைக்கடவையில் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டுள்ளன என்றும், அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் ஜட்டவரவின் பணிப்புரைக்கு அமைவாக, மன்னார் பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொறுப்பதிகாரி அஜந்த றொற்றிக்கோவின் ஆலோசனையின்படி மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர்கள் ஆகியோர் கஞ்சாப்பொதிகளை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சாப்பொதிகள் 5 கிலோ 450 கிராம் நிறை கொண்டவை எனவும், அவற்றின் பெறுமதி 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், விசாரணைகளின் பின் குறித்த நபர் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஜ-4,56)

## வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 61 வேலைத்திட்டங்களுக்கு அனுமதி

அச்சுவேலி, மே 18
வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் கிராமத்துக்கு ஒரு மில்லியன்ரூபா அபிவிருத்திவேலைத் திட்டத்தின் கீழ் 61 வேலைத்திட்டங்களுக்கு அனுமதி கிடைத்துள் ளது.

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவிலும், கிராம அலுவலர் பிரிவுக்கு ஒரு மில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 61 வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

கிராம அலுவலர் பிரிவு வாரியாக செயற்படும் பொது அமைப்புக்களின் முன்னுரிமை விருப்பத்தின் அடிப்படையில் இந்த வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை பிரிவினைவாதிகளாக்கி ஓரம் கட்டுவதைக் கைவிட வேண்டும்

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 18
போரில் எமது சகோதர இனத்தவரான தமிழர்களைக் கொன்று விட்டு நாம் வெற்றிவிழாக் கொண்டாட முடியாது. விடுதலைப் புலிகள் என்றாலும் அவர்களும் இலங்கையர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. சிங்களப் போர் வெற்றி விழா எனக் கூறி மீண்டும் தமிழர்களைப் பிரிவினைவாதிகளாக்கி அவர்களை ஓரம் கட்டும் செயற்பாடுகளை கைவிட வேண்டும். - இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

போரில் உயிரிழந்த மக்கள் எவராக இருந்தாலும் அவர்களை நினைவுகூர வடக்கில் மக்களுக்கு உரிமை உண்டு. அதை நாம் தடுக்க மாட்டோம். அவர்கள் விரும்பிய இடங்களில் அவர்களை நினைவுகூர முடியும். - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சால் நேற்று முன்தினம் இலங்கைத் தகவல் திணைக்களத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது- இலங்கை பயங்கரவாதம், இனவாதம், இடர் என்று சகல சிக்கல்களுக்கும் முகம் கொடுத்த நாடு. எனினும் இடர்கள் ஏனைய சிக்கல்கள் அனைத்தையும் விட போரே நாட்டுக்குப் பெரிய இழப்புகளை ஏற்படுத்தியது. கடந்த காலங்களில் போர் வெற்றித் தினத்தை இராணுவ வெற்றித் தினமாக கொண்டாடி வந்த போதிலும், இம்முறை வெற்றித் தினமாகக் கொண்டாடாது விடுதலைத் தினமாகக் கருதியும், போரில் உயிர் நீத்த இராணுவ வீரர்கள், பொது மக்களை நினைவேந்தியும் கடைப்பிடிக்கப்படும்.



கடந்த காலங்கள் போலன்றி இப்போது நாட்டில் நல்லிணக்கம், சகவாழ்வு பற்றிய செயற்பாடுகளை அரசு முன்னெடுத்து வருகின்றது. இந்த நிலையில் சகல மக்களையும் உள்ளடக்கிய வகையில் இது கடைப்பிடிக்கப்படும்.

வடக்கில் விடுதலைப் புலிகளின் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும் என்று பரப்புரை செய்து வந்தாலும், அதில் எந்த உண்மைகளும் இல்லை. போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூரவே அவர்கள் ஒன்று கூடுகின்றோம் என்று கூறியுள்ளனர். எந்தச் சந்தர்ப்பத்திலும் புலிகளை நினைவேந்தும் நடவடிக்கையாக அமையாது. போரில் உயிரிழந்த மக்கள் எவராக இருந்தாலும் அவர்களை நினைவுகூர அவர்களுக்கு உரிமை உண்டு. அதை நாம் தடுக்க மாட்டோம். அவர்கள் விரும்பிய இடங்களில் அவர்களை நினைவுகூர முடியும்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நாளை போர் வெற்றி நாளாகக் கொண்டாட வேண்டும் என்று ஒரு சிலர் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு கொண்டாட நாம் தயாராக இல்லை. இருநாடுகளுக்கு இடையிலான போராக இருந்தால் நாம் வெற்றி பெற்றதைக் கொண்டாட முடியும்.

ஆனால் இது ஒரு நாட்டினுள் சகோதர இனங்களுக்கு இடையில் இடம் பெற்ற மோதல். அதில் எமது சகோதர உறவுகள் தான் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் ஆயுத இயக்கமாக இருந்தாலும்கூட, அவர்களும் இலங்கையர்களே. அவர்களும் ஏதோ ஓர் உரிமைக்கான போராட்டமாக இதை முன்னெடுத்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியால் 1979 ஆம் ஆண்டு வன்முறைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இன்று அவர்கள் ஏனைய கட்சிகளை விடவும் வித்தியாசமான ஜனநாயகவாதிகளாக தம்மை அடையாளப்படுத்தியுள்ளனர். அவர்களின் அரசியல் பிரவேசம் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியுள்ளது. அதே போலவே விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளும் காணப்படுகின்றன. இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டுள்ளது. ஆனால் எமது சகோதரர்களைக் கொன்றுவிட்டு நாம் வெற்றி விழாக் கொண்டாடத் தயாராக இல்லை. இலங்கையர் என்ற வகையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

இன்று வடக்கில் மக்கள் மத்தியில் நல்ல ஜனநாயக மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதேபோல் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில், மீண்டும் தமிழர்களைப் பிரிவினைவாதிகளாக்கி அவர்களை ஓரம் கட்டும் செயற்பாடுகளைக் கைவிட வேண்டும் - என்றார். (ற-ஐ-5)

# சட்ட விரோத சிறுநீரக வியாபாரம்; 6 இந்தியர்களுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, மே 18
சட்ட விரோத சிறுநீரக வியாபாரம் தொடர்பாக இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள ஆறு இந்தியர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

நுழைவிசைவு இன்றி சட்ட விரோதமாக இலங்கையில் தங்கியிருந்தமை தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின்படி அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று கூறிய பொலிஸார் இது சம்பந்தமாக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெறப்படவுள்ளன என்றும் தெரிவித்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு கொழும்பு, மிரிகானை விசேட முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்த இந்தியப் பிரஜை ஒருவர் தப்பியோடியமை குறித்து விளக்கமளிப்பதற்கு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு குடிவரவுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு கடந்த வழக்கு தினத்தில் நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார். ஆனால் அந்த அதிகாரி நீதிபதி முன் முன்னிலையாகவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரியை எதிர்வரும் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நீதிபதி மீண்டும் உத்தரவு பிறப்பித்தார். தப்பியோடிய இந்தியப் பிரஜை இலங்கையை விட்டு வெளியேறியுள்ளாரா என்பதை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்களை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்த நீதிபதி அன்று அவர்களின் பிணை மனுக்கள் குறித்தும் ஆராயப்படும் என்று அறிவித்தார். (ற-ஐ-5)

# தமிழ் மக்களுக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு கிடைக்கும்

## சுவாமி சிறி ரவிசங்கர் நம்பிக்கை

கொழும்பு, மே 18
நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு கிடைக்கும். இந்த நம்பிக்கை எனக்கு உள்ளது. -இவ்வாறு வாழும் கலை நிறுவன தலைவர் சுவாமி சிறி ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தார். இதன் போதே அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவி வருகின்றது. இதனூடாக தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. ஈழத் தமிழர்கள் உலகம் முழுவதும் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன்கலை, கலாசாரத்தை அவர்கள் பாதுகாத்து வருகின்றனர். இதன் பின்னணியில் ஈழத் தமிழ் மக்களுக்கு சமத்துவம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# ரயிலுக்கு பச்சை இலை காட்டிய பாதுகாப்பாளர்

கொழும்பு, மே 18
ரயில் ஒன்று சமிக்ஞைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது, ரயில் கடவையின் பாதுகாப்பாளர் பச்சைக் கொடிக்கு பதிலாக பச்சை இலையைக் காட்டியுள்ளார். இந்தச் சம்பவம் காலியில் இடம்பெற்றுள்ளது.

ரயில் கடவையின் பாதுகாப்பாளர் கழிப்பறைக்குச் சென்றுள்ளார். அந்தச் சமயத்தில் ரயில் வந்துள்ளது. எனினும் ரயிலுக்கு உரிய சமிக்ஞை கிடைக்கவில்லை. ரயிலின் சாரதி ரயிலை நீண்ட நேரம் நிறுத்தி வைத்திருந்துள்ளார். அத்துடன் ஊது குழலையும் ஒலிக்க விட்டுள்ளார்.

அந்த ஓசையைக் கேட்டு கழிப்பறையிலிருந்து ரயில் கடவைக் காப்பாளர் அவசரமாக ஓடி வந்துள்ளார். சிவப்பு மற்றும் பச்சை வர்ணக் கொடிகள் இருந்தன. ஆனால் பதற்றத்தில் பச்சை இலையைக் காண்பித்துள்ளார்.

இதனால் கோபமடைந்த ரயில் சாரதி, கடவைக் காப்பாளரை எச்சரித்து விட்டுச் சென்றுள்ளார். (ற-ஐ-5)

# சம்பூரில் திரவ இயற்கை எரிவாயு மின் திட்டம் அமைக்கக் கோரிக்கை

கொழும்பு, மே 18
சம்பூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்துக்குப் பதிலாக, திரவ இயற்கை எரிவாயு மின் திட்டத்தை அமைக்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கைக்கு இந்தியப் பிரதமர் சாதகமான பதிலை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி, திட்டத்தை முன்னெடுக்குமாறு தமது அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் எசல வீரக்கோன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில் நடந்த சந்திப்பின் போது, சம்பூர் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்த விவகாரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எழுப்பிய போது, இந்தியப் பிரதமர் மோடி சாதகமாக அதனை அணுகினார்.

இந்தச் சந்திப்பில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் எசல வீரக்கோனும். அவரது பிரதி அதிகாரியான லேனகலவும், வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரப் பிரிவின் பணிப்பாளர் அசோக கிரிஹகமவும் பங்கேற்றிருந்தனர்.

இந்தியத் தரப்பில், இந்திய வெளிவிவகாரச் செயலர் ஜெய்சங்கர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, இந்திய வெளிவிவகார அமைச்சின் இலங்கை - மாலைதீவு விவகாரங்களுக்கான இணைச் செயலர் ரேணு பால், ஆகியோர் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஆன்ம ஈடேற்றக் கடமை தடுக்க இயலாதது தெரியுமா?

இலங்கையின் முள்ளிவாய்க்கால் பகுதியில், அன்றைய ராஜபக்ச அரசின் இராணுவத்தினரால், எமது மக்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில்-- ஏழு வருடங்களுக்கு முன்னர்-- எவ்வகை ஈவிரக்கமும் இன்றி, எமது இரத்தத்தின் இரத்தங்கள், மனித நாகரிகத்தை இழிவுபடுத்தும் வகையில், படுகொலை செய்யப்பட்ட கரி நாள் உலகளாவிய ரீதியில் வாழும் தமிழ் மக்களால் இன்று நினைவு கூரப்படுகிறது.

அவர்களை நினைவுகூரும் கடமையைச் செய்வதற்கு முந்தைய அரசு தடைவிதித்து மனித நேயத்தைச் சேற்றில் புதைத்தது.

ஆனால், அந்த நிலைமை இப்போது, மைத்திரி அரசில் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் மே மாதம் பதினெட்டாம் நாளன்று, இரத்தக் கறை படிந்த நாளன்று. தமிழ் மக்கள் இரத்த சரித்திரம் எழுதிய துக்க தினமாக, வரலாறு உள்ளவரை கடைப்பிடிக்கப்பட வேண்டும். வடமாகாண சபையின் சார்பில் முதலமைச்சர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை--

போரில் சாவடைந்தோருக்கு மட்டுமன்றி, தமிழின விடுதலைக்கு உயிர் கொடுத்த அனைவருக்குமாக இன்றைய நாளில், மக்கள் அனைவரும் ஒன்று கூடிப் பிரார்த்திக்க வேண்டும். அதற்கு பொருத்தமான இடம் முள்ளிவாய்க்கால் என்று தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா அறைகூவல் விடுத்துள்ளார்.

மே 18 இல், எமது விடுதலை என்ற இலக்கை அடைவதற்கும், உயிரிழந்த எமது உறவுகளின் ஆத்ம சாந்திக்காகவும், ஆன்ம ஈடேற்றத்துக்கும், ஒன்றுபட்டு நாம் அனைவரும் திடசங்கற்பத்தை வெளிப்படுத்துவதே உத்தமமானது. அதனால் அனைவரையும் முள்ளிவாய்க்காலில் அணி திரளுமாறு அழைக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றம் நிகழ்ந்ததற்கான காரணங்களும், அவற்றின் உண்மைகளும் கண்டறியப்பட வேண்டும். மீண்டும் அவை தொடராமல் இருக்கப் பிரச்சினைக்கு உரிய விடை காணப்பட வேண்டும். அதன் மூலமே தேசிய இனங்களின் மனித உரிமைகள், இறைமை, சுயநிர்ணய உரிமைத் தத்துவம் ஏற்படுத்தப்பட்டு அரசியல், சமூக, பொருளாதார விடுதலையை எய்துவதற்கான அரசியல் தீர்வை உண்டாக்க இயலும்--

போர்க்குற்றம் இடம்பெற்றமைக்கான காரணங்களும் அதன் உண்மைகளும் கண்டறியப்பட்டு, அவற்றின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்த இயலுமே--என்றும் மாவை சேனாதிராசா தமது நீண்ட அறிக்கையில் எடுத்து இயம்பி உள்ளார். மொத்தத்தில்--

விடுதலைப் புலிகள் தலைமையில் விடுதலை நாடியவர்களும் இந்த நாட்டின் புதல்வர்களே.

இறுதிப் போரில் கொல்லப்பட்ட அனைவரினதும் உயிர்கள் அமைதியுற விளக்கேற்றுதலும் பிரார்த்தனை நடத்துதலும் அனுமதிக்கப்பட வேண்டும். அப்போது தான் அவர்களின் ஆன்மாக்கள் ஈடேற்றம் காணும். ஆன்ம ஈடேற்றத்துக்கான அஞ்சலி கட்டாய கடமை என்று உணர முடியாதவர்கள், மனித ஜென்மங்களாக இருக்க இயலாதே!



# முள்ளிவாய்க்கால் தமிழர்களுக்கு ஒரு முடிவல்ல

■ சேரலாதன்

முள்ளிவாய்க்கால் என்ற சொல்லைக் கேட்டாலே தமிழர்களின் இதயங்கள் ஒரு கணம் இயங்க மறுத்து விடுகின்றன. உடல் முழுவதும் அக்கினித் திராவகத்தை ஊற்றியதைப் போன்றதொரு உணர்வு ஏற்பட்டு விடுகிறது. ஈழத்தமிழ் இனத்துக்குப் பெரும் மரணக்குழியை அமைத்துக் கொடுத்த முள்ளிவாய்க்கால் என்றுமே தமிழர்களால் மறக்க முடியாததொரு இடமாக விளங்கப் போகின்றது.

**தமிழர்களின் உயிர்களுக்கு இறுதித் தருணம்**

புலிகளிடமிருந்து, தமிழர்களைப் பாதுகாப்பதற்கான போர் என்ற பகட்டு வார்த்தைகளுடன் மகிந்த தலைமையிலான அரசுப் படைகள் தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதற்கு மேற்கொண்ட இறுதிப் போர் முள்ளிவாய்க்காலில் தமிழர்களின் உயிர்களுக்கு இறுதித் தருணமாகவும் அமைந்துவிட்டது. புலிகள் வேறு தமிழர்கள் வேறு என்ற பாகுபாடு இல்லாமல் தமிழர்கள் அனைவருமே புலிகள்தான் என்ற நோக்குடன் அரச படைகள் மேற்கொண்ட அழிவு நடவடிக்கைகள் தமிழர்களின் அத்திபாரத்தையே பெயர்த்தெடுத்து விட்டன. அவர்களை உலகத்தவர்களின் பார்வையில் ஏதிலிகளாக மாற்றிவிட்டன. இறுதிப் போரின் அவலங்களை வேறு எந்தவொரு இனத்தின் அவலத்துடனும் ஒப்பிட்டு நோக்க முடியாது. சர்வாதிகாரி ஹிட்லரினால் நச்சுவாயுக் கூண்டுகளுக்கும் அடைத்து வைக்கப்பட்டு விசவாயு பாய்ச்சிக் கொல்லப்பட்ட யூத இனமக்கள் ஒரு கண நேரத்தினுள் தமது உயிர் மூச்சை இழந்து நிரந்தரமான உறக்கத்தினுள் ஆழ்ந்து விட்டனர். ஆனால் இங்கோ எந்த வேளையில் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் கலங்கியிருந்த மக்கள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டனர். எங்கும் மரண ஓலத்தைத் தவிர வேறொன்றையும் கேட்க முடியவில்லை. குருதியில் குளித்த சதைத் தொகுதிகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயங்களை இழந்த வெறும் முண்டங்களும்மண்ணில்வீழ்ந்து கிடந்த காட்சிகள் என்றுமே தமிழர்களின் நினைவைவிட்டு அகல முடியாதவை.

### மனமாறிய மாமன்னன் அசோகன்

கலிங்க தேசத்துட னான போரின் அழிவுகளைக்கண்டுமாமன் னன் அசோ கன் குமுறினான், கதறி அழுதான், வேதனையில் உறைந்து நின்றான். இந்து மதத்தைப் பின்பற்றிய அவன் பௌத்த தேரர் களின் ஆலோசனை யின் பிரகாரம் பௌத்த மதத்தைத் தழுவினான். பௌத்தம் தனது மனக் காயங்களை ஆற்றுமென்பதுஅவனதுஅசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. இலங்கை யிலும் பௌத்த மதத்தைப் பரப்புவதற்காகத் தனது புதல்வனையும், புதல்வியையும் அனுப்பி வைக்கவும் அவன் தவறவில்லை. அசோக மன்னன் கௌதம புத்தரின் போதனைகளையும், வழிகாட்டல்களையும் மட்டுமே நினைவில் கொண்டானேயொழிய அதைப் பின்பற்றுபவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டானில்லை.

பௌத்தம் தழைத்திருக்கும் ஈழவளநாட்டில்போருக்கான ஆசீர்வாதத்தை பௌத்த துறவிகளே வழங்கி வைப்பதைக் காண முடிகின்றது. இனங்களுக்கிடையில் அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இனவாதம் பேசி இனமுறுகலை ஏற்படுத்தி விடுகின்ற இவர்களில் சிலரையும் காண முடிகின்றது. முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் பேரவலங்களை எதிர்கொண்டபோது எந்தவொரு பௌத்த துறவியும் அங்கு சென்று பார்வையிடவில்லை. அசோக மன்னனுக்கு ஆலோசனை வழங்கிய அவர்களது முன்னோர்களைப் போன்று மகிந்தவிடம் சென்று அழிவின் அவலங்கள் தொடர்பாக எடுத்துரைக்கவில்லை. அவர்களின் ஆலோசனையை மகிந்த ஏற்றிருப்பாரோ என்பது சந்தேகமாக இருந்தாலும், ஒரு பௌத்த துறவியாவது அதற்கு முயற்சி செய்யாதது தான் வேதனைக்குரியது.

### பாதுகாப்பு வலயங்களிலும் தாக்குதல்

பாதுகாப்பு வலயங்களென சில இடங்களைக் குறிப்பிட்டு விட்டு அங்கே ஏதோவொரு நம்பிக்கையுடன் மக்கள் தங்கியிருந்தபோது அவர்கள் மீது தாக்குதல்களை நடத்திக் கொன்று குவித்தமை எந்த வகையிலும் நியாயமான ஒன்றல்ல. இதைவிட அரைகுறை உயிருடன் போராடிக் கொண்டிருந்த மக்கள் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைகளும் அரசபடைகளின் இலக்கிலிருந்து தவறவில்லை. போரின் இறுதி நாள்களில் உணவு, நீர் என்பவை கிடைக்காமல் தவித்த வாயுடனும், ஒட்டிய வயிற்றுடனும் சோர்ந்து போய்க்கிடந்த மக்கள் மீது எறிகணைத் தாக்குதல்கள் தாராளமாக ஏவிவிடப்பட்டன. இவற்றிலிருந்து தப்பி ஓடுவதற்கு எந்தவிதமான மார்க்கமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. சீரான பதுங்கு குழிகள் அமைக்கப்படாததால் பலரின் புதை குழிகளாக இவை மாறிவிட்டன.

பயங்கரவாதத்தை ஒழிப்பதாக இலங்கை அரசு போட்ட வேடத்தில் மயங்கிய உலக நாடுகள் பலவும் வெற்றியை விரைவுபடுத்துவதற்கு உதவிகள் பலவற்றையும் வாரி வழங்கின. எமது அயல் நாடான இந்தியா கூட இதில் முக்கிய பங்கை வகித்தது. புலிகள் மீதான வஞ்சகத்தைத் தீர்ப்பதற்குத் துடித்த அப்போதைய இந்திய அரசு மகிந்தவின் நோக்கத்தை நிறைவு செய்வதற்குப் பெரிதும் உதவியது. ஆனால், அப்பாவித் தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் அழிக்கப்பட்டதை எவருமே கவனத்தில் கொள்ளவில்லை.

> முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் பேரவலங்களை எதிர்கொண்ட போது எந்தவொரு பௌத்த துறவியும் அங்கு சென்று பார்வையிடவில்லை. அசோக மன்னனுக்கு ஆலோசனை வழங்கிய அவர்களது முன்னோர்களைப் போன்று மகிந்தவிடம் சென்று அழிவின் அவலங்கள் தொடர்பாக எடுத்துரைக்கவில்லை. அவர்களின் ஆலோசனையை மகிந்த ஏற்றிருப்பாரோ என்பது சந்தேகமாக இருந்தாலும் ஒரு பௌத்த துறவியாவது அதற்கு முயற்சி செய்யாததுதான் வேதனைக்குரியது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி புலிகளின் தலைவரைத் தாம் கொன்று விட்டதாகத் தெரிவித்த இலங்கை அரசு அன்றைய தினத்தையே போரை வெற்றி கொண்ட தினமாகவும் அறிவித்தது. அரச படைகளால் அழித்தொழிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உடல்கள் முள்ளிவாய்க்கால் எங்கும் சிதறிக் கிடந்த அந்தத் தருணத்தில் மகிந்த போர் வெற்றியை உரிமை கொண்டாடி முழக்கமிட்டார். நாட்டின் வடபகுதி சாவு வீடாக, சோக ஒலிகள் நிறைந்து காணப்படத் தென்பகுதி வெற்றி விழாக் கொண்டாட்டங்களால் திழைத்திருந்தது. அதிலும் மகிந்த தம்மை முதன்மைப்படுத்தியது மட்டுமல்லாது, நாட்டை மீட்டுத்தந்த வெற்றிவீரனாகவும் தம்மை மக்கள் மத்தியில் உருவகப்படுத்திக் கொண்டார். ஒரு பௌத்தராக இருந்தும் கூட அவர் தமிழர்களின் அவலங்களுக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வடிக்கவில்லை. தமிழர்களும் இந்த நாட்டு மக்கள்தான் என்ற எண்ணம் கூட அவரது மனதில் தோன்றவில்லை. இதைவிட எந்தவொரு மக்களுக்கும் சிறு சேதம் கூட ஏற்படாமல் தாம் போரை நடத்தி முடித்ததாக மகிந்த கூறித் தம்மையே தாழ்த்திக் கொண்டார். ஆனால் சர்வதேசம் இங்கு நடந்ததை எல்லாமே தெரிந்து கொண்டுள்ளது. மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தமைக்கு இதுவுமொரு காரணமாக அமைந்துவிட்டது.

மே 18 என்ற அந்தத் தினம் தமிழர்கள் இந்த உலகில் வாழும்வரை மறக்க முடியாததொரு தினமாக நிலைத்து நிற்கப் போகின்றது. பேரழிவுகளுக்கு மத்தியில் யூத இன மக்கள் தமக்கென ஒரு தேசத்தைப் பெற்று வளமாக வாழ்கின்றனர். தமிழர்களுக்கு அவ்வாறானதொரு நிலை கிடைக்காது விட்டாலும், இந்த நாட்டிலே சமவுரிமை பெற்று, கௌரவத்துடன் வாழ்வதற்குரிய சூழ்நிலை உருவாக வேண்டும். இறுதிப் போரின்போது இலங்கை அரசுக்கு முண்டுகொடுத்த இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் இதையொரு தார்மீகக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

### அதிகரிக்க வேண்டும் சுதந்திர வேட்கை

தற்போதைய இலங்கை அரசு கூட தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக மெத்தனமாக இருப்பதைக் காணமுடிகின்றது. இதற்குப் பல நெருக்குதல்களைக் காரணமாகக் கூறினாலும், இன்னுமொரு முள்ளிவாய்க்கால் அவலத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதே நாட்டின் சமாதான விரும்பிகளின் விருப்பமாகும்.

தமிழர்களே! முள்ளிவாய்க்காலின் இந்த இறுதிநாள் உங்களின் இதயங்களை வலுப்படுத்த வேண்டும். நாமும் இந்த நாட்டு மக்கள்தான் என்ற உரிமையுடன் உங்களின் சுதந்திர வேட்கையை அதிகரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒன்றும் அநாதைகள் அல்ல. உலகெங்கும் பரந்து வாழுகின்ற கோடிக்கணக்கான தமிழர்களின் கரங்கள் உங்களின் கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத் துடைப்பதற்கு என்றுமே தயாராக இருக்கப் போகின்றன என்பதையும் – மறந்து விடாதீர்கள். முள்ளிவாய்க்கால் தமிழர்களுக்கு ஒரு முடிவல்ல.





## துயர்துடைத்து துணிந்தெழு...

மே 18 தமிழினத்தின்
மேனியுருகிடும் நாள்மனிதப் பலி
மேடையேறிய கருநாள்
மேய்ச்சல் நிலங்களிலும்
மேவின குருதி வெள்ளம்

முப்பாட்டன் வாழ்ந்த மண்ணில்
முந்திவந்த மூத்தகுடி
முத்தமிழின் முதற்குடிநமக்கு
முள்ளிவாய்க்கால் வைத்திடுமோ
முற்றுப்புள்ளி!

நாவடக்கி மூச்சடக்கி
நாற்றிசையும் வேலியிட்டு
நாற்படையும் நாய்போற்குதற
நாதியற்ற எம்மினம்
நாடிழந்து நின்றிடுமோ!

கூனிக்குறுகிக் கும்பிட்டு மண்டாடி
கூவிநாமழைத்தும் என்ன பயன்
கூடவில்லை சர்வதேச நலன்
கூத்தாடியரசியலில்
குடிகொண்ட இனவாதம்
கூர்வாளுக்கிடையாகுமோ!

குண்டுகள் வீழ்ந்ததால்
குடில்கள் அழிந்தும்
குருதி தெறித்தும்
குற்றுயிராய்த் துடித்தும்
குன்றவில்லை நம் நம்பிக்கை

தலைவணங்காத் தமிழினம்
தடைகளைத் தாண்டி
தளைத்திடும் இந்தச் சிறுஇனம்
தரகுஶ்ரீயில் எமக்கொரு நாடுண்டோ!
தரணியில் தமிழினமில்லா நாடுண்டோ

முட்படுக்கை விரித்தாய்
முள்ளிவாய்க்காலில்
முட்கிழித்தகாயம் ஆறுமுன்னே
முடியிழந்தார் முக்கொம்பர்
முடியுமா உன்னால் மீண்டுவர?

காயங்கள் ஆறட்டும்
காலங்கள் மாறட்டும்
காயட்டும் நம் கண்ணீர்
காட்சிகளை மாற்றியமை
காட்டிநில் நீயாரென்று

துடித்தது போதும் இனி
துயர்துடைத்து தடையுடைத்து
துணிந்தெழு புயலைப்போல
துச்சமாய் நினை துரோகத்தை
துரத்திவிடு அச்சத்தை

கல்வி எம் கண்கள்
கலாசாரம் எம் அடையாளங்கள்
கற்பு எம் கருவூலம்
கடமை கண்ணியம் நம் பண்பு
கடைசிவரை கைவிடாதே
கயவரை விரட்டும் பேராயுதமிவை

நாம் பட்ட வலிகளில் வலிமைதேடு
நாம் இனி எமனை அஞ்சோமென்றுரை
நாற்றிசையும் எமதென்றே நிமிர்ந்தெழு
நாதியற்று நின்றாலும் நாம் தமிழர்
நாமுயர்வோம் பிறர் நாவடக்க

எதிரியை அடிக்க இனி ஆயுதம் வேண்டாம்
எழுந்து நீநட வையமும் வழிவிடும்
எட்டிப்பார் வானமும் கைமுட்டும்
எண்ணிப்பார் மீறெழும் சக்தி நமக்கேயுரியது
எதிரியும் கற்பான் இனி எம்மைப் பார்த்து

சுந்தரமடம் அ. அஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுற்றுலா சென்ற 17 மாணவர்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு சாவு

## இந்தோனேசியாவில் பெரும் துயரம்

ஜகார்த்தா, மே 18

இந்தோனேசியாவில் நீர் வீழ்ச்சியொன்றைப்பார்வையிடச்சென்ற மாணவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டனர். அங்கு நிலவும் மோசமான காலநிலை காரணமாக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு 17 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடல்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன. கடந்த ஞாயிற்றுக்கிழமை 70 க்கும் அதிகமான மாணவர்கள் டுவா-வங்னா நீர் வீழ்ச்சிக்குச் சுற்றுலா சென்றனர். இவர்களுள் 20 மாணவர்கள், 2 பாதை காட்டிகள் வழி தவறி காணாமற் போயினர்.



அவர்களைத் தேடும் பணி நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதன் போது காணாமற்போனவர்களில் 17 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்தத் தேடுதலில் ஒரு மாணவர் உயிருடன் மீட்கப்பட்டார் என இடர் முகாமைத்துவ நிலையத்தினர் தகவல் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து நேற்றைய தினமும், காணாமற் போன 4 பேரைத் தொடர்ந்தும் தேடினர். மீட்புப் பணியில் 300 மீட்புப் பணி வீரர்கள், பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். பருவ மழை வீழ்ச்சி காரணமாக நீர் வீழ்ச்சி, ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# 1,900 கங்காருக்களை அழிக்க ஆஸி. திட்டம்

சிட்னி, மே 18

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் முயற்சியில் ஆயிரத்து 900 கங்காருகளைக் கொல்ல அரசு திட்டமிட்டுள்ளது. சூழலின் தாவர வளத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் கங்காருக்களது எண்ணிக்கையால் பசுமைத்தன்மையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கங்காரு தாவர உண்ணி என்பதால் இந்த நிலை தோற்றம் பெற்றுள்ளதுடன், சமூக அளவில் பாதிப்பையும் செலுத்தியுள்ளது.

முன்னதாக 2008 ஆம் ஆண்டு 4 ஆயிரம் கங்காருகள் சட்டபூர்வமாக கொல்லப்பட்டுள்ளன. இந்த நிலையில், மிருக உரிமை அமைப்பு மற்றும் அரச சார்பற்ற நிறுவணங்கள், மென்மையான விலங்கை கொல்வது, பசுமை மீட்புக்குத் தீர்வல்ல. கங்காருக்களினால் மட்டும் தான் தாவரங்கள் அழிவடைகின்றனவா எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர். இவ்வாறாகக் கங்காருக்கள் கொல்லப்படுதலானது, அதன் இறைச்சி விற்பனையை ஊக்குவிக்கும் செயலாக மாறியுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து, கங்காருக்களை அழிக்க ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது. அதிகரித்து வரும் கங்காருக்களைக் கட்டுப்படுத்த இந்த வழிமுறை ஏற்றது எனவும்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், விஞ்ஞான ரீதியில் கங்காருக்களின் இனப்பெருக்கம் மந்தமானது என்றும், ஒரு பெண் கங்காரு வருடம் ஒன்றுக்கு ஒரு குட்டியையே ஈனும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அளவுக்கதிகமாக இனம் பெருகியமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்த, அழிப்பதைத் தவிர வேறு வழிகளையும் கண்டறியவேண்டும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)

# பங்களாதேஷில் மின்னல் தாக்கி நான்கு நாள்களில் 65 பேர் சாவு



டாக்கா, மே.18

பங்ளாதேஷில் இடி மின்னல் தாக்கி 65 பேர் உயிரிழந்துள்ளனர். 4 நாள்களில் மாத்திரம் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அநேகமான உயிரிழப்புகள் வடக்கு, மத்திய கிராமப் பகுதிகளில் இடம்பெற்றள்ளன. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் கட்டடத் தொழிலாளர்கள், விவசாயிகள் என பங்ளாதேஷின் இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ரியாஸ் அகமத் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை 34 பேரும், கடந்த வெள்ளிக்கிழமை 21 பேரும், கடந்த சனிக்கிழமை 7 பேரும், ஞயிற்றுக்கிழமை 3 பேரும் உயிரிழந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், பருவப்பெயர்ச்சிமழை காரணமாக மார்ச் மாதத்தில் இருந்து ஜூன் மாதம் வரை பங்ளாதேஷில் இடி, மின்னல், புயல் தாக்கங்கள் இடம்பெறும். ஆயினும் காடழிப்புக் காரணமாக இடி மின்னல் மனிதர் மீது தாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இடி, மின்னல் இந்த காலகட்டத்தில் மிகச் சாதாரணமான ஒன்று. ஆனால் இவற்றின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள் அசாதாரணமானவை. கடந்த வருடமும் மின்னலினால் 274 பேர் உயிரிழந்துள்ளனர் என இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும், வழமைக்கு அதிகமாக எவ்வாறு இந்த இறப்புகள் ஏற்பட்டுள்ளன என வானியல் நிபுணர்களுடன் கலந்தாலோசிப்பதாகவும் அவர் தெரிவித்தார். மின்னலில் உயிரிழந்தவர்களுக்கு 253 டொலர் பணம் வழங்கப்படவுள்ளது, காயமடைந்த வர்களுக்கு 126 டொலர்கள் பணம் வழங்கப்படவுள்ளது என வும் அவர் தெரிவித்தார். (த-ரி4)

# ஈரான் செல்கிறார் மோடி

வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஈரான் நாட்டுக்கு எதிர்வரும் 22ஆம், 23 ஆம் திகதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

ஈரான் நாட்டு அதிபர் ஹாசன் ரவுஹானியின் அழைப்பின் பேரில் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 22ஆம், 23 ஆம் திகதிகளில் அந்நாட்டுக்குப் பிரயாணம் மேற்கொள்கிறார் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் செல்லும் பிரதமர் மோடி அந்த நாட்டின் மூத்த தலைவர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் ஆலோசனை நடத்துகிறார்.

மேலும், மோடியின் இந்தப் பயணம் இரு நாடுகளிடையே இணைப்பு மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு, எரிசக்தித் துறை மேம்பாடு, வர்த்தக உறவு, இரு நாட்டு மக்களிடையேயான உறவு மற்றும் இந்தப் பகுதியில் அமைதி மற்றும் ஒரு நிலைத்தன்மை ஏற்படுவதற்கு உதவும் என வெளியுறவுத்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

பிரதமர்மோடியின் இந்தப்பயணத்துக்கு முன்பாகவே, மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, எரிசக்தி துறை அமைச்சர் தர்மேந்திர பிரதன், வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோர் ஈரான் நாட்டு தலை நகர் தெஹ்ரான் சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

# சிட்னியைத் தாக்கச் சதித்திட்டம் தீட்டியதாக கைதானார் இளைஞர்

சிட்னி, மே 18

ஆஸ்திரேலியாவில் தாக்குதல் நடத்தச் சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் 18 வயதுள்ள ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார். நேற்றைய தினம் இடம்பெற்ற இந்தக் கைது நடவடிக்கையில் சிட்னி நகரம் தாக்கு தலுக்கு இலக்கு வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். மேலும், வெளிநாடுக ளுடன் தொடர்பு கொண்டு நாட்டுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் வாழ் நாள் தண்டனை கிடைக்கக் கூடிய வாய்ப்புள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். முன்னதாகக் குறித்த இளைஞர்சிரியாவுக்குப்பயணம்செய்ய முயற்சித்ததையும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.


மேலும், குறித்த இளைஞர் துப்பாக்கியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வந்தான். கைது செய்யப்பட்டவர் தனித்து செயற்பட முனைந்துள்ளார். எனவே அவரைக் கைது செய்ததன் மூலம் தாக்குதலுக்கான அச்சம் முற்றுப் பெற்றுள்ளது எனப் பொலிஸார் கூறினர்.

இவர் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் சிரியாவுக்குப் பயணிக்க திட்டமிட்டபோது, பொலிஸார் அவரது பயணத்தை முடக்கியதுடன் வேறு நாடுகளுக்குப் பயணிப்பதைத் தடுக்கக் கடவுச் சீட்டை கைப்பற்றினர். இந்தச் சம்பவத்தில் இருந்து குறித்த நபர் பொலிஸாரால் காண்காணிக்கப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"இவர் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் சிரியாவுக்குப் பயணிக்க திட்டமிட்ட போது, பொலிஸார் அவரது பயணத்தை முடக்கியதுடன் வேறு நாடுகளுக்குப் பயணிப்பதைத் தடுக்கக் கடவுச் சீட்டை கைப்பற்றினர்."

2014 ஆம் ஆண்டில் இருந்து ஆஸ்திரேலியாவில் தீவிரவாதத் தாக்குதலுக்கான எச்சரிக்கைகள் அதிகரித்துள்ளன. ஐ.எஸ். அமைப்பினால் தாக்குதல் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இதனால் பொலிஸார் தொடர் தேடுதல்களில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பையும் அதிகரித்துள்ளனர். ஆஸ்திரேலியாவைத் தாக்குதல் நடத்துவது தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் அநேகமானோர் பதின்ம வயதினர்கள் ஆவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புளோரிடாவில் பெண் ஒருவருக்குச் சுறாவொன்று கடித்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சுறாவின் பற்கள் பெண்ணின் கைத் தசையில் மாட்டிக் கொண்டன. இதனால் அவர் கடலை விட்டு வெளியேறியும் சுறா அவரது கையில் இறந்த நிலையில் இருந்தது. கடல் உதவியாளர்கள் வந்தும் சுறாவை அப் பெண்ணின் கையை விட்டு அப்புறப்படுத்த முடியவில்லை. இதனால் அந்தப் பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதற்கிடையில் குறித்த பெண் கடலுக்கடியில் நீந்தும்போது சுறாவின் வாலைப் பிடித்து இழுத்து அதனை அசௌ கரியப்படுத்தியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (தரி4)

# கட்டுப்பாட்டுப் பகுதிகளை தொடர்ந்து இழக்கும் ஐ.எஸ்.

## அமெரிக்க இராணுவத் தலைமை தெரிவிப்பு

வொஷிங்டன், மே 18

ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டினுள் இருந்த பகுதிகளை, தற்போது அந்த அமைப்பு இழந்து வருவதாக அமெரிக்க இராணுவத் தலைமையக ஊடகப் பேச்சாளர் பீற்றர் குக் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மேலும், ஈராக்கில் ஐ.எஸ் அமைப்பின் கட்டுப் பாட்டினுள் இருந்த பகுதிகளில் பாதியளவு இராணுவத்தினர் வசமாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. முன்னதாக ஈராக்கில் 40 சதவீத நிலப் பரப்பையும், சிரியாவில் 10 சத வீத நிலப்பரப்பையும் ஐஎஸ். அமைப்பினர் இழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது ஈராக்கில் 45 சதவீதமும் சிரியாவில், 16 இலிருந்து 20 சதவீத நிலப்பரப்பும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன எனப் பீற்றர் குக் தெரிவித்தார்.

முன்னதாக 2014 ஆம் ஆண் டில் இருந்து ஈராக்,



சிரியாவில் பெரும் ஜிகாதிப் போர் சூழ்ந்தது. இதனையடுத்து அமெரிக்கக் கூட்டுப்படை ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகத் தாக்குதலை நடத்தியது. இந்த தாக்குதலில், ரமாடி, ஹீட் ஆகிய நகரங்கள் ஈராக்கில் மீட்கப்பட்ட போதும், மொசூல், பலுஜா ஆகிய நக ரங்கள் ஐ.எஸ்ஸின் கட்டுப்பாட்டி னுள் இருப்பது குறிப்பிடத்தக்கது. சிரியாவில் உள்ள ராக்கா நகரத்தை தமது கலிபேட்டாக அது (இஸ்லாமிய கலிபா ஆட்சி) பிரகடனப்படுத்தியுள்ளது. (த-ரி4)

# அகதிகளுக்கு வேலை வழங்குகிறது ஜேர்மனி

பேர்ளின், மே 18

ஜேர்மனியில் வசிக்கும் அகதிகளுக்கு அந்த நாடு ஒரு யூரோ வேலைத் திட்டத்தை முன்வைத்துள்ளது. பெருகி வரும் அகதிகளின் வேலைத் தட்டுப்பாட்டை நீக்க அந்த நாட்டு அரசினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தாவரங்களுக்கு நீர் பாய்ச்சுதல், வாகனங்களைத் துடைத்தல், பாத்திரம் கழுவுதல், நடை பாதை சுத்தம் செய்தல் போன்றவேலைகளுக்குஒருமணி நேரத்துக்கு ஒரு யூரோ வழங்கப்படுகின்றது.

ஒரு வாரத்தில் 20 மணிநேரங்களுக்கு மேல் வேலை செய்ய முடியாது என்ற சட்டதிட்டத்துடன் இந்த வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. சராசரியாக



மாதம் 80 யூரோக்களை ஈட்ட முடியும் என்பதுடன், வேலையைப் பாராட்டிக் கொடுக்கும் மேலதிக பணமும் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும். அகதிகளின் வருமானம், பொழுதுபோக்கு என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்த வேலைத் திட்டம் அதிகாரிகளால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் தஞ்சமடைந்த லட்சக்கனக்கான அகதிகளுள் 9 ஆயிரம் பேருக்கு அந்த நாட்டு அரசு வேலை வழங்கியுள்ளது. இந்த நிலையில் ஜேர்மனின் கூலித் தொழிலாளர் அமைச்சர் அகதிகளுக்கு ஒரு லட்சம் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் அகதிகளை வேலைக்கு அமர்த்துவது, சிறந்த அரசியல் சூழலை உரு வாக்கக் கூடியது. அகதிகளுக்கு எதிராகச் செயற்படும் கட்சியினரை முடக்க முடியும் எனக் கருத்துக்கள் எழுந்துள்ளன. அத்துடன் இந்த முயற்சி ஜேர்மனிப் பொருளாதாரத்தை உயர்த்தும் என எதிர் பார்க்கப்படுகிறது. (த-ரி4)

# கேரளாவில் காலினால் வாக்கு பதிவு செய்த மாற்றுத் திறனாளி

புதுடில்லி, மே 18

கேரள மா நிலத்தைச் சேர்ந்த அப்து சமத் (வயது - 25) என்பவர் இரு கைகளையும் இழந்தபோதிலும் கால் மூலம் வாக்குப்பதிவு செய்து தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றி வருகிறார்.



மலப்புரம் மாவட்டம் பள்ளிக்கல் அருகே உள்ள முழங்கலூரில் வசித்து வருபவர் அப்து சமத். பட்டதாரியான சமத்துக்கு 11 வயதாக இருந்தபோது மின்சாரம் தாக்கியதில் இரு கைகளையும் இழந்தார். எனினும் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. வாழ்வியலுக்கான தேடலில் உற்சாகமாகவே இருக்கிறார். அதிலும் தேர்தல் என்று வந்து விட்டால் போதும், தனக்குப் பிடித்தமான கட்சியின் பரப்புரைக்கு முன்னால் சென்று நிற்பார். ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று வேட்பாளருக்கு ஆதரவாக வாக்குச் சேகரிப்பார். எனது வாழ்நாளில் வாக்குப்பதிவு நாள் என்பது மறக்க முடியாதது. எனது குரலும் அந்த நாளில் கணக்கெடுக்கப்படுகிறது என நினைத்து பெருமை கொள்கிறேன் எனத் தனது நினைவலைகளைப் பகிர்ந்து கொள்கிறார் சமத்.

மேலும், அவர் ஒவ்வொரு முறையும் வாக்குப்பதிவு செய்வதற்காக செல்லும் போதெல்லாம் தேர்தல் அதிகாரிகள் என்னைக்கண்டுகுழம்பித்தான் போகின்றனர். கடந்த முறை வாக்குச்சாவடிக்குள் சென்ற போது கைவிரல்களைத் தேடி தேர்தல் அதிகாரிகள் எனது சட்டையைக் கழட்டிப் பார்த்தனர். இறுதியில் எனது இடது காலின் இரண்டாவது விரலில் மை தடவி வாக்குச் செலுத்த அனுமதித்தனர். பதிவேட்டிலும் எனது கால் விரல்களை கொண்டுதான் கையொப்பமிட்டேன் என்கிறார். இதே போல் அன்றாட வாழ்வியலிலும் சமத் தனது கால்களைத் தான் பயன்படுத்துகிறார். மொபைல் போனில் செல்பி எடுப்பது முதல், நண்பர்களைத் தொடர்பு கொண்டு பேசுவது வரை எல்லாமே கால்விரல்களால் தான்.

கைகள் இல்லாத என்னால் வாக்குச்சாவடிக்கு சென்று ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற முடிகிறது. ஆனால் கைகள் இருந்தும் வாக்குச் சாவடிக்கு வராமல் சாக்குப் போக்கு தேடுபவர்களை என்னவென்று சொல்வது? நாம் செலுத்தும் வாக்குத் தான் மாற்றத்துக்கான ஒரே வழி. இதைப் புரிந்து கொண்டு எமது கடமையை நிறைவேற்ற வேண்டும் என ஆதங்கப்படுகிறார் சமத். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நிசப்தமான செயல்கள்

தமிழ் இனத்தை அழிக்கும் செயல்கள்
மௌனமான குரல்கள்
மனிதநேயத்தைக் காக்கவேண்டிய குரல்கள்
அசபையான தமிழ் விழித்திட வேண்டிய சமூகம்
சத்தம் இன்றிய போர்
சத்தியத்தினை அழிக்குது நித்தம்
அரவம் அற்ற மொழித்திணிப்பு
பிரவாகம் எடுத்துள்ளது இங்கே
ஓசை இல்லா கூத்துக்கள்எம் ஓர்மத்தை
அழிக்குது கண்டீர் அமைதி என்பதற்கு புது வடிவம்
அகதியாகக் கண்டீர் தமிழிற்கு ஓர் ஓங்காரம் அது
தமிழியமாக ஒலிக்கும்



மருத்துவர் சி. யமுனாநந்தா

## நன்னார் நாணுவர் அழிப்பை உணரின்

முல்லைக்கொலைகள் எம்
எல்லை விலைகள்
தொல்லை வலைகள்இனி
இல்லை மலைகள்

நான் உனக்குப் பயங்கரவாதி
நீ எனக்குப் பயங்கரவாதி என்றில்லா
நாள் உனக்கு வரும் போது
நீ எனக்கு நண்பனாவாய்

அப்பனைக் கொன்றவன் பயங்கரவாதி
அப்பனைக் கொன்றது பயங்கரவாதம்
அப்பன் கொன்றது பயங்கரவாதம்
உன்னை நீ உணர்ந்தால்
உலகதை நீ உணர்வாய்
உலகை நீ உணர்ந்தால்
உவகையினை உவப்பாய்
வன்முறை வேண்டாம் இவ்வையகத்தில்
வன்முறை செய்தோர் வழிவிடுங்கள்

சமாதானமே எமக்குச் சிறந்ததானம் - அதற்கு
ஏங்குகின்றோம் நாம் நயவஞ்சகர்களிடம்
சோரம் போய் அரசியலை நடத்துவதை விடுத்து
ஓரம் போய் இருந்திடுங்கள் எமக்காக என்றும்-
நம்பிக்கை நமக்குண்டு நாளை நமதே என்றிட
சோர்ந்திடோம் சுறுசுறுப்பாய் மிடுக்கிடுவோம்.

மனிதநேயம் சயனிக்கும்போது
மௌனம் மௌனிக்க வேண்டும் - இதற்கு எம்
கணிதம் கவனிக்க வேண்டும்.

புனிதம் அவனியில் அணிவகுக்க,
துள்ளித்திரியும் பள்ளிச் சிறார்கள் பச்சிளம் பாலகர்கள்
முள்ளிவாய்க்கால்தனில்
தாயை இழந்து, தந்தையை இழந்து
உடன் உறவுகளையே இழந்து
தம்மையே இழந்து
ஆண்டுகள் ஒன்று இரண்டு எனப் பலவாயினும்
தாயில் தூவாக் குழவிபோல்
ஓயாது சுஉம் நம் தமிழ்நாடு
அடுநையாயினும் விடுநையாயினும்
அறனோ மற்று இது சிங்களத்துக்கு
அறமும் மறமும் அகன்றதுவே
உரமான எம்மினத்தின் சீர்வேரினை
கோரமான போர் அழித்ததுவே
நண்ணார் நாணுவர் நம் அழிப்பை உணரின்
நகுமின் நம்மை வஞ்சிக்கா நாளை.

மருத்துவர் சி. யமுனாநந்தா

## இன்னமும் ஆறாத முள்ளிவாய்க்கால் வலிகள்

■ து.திலக்

2009 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் மனிதப் பேரவலம் அரங்கேறிக் கொண்டிருந்த நாள்கள் அவை... அப்போது அங்கு வாழ்ந்திருந்த எம்மினிய சொந்தங்கள் உணவு, உடை, உறையுள் எல்லாமே தொலைத்து நிம்மதி இழந்து நிர்க்கதியாக வாழ்ந்த காலத்தை மீட்டுப் பார்ப்பதும் காலத்தின் தேவையாகும்... அன்றைய நிலையை மறந்திட எவராலும் முடியாது.... விலை மதிப்பற்ற உயிர்கள் பாட்டனும் பூட்டனும் சேர்த்து வைத்த பரம்பரைச் சொத்துக்கள் எல்லாமே முடிந்த போரில் எரிந்து சாம்பலாய் போச்சு... சரி சொத்துக்களைத் தான் தேடலாம். போன எம் ஆயிரம் ஆயிரம் சொந்தங்களின் உயிர்கள் மீள வருமா...?? வீட்டுக்கு வீடாய் வாசல் படியாய் சோகங்கள் சூழ்ந்து கிடக்கிறது. இருந்தும் கால ஓட்டத்துக்கேற்ப எல்லோரும் சேர்ந்து ஓடுகின்றனர் எம் மக்கள்...

அன்று நடந்தது இனப்படுகொலை! இல்லையென்று சொல்லும் ஈனப்பிறவிகளும் இன்னும் எம்முள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியுமா போரின் வலி என்னவென்று...? அன்று உண்ண உணவில்லை, மருந்துப் பொருள்களில்லை, தங்கியிருக்க வீடில்லை, குழந்தைகளுக்குப் பாலில்லை, மாப்பெட்டி ஏதுமில்லை, கடும் மழை நடுவில் நின்று உயிர் மீண்டவர்கள் இப்பொழுது கேட்பதெல்லாம் இறந்தவர்களை மீட்டுத் தாருங்கள் என்றில்லை. இந்த இறப்புக்களுக்கு ஒரு சர்வதேச நீதியும் காணாமற் போனவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் எல்லோருக்குமான பொது விடுதலையும் தான். இத்தனை ஆண்டு காலமாகப் போர் அரசி யல் என்ற போர்வையிலே இழந்த எம் இனத்துக்கு நிரந்தரத் தீர்வும் சுபீட்சமான எதிர்காலமும் மட்டும். இதை மக்களை வைத்து அரசியல் பிழைப்பு நடத்துபவர்கள் சிந்திக்கிறார்களா...?

ஏதுமறியா அப்பாவியான தன் மகனை, தன் கணவனை, தாய், தந்தையரை, மனைவி, பிள்ளைகளை இழந்து தவிக்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் ஒவ்வொரு தமிழிச்சியும் கொடிய போரில் தம் உறவுகளைப் பறிகொடுத்துக் கதறும் இந்தத் தமிழினத்தில் பிறந்தது தப்பா...? இப்படி எத்தனை லட்சம் குடும்பங்கள் துன்பத்தில் இருந்து மீள முடியாமல் இன்னும் தவிக்கின்றன... பழையதைக் கிளறுவதாய் என்னை எவரும் திட் டாதீர்கள். இழந்தவர்களுக்கு அது தினந்தோறும் வாழ்வில் வலிதான்... சரி இதனூடாகக் கேட்பது என்னவென்று நீங்கள் எவரும் கேட்கலாம்... இது எம்... ஒவ்வொருவரின் மனச்சாட்சியை உலுப்பிய சம்பவங்கள்... இதனால் தீர்வு ஏதும் ஆகப்போவதுமில்லை. போன உயிர்கள் மீளப்போவதுமில்லை... இருப்பவர்களை யாவது நிம்மதியாய் வாழவிடுங்கள்.

மேடை மேடையாய் இன விடுதலை என்று முழக்கமிடுபவர்கள் இன்னும் சர்வதேசம் முன் ஒன்றாக போய்ச் சொல்லவில்லை. எம் மக்களை அழித்தது இன அழிப்பென்று... அதற்கு எம்மவர்க்கு நேரமும் இல்லை. அது மட்டுமல்ல தலைவர்களுக்குள் ஒற்றுமையுமில்லை... இவர்களைத் தான் இன்னமும் நம்பியிருக்கின்றோம்... விடிவு வருமென்று... இது எம் இனத்துக்கு எவரிட்ட சாபமோ...??? என் மனவுருவை இந்தக் காலப்பகுதியில் உறவுகளே.. யார் தான் மீட்க வருவாரோ...!! எம் இனத்தை...??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடிமையாக வாழும் நிலை வேண்டாம்...

எங்கள் தமிழினம் அழியுதோ எங்கள் தாய்நிலம் ஒழியுதோ
தமிழே தமிழே விழித்தெழு தமிழே தமிழே உயிர்த்தெழு

அடிமையாக வாழும் நிலை வேண்டாம்
குடிமையாக வாழும் நிலை வேண்டாம்
பொறுமையாக இருந்த நிலை போதும்
ஒற்றுமையாக குரல் கொடுப்போம்.

அரசியலில் சம உரிமை, எமக்கு இங்கில்லைக் கண்டீர்!
அடக்குமுறையின் உச்சத்தில் இங்கு வாழ்கின்றோம் கண்டீர்!
அகதியாக அலையும் வாழ்வுக்கு முற்றிடல் வேண்டும் கண்டீர்!
அழிந்த எம் பொருளியலை மீட்டிடல் வேண்டும் கண்டீர்!

சுதந்திரத்தைக் கேட்டுப் பெற முடியவில்லைக் கேளீர்!
சுதந்திரத்தைப் போரடிப் பெறமுடியவில்லைக் கேளீர்!
சுதந்திரத்தை அனுபவித்து அடையமுடியவில்லைப் பாரீர்!
ஆறவில்லை நாம் நம்பிக்கை தளரவில்லை என்றும்
ஆறாகிப் பெருகிடுவோம் தரணியிலே நாம் தமிழராய் !

தமிழுக்கோ இன அழிப்பு, அது சிங்களத்துக்கு வெற்றிப்புளகாங்கிதம்
ஓட ஓட குண்டு மழை கனரக ஆயுதங்களால் எம்மக்கள் மீது !
உண்ண உணவு இல்லை; அருந்த நீர் இல்லை; காயத்திற்கு மருந்து இல்லை.
சுவாசமோ கந்தகக்காற்றில்! இவையே
சிங்களத்தின் வெற்றி, மானிடத்தின் தோல்வி.

மிருகம் மனிதனரானான் மகாவம்சக்கதையில் அன்று
மனிதன் மிருகமானான் முள்ளிவாய்க்காலில் நிஜத்தில் இன்று
செஞ்சிலுவையின் மனச்சாட்சி ஐ.நாவின் மனச்சாட்சி வஞ்சகமாக
மறைந்ததனை நாம் மறப்போமா?
சித்திரவதை,கற்பழிப்பு,கொலை இவை யாவும்
பத்திரமாக அலைபேசியில் மகிழ்வுடன் பதிந்த காமுகர்களின்
வெற்றிப் புளகாங்கிதம்
நாடு கடத்தப்பட்ட வம்சத்துக்கு ஒரு நாடாம் - அது
நாடு வென்ற தமிழனுக்கு இடுகாடாம்

இந் நிலையை நாம் ஒருபோதும் ஏற்கோம்
நாற்பத்தெட்டில் அநாதையானோம் பிரஜா உரிமைச்சட்டத்தில்
ஐம்பத்தெட்டில் தொடங்கி, எழுபத்தெட்டு எண்பத்து மூன்றில்
அழிக்கப்பட்டு அகதியானோம்
இரண்டாயிரத்து எட்டில் தொடங்கி ஒன்பது வரை தமிழினம் பயங்கரவாதி
களாக அ..தே அழிந்ததுவே

காட்டிக்கொடுப்புக்கள் எம்மிடையே வேண்டாம்
வீண்விதண்டா வாதங்கள் எம்மிடையே வேண்டாம்
ஏமாற்று வித்தைகள் எமக்கிடையே வேண்டாம்
பதவி ஆசைகள் என்றும் எமக்கிடையே இனி வேண்டாம்

நாம் அடிமைகள் அல்லர் ஆங்கிலேயரால் கையளிக்கப்பட்ட கொத்தடிமை
களும் அல்லர்
எம்மினத்தின் அழிப்பு தங்கத்தைப் புடமிட்டது போன்றே
தமிழின உணர்வை மேலோங்கச் செய்கின்றது காண்பீர்!
தமிழாய் தமிழியமாய்ப் பொங்கி எழுவோம்
தமிழன் வாழும் ஈழமே தமிழீழம் - காணபீர்
அதனைக்கூறிட தமிழுக்கு உரிமையுண்டு - கேளீர்

மக்கள் மாக்கள் அல்லர் கண்டீர் - இம்மாநிலத்தே
மானிடன் அடிமையல்ல கண்டீர் - எம்மினத்தில்
மாவழிவு கண்டீர் ஈழத்தமிழினம்
மாபுரட்சி காணும் காலம் அருகில் காண்பீர்

எம்மினத்தின் விடுதலைக்கு ஆயுதங்கள் இனித்தேவையில்லை
எம்மினத்தின் விடுதலைக்கு அதிசயங்கள் இனித்தேவையில்லை
எம்மினத்தின் விடுதலைக்கு நம்பிக்கையே இனித்தேவை!
எம்மினத்தின் விடுதலைக்குஒற்றுமையே இனித்தேவை!

நம்புங்கள் நாளை நமக்கு நல்ல காலம்
ஓம்புங்கள் ஒழுக்கத்தினை ஓர்மத்துடனே
வீம்புகள் வேண்டாம் வீண்வீணர்களுடன்
தோம்புகள் தோறும் நம் பெருமையினை ஓச்சிடுவோம்.

மாறா மறவர்கள் நாம் மண்டியிடோம் மண்ணை மீட்காது
அன்புடனே கேட்கின்றோம் எம்மை அடக்காதீர்.
அன்புடனே கேட்கின்றோம் எம்மை ஆக்கிரமிக்காதீர்
அன்புடனே கேட்கின்றோம் எம்மை அழிக்காதீர்
உலகமே ஒரு கணம் மனதைத் திறந்து பார் - எம்
இனத்தை இடத்தை அபகரித்து இடக்கரடக்கரால்
தமிழை அழிக்கும் உபாயம் கண்டீர்
காலம் காலமாகத் தோற்றும் போராடினோம்
காலம் காலமாகப் போராடித் தோற்றோம்
நேற்றுப் போன வாழ்வில் இருப்பது தாழ்வல்லக் கண்டீர்
சாற்றுவதற்கு கலைப்பீர் மௌனம்- இன்றே காண்பீர்
போற்றிடுவோம் எம்மினப் பெருமையினை என்றும் இனிதே

மருத்துவர் சி. யமுனாநந்தா

# கடலே ஏன் இரைகிறாய் ?

கடல் இரைகிறது... காற்று வீசுகிறது...
பூரணி இல்லாத வானம் வெறித்துக் கிடக்கிறது...
இரைகின்ற கடலிடம் எத்தனை பேர் கேட்டாலும் பதில் ஒன்றுதானா....?
இல்லை இன்னும் பலவா...? கடலே ஏன் இரைகிறாய்....?
மணற் பரப்பில் உடகார்ந்திருந்து உன்னை திமிராய்த்தான் கேட்கிறேன்....
கடலே ஏன் இரைகிறாய்....?.
பின் இரவு நேரத்தில் பொன் நிலவு ஏறும் போதே தென்றலும் சேர்ந்து விளையாடுகிறது...
வெள்ளி அலை துள்ளி மெல்ல நுரை தள்ளும் நேரத்தில் நீ ஏன் இரைகிறாய்...?
உன் முகத்தில் ஆயிரம் மத்தாப்பு விரிந்த அழகு...
என்ன நடந்தது என்று தெரியாமலேயே நீ இரைகிறாயா....?
கடற்கரை மணலில் ஆயிரம் பேர் பல விதமாய் உன்னிடம் கேட்கிறார்கள்
எதற்காக நீ இரைகிறாய் என்று.....!
நானும் வெறும் கணக்கிற்காய் கேட்கவில்லை...
என் உள்ளக் குமுறலுக்கு உன் இரைச்சலும் காரணமோ என்று தான் கேட்கிறேன்...
பச்சைக் குழந்தையின் பசிக் கூக்கூரல் வெளிநாட்டார்
காதுகளில் விழக்கூடாது என்றுதான் இரைகிறாயோ......?
அல்லது விம்மியழும் விதவையரின் அவலக் குரலுக்கு சந்தம்தான் இசைக்கிறாயோ....?
கேட்க நாதியில்லாத எம் சனத்தைப்போலவே நீயும் இரைந்து கொண்டிருக்கிறாய்....
தீபகற்பத்தை சூழ்ந்திருக்கும் திமிரில்தான் நீ இரைகிறாய்...
சர்வதேசம் செவிபொத்தியிருப்பதும் உன் இரைச்சல் தாங்கமுடியாமல் தானா...?
உன் இரைச்சலும் உவர்ப்பு வாடைக்காற்றும் என் மேனியில் பட்டுத்தான்
இந்த மண்ணைவிட்டு விலகாமல் ஒட்டிக் கொண்டிருக்கிறேன் கடற்கரையிலேயே....
கட்டவிழ்ந்த பூங் கொத்துக்களாய் சிதறிக் கிடக்கும் எம் சனத்தின்
குமுறலுக்கு நீ என்ன போட்டியா போடுகிறாய்...
என்னதான் இருந்தாலும் ஓயாத அலையாய் நீ மோதி எழுகின்றாய்...
எம்மவனும் ஓயாமலே ஓடுகிறான் கூக்குரலோடு...
முட்டாள் தனமான பேச்சுவார்த்தைகளிடையே உன் இரைச்சலும் எம் சாட்சியங்களை அழித்துவிடுமோ
என்ற பயத்திலேயே கடற்கரைக் காற்றினை சுவாசிப்பதனை எம்மவர் மறந்துவிட்டனர்...
உன்னையும் காதலிக்கின்ற நிலவைப்பார்...
இன்னமும் முழுமை பெறாத நிலவாய் கண்ணோரம் கண்ணீர் வடிக்கின்றது...
அதைப் பார்த்த உலகம் நிலவிலே ஆராய்ச்சி செய்கிறது...
அந்த வான் நிலா அழுவதும் எம் சனம் கண்டுதான் என்பதை
இந்த இயந்திர புருஷர்களால் உணர்ந்து கொள்ளவே முடியவில்லை...
நெஞ்சு வெடிக்கிறது எம் சனத்தின் குமுறல் கேட்கவில்லையே என்று...
உன் இரைச்சலில் ஆவது எம் சனத்தின் குரல் கேட்கட்டும்...
உன் இரைச்சல் சர்வதேசத்தின் காதுகளை எட்டுமோ இல்லையோ...
தேசத்தின் செவிட்டுக் காதுகளை எட்டப் போவதில்லை....
காத்துக் கிடப்போம் கடற்கரையிலேயே விடியும் பொழுதுக்காய்..............!!


- இசை அரசி பரமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்





















## முள்ளிவாய்க்காலின் இறுதிக் கணங்கள்

படங்கள் :- அமரதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலத்தால் அழியாத கவிஞர் கண்ணதாசன்

மு.ஈழத் தமிழ்மணி

காட்டுக்கு ராஜா சிங்கம், கவிதைக்கு ராஜா கண்ணதாசன்! இது பெரும் தலைவர் காமராஜரின் வாக்காகும். கவியரசர் கண்ணதாசன் இன்றைய தமிழக மற்றும் இலங்கை போன்ற நாடுகளில்வாழ்ந்துகொண்டிருக்கின்ற கவிஞர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், பெரும்தலைவர்கள் அனைவரும் போற்றுகின்ற கவிஞர்.

கள்ளம் கபடமற்ற காவியத் தாயின் இளைய மகன் கண்ணதாசன். எட்டாம் வகுப்பு வரை அவர் கல்வி கற்றிருந்தாலும் கண்ணனின் அருள் பெற்றதால் பெரும் கவிஞனாகி கண்ணனைத் தமிழ் அன்னையை இறுதி மூச்சு வரை போற்றிக் காத்து நின்ற அற்புதக் கவிஞர்.

அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முத்தையா. சிறு வயதில் இன்னுமொரு குடும்பத்துக்கு ஏழாயிரம் ரூபாவுக்குத் தத்துக் கொடுக்கப்பட்டவர். அந்த வீட்டில் அவருக்கு வைத்து அழைக்கப்பட்ட பெயர் நாராயணன். கண்ணதாசன் என்றால் கண்ணனுக்கு தாசன் என்று அர்த்தம் அல்ல. அழகான கண்களைப்பற்றி வர்ணிப்பதிலும், வர்ணிக்கப்பட்டதைப் படிப்பதிலும் ஆசை அதிகம். அதனால் இந்தப் பெயரை வைத்துக் கொண்டேன் என்பது அவரே அளித்த விளக்கமாகும்.

எந்த ஒரு மனிதனும் தான் வாழ்க்கையில் விட்ட தவறுகளை ஏற்றுக் கொள்ள மாட்டான், கூறவும் மாட்டான். ஆனால் கவியரசரோ ஒழிவு மறைவின்றி தனது திரையிசைப் பாடல்கள் மூலம் தனது தவறுகளையும் உண்மைகளையும் தெரிவித்திருக்கின்றார். கண்ணதாசன் தனது வாழ்க்கையில் பட்ட பெரும் துன்பங்களையும் பாடல்கள் மூலம் தெரிவித்த கள்ளங் கபடமற்ற மகாமனிதர்.

கவியரசர் பத்திரிகை ஆசிரியராக, அரசியல்வாதியாக, நடிகராக, படத் தயாரிப்பாளராக, திரைப்பட வசன கர்த்தாவாக, பல்வேறு தோற்றங்களில் வெளிப்பட்டிருந்தார். ஐயாயிரத்துக்கு மேற்பட்ட திரை இசைப் பாடல்களை எழுதியிருக்கின்றார். இன்னமும் அவரது பாடல்களை வானொலிகளிலும் தொலைக்காட்சி களிலும் கேட்கவும், பார்க்கவும் முடி கின்றது. உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் நெஞ்சங்கள் அவரது இறவாக் கவிதைகளைப் படித்து மகிழ்ந்து அன்றும், இன்றும், என்றுமே போற்றி நிற்கின்றன.

அமரர் அறிஞர் அண்ணாதுரை, தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி, இன்றைய தமிழக முதலமைச்சரான ஜெ.ஜெயலலிதா போன்றோர் இன்றும் கவியரசரைப் பாராட்டுகின்றனர். காலஞ்சென்ற தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரான எம்.ஜி.ஆர் தனது அரசசபைக் கவிஞராக இவரை நியமித்துக் கௌரவித்தார். கவிஞர் கண்ணதாசன், காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர், கருணாநிதி, பேரறிஞர் அண்ணா ஆகிய நான்கு தலைவர்களையும் தனது வாழ்வில் பாராட்டியவரும், திட்டியவரும் எனப் பெயர் எடுத்தவராவர். ஈ.வே.கே.சம்பத், எழுத்தாளர் ஜெயகாந்தன், துக்ளக் ஆசிரியர் நடிகர் சோ, பழ.நெடுமாறன் ஆகிய நான்கு பேரும் அரசியல் ரீதியாக் நெருக்கமான நண்பர்களாவர்.

ஆரம்பகாலத்தில்வேலைஎதுவும்கிடைக்காததனால் சந்திரமோகன் எனப் பெயர் மாற்றிக் கொண்டு சினிமாவில் வாய்ப்புக்கேட்டுஅலைந்திருந்த வேளையில் காலம் அதற்கு உடன்படவில்லை. பிற்காலத்தில் பராசக்தி, ரத்தத்திலகம், கறுப்புப் பணம், சூரிய காந்தி உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்து ரசிகர்களின் பாராட்டுதலையும் பெற்றுள்ளார்.

'கலங்காதிரு மனமே', 'உன் கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே' என்று கள்வனின் காதலி படத்துக்காக எழுதிய பாடலே இவரது முதல் சினிமாப் பாடலாகும். மூன்றாம் பிறை யில் இடம்பெற்ற கண்ணே கலைமானே பாடலே கவியரசரின் கடைசி சினிமாப் பாடலாகும்.

எப்போதும் மஞ்சள் பட்டுச்சட்டை, வேட்டி அணிந்திருப்பார். திடீரென்று கழுத்துக் கைகளில் நகைகள் மின்னும். திடீரென்று மறைந்து விடும். அவை அடகு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறுவார். வேட்டியின் ஓரத்தைத் தனது கையால் பிடித்துக் கொண்டு அறைக்குள் நடந்தபடி பாடல்களின் வரிகளை வெளியிடுவார். நடந்து கொண்டே இருந்தால்தான் சிந்தனை துளிர்க்கும். கவிதை வரிகள் சொல்லுகின்ற போது பாதணிகளைச் கழற்றிவைத்துவிடுவார். கண்ணதாசன் இறந்து விட்டார் என்று இவரே தனக்கு நெருங்கிய சகாக்களுக்கு தொலை பேசியில் கூறிவிட்டு அப்படியொரு வதந்தியைக் கிளப்பி வீடு தேடிப் பலரும் அழுது கூடி விட பிறகு இவரே அவர்களின் முன்புதோன்றிச் சிரித்து வேடிக்கை காட்டிய சம்பவங்களும் உண்டு. தன்னுடைய பல வீனங்களை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டு சுயவரலாறு எழுதியவர்.

'வனவாசம் மனவாசம்' இரண்டும் ஒருவன் எப்படி வாழக்கூடாது என்பதற்கான உதாரணங்கள் என தெரிவித்தவர்தான் கண்ணதாசன்.

தான் எழுதிய பாடல்களில் 'முத்தான முத்தல்லவோ' என்ற பாடலையே மிகக் குறைவான நேரத்துக்குள் (அதாவது பத்து நிமிடத்துக்குள்) எழுதி முடித்தார். அவரால் எழுதி முடிக்காமல் இழுத்தடிக்கப்பட்ட பாடல், நெஞ்சம் மறப்பதில்லை அது நினைவை இழப்பதில்லை, என்ற பாடலாகும். தனக்கு விருப்பமான பாடல்களாக திருப்பாற்கடலில் பள்ளி கொண்டாயே ஸ்ரீமன் நாராயணா. இதென்னடா பொல்லாத வாழ்க்கை, சம்சாரம் என்பது வீணை என்ற மூன்று பாடல்களையும் கேட்டு மகிழ்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

கவிஞர் கண்ணதாசனைப் பார்த்து ஒருவனுக்கு நீங்கள் கூறும் புத்திமதி என்ன? என்று கேட்க, அதற்கு அவர் நான் எழுதிய புத்தகங்களைப் படிப்பவர்கள் புத்தகங்களைப் பின்பற்றுங்கள் அதன் ஆசிரியரை பின்பற்றாதீர்கள் எனப் பதில் வழங்கினார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஒரு தடவை மட்டுமே போட்டியிட்டு வெற்றி வாய்ப்பைத் தவறவிட்டவர். பின்னர் தனக்கு அரசியல் ஒத்துப் போகாது, இது சரிவராது என ஒதுங்கிக் கொண்டவர். கண்ணதாசன் எழுதிய திரைப்படப் பாடல்களில் "அச்சம் என்பது மடமையடா, சரவணப்பொய்கையில் நீராடி, மலர்ந்தும் மலராத, போனால் போகட்டும் போடா, கொடி அசைந்ததும் காற்று வந்ததா, உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும், எங்கிருந்தாலும்வாழ்க, அதோ அந்தப் பறவைபோல வாழ வேண்டும், சட்டி சுட்டதடா ஆகிய பத்துப் பாடல்களும் காலத்தால் வாழும் காவியப் பாடல்களாகும்.

தமிழிலே என்ன இல்லை? என்பதற்கான விளக்கத்தைக் கவிஞர் கண்ணதாசன் விளக்கும் போது உள்ளுக்குள்ளே புகுந்து பார்த்தால் கவிதைகளிலே ரொம்பச் சுகமான உவமைகள் எல்லாம் இருக்கின்றன. தமிழிலிருந்து தான் உவமைகள் ஷேக்ஸ்பியருக்கு கிடைத்திருக்கின்றன என்று ஆராய்ச்சி செய்துள்ளார்கள். தமிழில் இருப்பதைத் தெரிந்து கொண்டு தான் அவர் சொல்லியிருக்கின்றார் என்றும் கூறு கிறார்கள். உவமைகளில் தமிழன் மாதிரி அனுபவித்தவன் கிடையாது. மதுவைக் கோப்பையிலே ஊற்றிக் குடிக்கப் போகின்றாள் பெண்ணொருத்தி. நிலா வெளிச்சத்திலே மதுக் கோப்பையினுள் இரண்டு வண்டுகளைக் காண் கின்றாள். உடனே மதுவைக் கீழே ஊற்றி விடுகின்றாள். ஆனால், வண்டு களைக் காணோம்! ஏன்? அவள்உள்ளேபார்த்தபோதுதெரிந்தது வண்டுகள் இல்லையாம். அவளது கண்களாம். இப்படி உவமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழ் எப்போதும் இப்படி பேசிப் படித்து ரசிப்பதற்குத் தான் ஏற்ற மொழி. தவத்துக்கு ஒருவரடி! தமிழுக்கு இருவரடி! சவத்துக்கு நால்வரடி என்றும் சொல்லி வைத்திருக்கின்றனர். எம் முன்னோர் அழவேண்டுமானால் தனியாகப் படுத்து அழவேண்டும். சிரிக்க வேண்டும் மென்றால் நாலு பேர் மத்தியில் சிரிக்க வேண்டும். தனி யாக அமர்ந்திருந்து சிரிக்கக் கூடாது. அப்படிச் சிரித்தால் அதன் அர்த்தம் வேறாகும்! என்றெல்லாம் தமிழின் எதுகை மோனைகளை எடுத்து விளக்கி தமிழின் பெருமையைப் பறைசாற்றியவர்.

கவிஞர் கண்ணதாசன் தமது வாழ்நாளில் கேள்விக்குறியான மனிதராவார். கருத்து மோதலில் ஈடுபடுவதென்றால் அவருக்கு நிகர் அவரேதான்.

இப்படிப்பட்ட கவிஞர் இந்து மக்களுக்கான அர்த்தமுள்ள இந்து மதம் பற்றி அறிந்து கொள்வதற்கான நூலையும், கிறிஸ்தவ மக்கள் தெரிந்து கொள்வதற்கான புத்தகமாக இயேசு காவியத்தையும் வெளியிட்டு, தமிழர்களின் உள்ளங்களில் இடம்பிடித்துக் கொண்டார். எமது வாழ்வில் சோதனையும், வேதனையும் வருகின்றபோது கவியரசரின் தத்துவப்பாடல்களே எமக்கு துன்பங்களை நீக்குகின்ற மருந்தாகும். அப்படிப்பட்ட கவிஞர் கண்ணதாசனை என்றென்றும் தமிழ் உலகம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளது.

## இந்துக்களின் குரல் சஞ்சிகை

இலங்கையின் ஒரே ஒரு இந்துத் தேசிய மாத சஞ்சிகையான இந்துக்களின் குரல் எட்டாவது சஞ்சிகை வெளிவந்துள்ளது. பல்வேறு கோணங்களில் மதமாற்றம் இடம்பெற்று வருவதை விளக்கும் வகையிலான அழகிய அட்டைப் படத்தைத் தாங்கி, இந்தச் சஞ்சிகை வெளிவந்துள்ளது. இந்தச் சஞ்சிகையினுள்ளே, வேற்று நாட்டவரால், எமது மொழியும், சமயமும் மதிக்கப்படும் விதம் தொடர்பான கட்டுரைகள், மகா கும்பமேளத் திருவிழா, சோதிடம் கற்போம், இந்து சமயத்திற்கோர் அறிமுகம் முதலான தொடர் கட்டுரைகள், படிப்பினையூட்டும் கதைகள், சங்கரரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் சித்திரத் தொடர்கதை, தமிழர் விடுதலைக்கான நுழைவாயில் எது என்பதை தொடர்பான கட்டுரை எனப் பல்வேறு விடயங்கள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள வகையில் இடம்பெற்ற

# விஷன் 3 ஓவியக் காட்சி



**தென்மராட்சி கல்வி வல யமானது பாடசாலைகளில் கற்கும் மாண வர்கள் மற் றும் ஆசிரியர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களின் கற்றல் தரத்தை மேம்படுத்தும் வகையிலான நிகழ்வு களை துறைரீதியாக நடத்தி வருகிறது.**

கல்வி வலயங்கள் மாணவர்களிடையே மொழித் திறன் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை வருடாவருடம் நடத்தி வருகின்றன.அத்துடன் வலய நிலையிலான கற்றல் செயற்பாடுகளை நடத்தி மாணவர் களை ஊக்குவிப்பதுடன் நின்றுவிடுகின்றன.மேலதிகமாக எந்தவொரு செயற்பாடுகளையும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே முன்னெடுப்பது மிக மிகக் குறைவு.

வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல நாட்டின் எந்தவொரு வலயத்திலும் இந்த நிகழ்வுகளுக்கு மேலதிகமாக துறைசார் கல்வியை மேம்படுத்தும் நிகழ்வுகள் நடத்தப்படுவது குறைவு .

இவைகளுக்கு விதிவிலக்காக தென்மராட்சி கல்வி வலயமானது பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களின் கற்றல் தரத்தை மேம்படுத்தும் வகையிலான நிகழ்வுகளை துறைரீதியாக நடத்தி வருகிறது. வருடாந்தம் நடத்தப்படும் தமிழ் மொழித்திறன் போட்டிகள், ஆங்கிலமொழித் திறன் போட்டிகள் ஆகியவற்றுக்கு மேலதிகமாக வருடாந்தம் அழகியல் பாட ஆசிரியர்கள் மாணவர்கள் மூலம் விசேட நிகழ்வுகளை நடத்தி ஆசிரியர்கள் மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோர்களையும் கல்விச் சமூகத்தினரையும் ஊக்குவித்து வருகிறது.

வலயப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களைக் கொண்டு துறைசார் சிறந்த மாணவர்களை உருவாக்கும் நோக்குடன் இரு பகுதியினரையும் இணைத்து நிகழ்வுகளையும் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலையும் நடத்தி வருகின்றது.

இசை ஆசிரியர்களின் செயற்றிறனை அதிகரிக்க அந்தத் துறையில் கற்கும் மாணவர்களுடன் இணைந்து மாதாந்தம் ஒரு பாடசாலை என்ற ரீதியில் ஏழிசைமாலை என்னும் நிகழ்வை அயல் பாடசாலைகளுடன் இணைந்து நடத்தி வருகின்றது. இந்த நிகழ்வை மாதாந்தம் காண வரும் பெற்றோர்கள் மற்றும் கல்விச் சமூகத்தின் அதிகரிப்பு இந்த நிகழ்வுக்கு கிடைத்த பெரிய அங்கீகாரமெனலாம்.

பாடசாலைகளில் நடன பாடத்தைக் கற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியைகள் ஆகியோர் ஒரே மேடையில் நிகழ்த்தும் புதிய வடிவங்களிலான நடன ஆற்றுகைகளைக் கொண்ட ' நர்த்தன மாலை ' என்ற நிகழ்வு வலய நிகழ்வாக வருடாந்தம் பெரும் எண்ணிக்கையானோர் முன்னிலையில் நடத்தப்படுகிறது.

அடுத்து, ஒரு பாடத்துறையைக் கற்கும் மாணவர்கள் பரீட்சைகளுடன் நின்று விடாது அவர்களது திறமைகளை வளர்க்க வலயம் மேற்கொண்டுள்ள மற்றொரு நிகழ்வு 'விஷன்' எனப்படும் சித்திர பாட மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கங்களைக் கொண்ட காட்சிப் படுத்தல் நிகழ்வாகும். சித்திர பாடம் கற்கும் மாணவர் களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் நடத்தப் படும் இந்த நிகழ்வானது மாணவர்களை ஓவியக் கலையில் விற்பன்னர்களாக உருவாக்கும் என்பதில் ஐயமில்லை என்பதை காட்சிப்படுத்திய ஆக்கங்களின் மூலம் காணக் கூடியதாக இருந்தது. எண்ணெய் வர்ண ஓவியங்கள், நீர் வர்ண ஓவியங்கள் சிறுசிறு துணிகளைக்கொண்டு உருவாக்கும் ஓவியங்கள் கருத்தாழமிக்க வகையில் ஆக்கப் பொருளாக மாற்றி அவற்றை காட்சிக் கூடங்கள் மூலம் காட்சிப்படுத்தித் துறைசார் மாண வர்களை ஊக்குவித்து வருகிறது.

மேலும் சைவசமய மாணவர்களைக் கொண்டு சைவத்தின் மேன்மையை, தத்துவங்களைப் புரிய வைக்கவென தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்தி அவற்றில் பாடசாலை ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சைவ சமய ஆக்கங்கள் புராதன வடிவமைப்புகள் போன்றவற்றை காட்சிப் படுத்தல் மூலம் ஏனைய மாணவர்கள் மற்றும் பெற்றோருக்குக் காண் பித்து வருகின்றனர். இந்தக் காட்சிப் படுத்தலில் வலய உயர் அதிகாரிகளால் தெரிவு செய்யப்படும் சைவ மரபு ஆக்கங்கள் மாகாண நிலைப் போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு தெரிவு செய்யப்படும் ஆக்கங் களும் மாணவர்களும் தேசிய நிலைப் போட்டிகளில் பங்குபற்ற ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. இவ்வாறான காட்சிப்படுத்தல் மூலம் தேர்வு செய்த பல ஆக்கங்களும் மாணவர்களும் தேசிய நிலைப் போட்டி களில் வென்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

தென்னவன்



மேலும் பாடசாலைகளில் வணிகத் துறை மாணவர்களை ஊக்குவிக்கவும் அவர்களின் கல்வி நடவடிக்கையை மேம்படுத்தவுமென வலயத்தினால் வர்த்தக நிறுவனங்கள் நிதிசார் நிறுவனங்களின் பங்களிப்புடன் வருடாந்தம் ' வர்த்தக சந்தை ' என்னும் இருநாள் நிகழ்வு வணிகபாட ஆசிரியர்கள் மாணவர்களால் நடத்தப்பட்டு வருகிறது.இந்த நிகழ்வில் வணிக பாட மாணவர்கள் தொழில்நுட்பப் பாட மாணவர்கள் ஆகியோரால் உருவாக்கப்பட்ட ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தப் படுகின்றன. இரு தினங்கள் நடத்தப்படும் வர்த்தக சந்தையை பார்வையிட வலயப் பாடசாலை களின் மாணவர்களும் பெற்றோர்களும் பொது மக்களும் வருகை தந்து நிகழ்வை ஊக்குவித்து வருகின்றனர். இந்த வர்த்தக சந்தையை பார்வையிட வருவோரை மகிழ்விக்கும் நாட்க ஆற்றுகைகள் ஏழு பாட சாலைகளின் மாணவர்களால் வருடாவருடம் மேடையேற்றப்படுகின்றன.



மாணவர்களைக் கல்வி மூலம் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி ஊக்குவிக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள், அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஏனெனில் தமது தொழில்சார் கடமையுடன் நின்று விடாது துறைசார் மாணவர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் இவர்கள் தமது நேரத்தைச் செலவிடுகின்றனர்.

இந்த வகையில் பாடசாலைகளில் சித்திர பாடம் கற்கும் மாணவர்களால் ஆக்கப்பட்ட 100க்கு மேற்பட்ட ஆக்கப் பொருள்களைக் கொண்ட 'விஷன்' 3 ஓவியக் காட்சி நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் ( கல்வி முகாமைத்துவம் ) பீ. முத்துலிங்கமும் கலந்து கொண்டனர்.

'விஷன்' 3 ஓவியக் காட்சியைப் பார்வையிடவென வலயத்தைச் சேர்ந்த பெருமளவு மாணவர்களும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வலயத்தில் அழகியற் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராக, கடமையாற்றி ஓய்வுபெற்ற கோ.கைலாசநாதன் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும், தமது சேவைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'விஷன்' ஓவியக் காட்சித் திட்டம் சோர்ந்து போகக் கூடாது என்ற நோக்கில் அதனைத் தொடர்ந்து நடத்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஊக்கம் கொடுத்து ஆக்கங்களைக் காட்சிப் படுத்தியுள்ளார் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் அங்கு மாணவர்களால் ஓவியங்களாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து ஓவியங்களுக்குமான விளக்கங்களை விருந்தினர்களுக்கும் மாணவர்களுக்கும் எடுத்தியம்பிய விதம் அவரின் சேவையின் மகத்துவத்தை உணர்த்தியது. இவருக்குப் பக்கபலமாகத் தற்போது அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் திருமதி சுனிதா ஆரியரத் னவின் கடமையுணர்வும் பாராட்டத்தக்கது. மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்ட 100க்கு மேற்பட்ட ஆக்கங்களில் சிறந்தது எது எனத் தரம் பிரிக்க முடியாத அளவுக்கு சகல ஓவியங்களும் சிறப்பாக அமைக்கப் பட்டிருந்தன. அவற்றை உருவாக்கிய அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுக்கள் .

அவற்றில் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட விளக்கங்களின் பிரகாரம் மனித தோற்ற ஆரம்பம் தொடக்கம், தற்போதைய நிலைமை வரை நாகரிகம் என்னும் 13 வடிவங்களை ஒரு சித்திரமாக அமைத்திருந்த ஓவியமும் –

ஒரு கை இல்லாத போதிலும் தன்னம்பிக்கையுடன் கல்வி கற்றும் மாணவனின் நம்பிக்கை ஓவியம் –

மரங்கள் தறிக்கப்படுவதால் இயற்கை வளம் அழிந்து எமது பிரதேசம் பாலைவனமாக மாறவுள்ள காட்சியும்

தற்போது பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுபோல், பெரிய இடங்களும் ஏனைய பாடங்களுக்கு ஓரமாக சிறிய இடங்களும் குறிப்பிடப்பட்டுள்ள காட்சியும் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்வனவாய் அமைந்திருந்தன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘மானியின் குரல்’ பத்திரிகை வெளியீடு





மானிப்பாய் இந்துக் கல்லூரியின் காண்பிய ஊடக கழகத்தினரால் ‘மானியின்குரல்’ எனும் பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளது. காண்பிய ஊடக கழகத்தின் தலைவர் அ.மோகனபிரியன் தலைமையில் கல்லூரியின் வி.எஸ்.துரைராஜா திறந்தவெளி அரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கல்லூரி முதல்வர் எம்.இந்திரபாலா பத்திரிகையை வெளியிட்டு வைக்க, கல்லூரியின் பழையமாணவர் சங்கத் தலைவர் ரி.பிரதீபன் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.
நிகழ்வில் கலந்துகொண்ட கல்லூரி முதல்வர் எம்.இந்திரபாலா பத்திரிகையை வெளியிட்டுவைத்து உரையாற்றும்போது–
மானிப்பாய் இந்துக்கல்லூரியின் காண்பிய ஊடக கழத்தினரால் வெளியிடப்படுகின்ற இந்த முயற்சி பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். மாணவர்கள் தமது திறன்களை இத்தகைய வெளியீடுகளின்மூலம் வெளிப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த முயற்சிக்கு காரணமாக இருந்த பொறுப்பாசிரியர் மற்றும் மாணவர்களைப் பாராட்டுகின்றேன் – என்றார்.
பத்திரிகையின் முதற்பிரதியைபெற்றுக்கொண்டபின்னர் பழையமாணவர் சங்க தலைவர் ரி.பிரதீபன் உரையாற்றும்போது –
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் இன்றைய தினம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். இதுவொரு நல்லதொரு முயற்சி. பாடசாலை தொடர்பான விடயங்களை ஆவணமாக்குகின்ற செயற்பாட்டுக்கு இது உதவும். இத்தகைய முயற்சிகளுக்கு பழைய மாணவர் சங்கம் எப்போதும் ஆதரவாக இருக்கும். இந்த முயற்சியில் உழைத்த அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள் – என்றார்.
காண்பிய ஊடகக் கழகத்தின்பொறுப்பாசிரியரும், பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான எஸ்.ரி.அருள்குமரன் உரையாற்றும்போது –
மானிப்பாய் இந்துக்கல்லூரியானது, நீண்ட வரலாற்றுப் பெருமையைக் கொண்ட பாடசாலையாகும். சுவாமி விபுலானந்தர் அதிபராக இருந்த சிறப்புக்குரிய பாடசாலையாகும். இத்தகைய சிறப்பை உடைய பாடசாலையில் இன்று மிக முக்கிய நாள். ‘மானியின்குரல்’ எனும் பத்திரிகையானது, மாணவர்களது ஆளுமைகளை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்ட வகையிலும், பாடசாலை நிகழ்வுகளை ஆவணப்படுத்துகின்ற வகையிலும், வெளிவருகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும். இந்த வாய்ப்பை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்தி வெற்றிபெற வாழ்த்துக்கள் – என்றார்.
நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர், உபஅதிபர், பகுதித் தலைவர்கள் ,ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.













# புங்கையூர் ராகுலனின் கவிதை நூல் வெளியீடு



புங்குடுதீவைச் சேர்ந்த இளம் கவிஞரான புங்கையூர் ராகுலன் எனும் விவேக் ராகுலனின் ‘புலம்பெயரும் மனித வாழ்க்கை’ எனும் கவிதைநூல்வெளியீடு கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் டயான் தலைமையில் இடம்பெற்றது.
படைப்பாளிகள் உலகத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இந்தக் கவிதைநூல் வெளியிடும் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். நிகழ்வில் படைப்பாளிகள் உலக இயக்குநர் ஐங்கரன் கதிர்காமநாதன், மருத்துவர் க.சிறீதரன், சர்வோதய இயக்குநர் செல்வி பொன்.ஜமுனாதேவி, புங்குடுதீவு தாயகம் அமைப்பின் போசகர் சுலோச்சனா தனபாலன், புங்குடுதீவு அமெரிக்கமிஷன் பாடசாலை அதிபர் வி.யோகராணி, புங்குடுதீவைச் சேர்ந்தவரும், நல்லூர் பிரதேச கிராம அலுவலருமான ப.தர்சானந், பாடகர் எஸ்.ஜி.எஸ்.கோகுலன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டதுடன், சிறப்பு பிரதிகளையும் பெற்றுக்கொண்டனர்.
ஊரவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தின் புதிய பிரிவு சனிக்கிழமை ஆரம்பம்

நாடகக் கலையின் மேம்பாடு கருதி, செயல்முறை சார்ந்த தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப்பயிலகம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நடத்தி வருகின்ற நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் 2016ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு எதிர்வரும் (21 ஆம் திகதி) சனிக்கிழமை மாலை 4.00மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.
இந்தப் பயிற்சி நெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தை தரம் 11,12,13 இல் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் சனி,ஞாயிறு தினங்களில் பி.ப 3.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறுவுள்ளதுடன் போயா தினங்களில் முழுநாள் நாடகப் பட்டறையாகவும் நடைபெறவுள்ளது.
இந்தப் பயிற்சி நெறியில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத் துணைக்கலைகள் (வேடஉடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளிவிதானிப்பு), நாடகத் தயாரிப்பு, கூத்துப்பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரிசனங்கள்-7

அப்புச்சி

யாழ்.கே.கே.எஸ். வீதியில், தட்டாதெருச் சந்திக்கு அண்மையாக அமைந்திருந்தது சிரித்திரன் சஞ்சிகையின் ஆசிரியர் சுந்தர் ஐயாவின் இல்லம்.

அவரது இல்லத்துக்கு அனேகமானவர்கள் வந்துபோவார்கள். உயர் மட்ட, அடிமட்ட மற்றும் நடுத்தர வர்க்க மனிதர்கள் யாவரும் ஐயாவுடன் நெருங்கியவர்களாக இருந்தார்கள். இப்படிப் பலரும் அவரை நாடிச் சென்றதன் காரணம், அவரிடம் காணப்பட்ட மனிதப் பண்பு என்றே கூறலாம்.

இந்த மனிதப் பண்பு ஒன்றே சிரித்திரன் சஞ்சிகைக்கு பல வாசகர்களைத் தேடிக் கொடுத்தது என்பது மிகையான கூற்றல்ல. மனிதர்களைச் சிரிக்கவும், அந்தச் சிரிப்பினூடு சிந்திக்கவும் வைத்தவர் சுந்தர் ஐயா.

எண்பதுகளின் பிற்பகுதியான காலம் அது!

சிறுகதைகள் எழுத ஆரம்பித்த அந்த நாள்களில், எழுதிய ஒரு சிறுகதையை சிரித்திரன் சஞ்சிகைக்கு அனுப்ப வேண்டும் என நினைத்த நான், அந்தப் படைப்பை நேரடியாக அவரிடம் கொடுத்து, என்னையும் அறிமுகப்படுத்திவிட்டு வரலாம் என்று நினைத்தபடி ஒரு நாள் பின்னேரப் பொழுதில் சிரித்திரன் இல்லத்துக்கு சுந்தர் ஐயாவைச் சந்திக்கச் சென்றேன்.

நான் சென்ற சமயம் ஐயா வீட்டிலே நின்றிருந்தார். என்னைக்கண்டதும், வீட்டினுள் வரவழைத்து உட்கார வைத்து வந்த விடயம் பற்றிக் கேட்டார்.

நான், சிரித்திரன் சஞ்சிகைக்கு சிறுகதையொன்று எழுதிக் கொண்டு போயிருந்த விடயத்தைக் கூறினேன். அப்போது அவர் மிகுந்த முக மலர்ச்சியுடன், அந்தச் சிறு கதையை வாங்கி மேசை மீது வைத்து விட்டு, என்னைப் பற்றிய விவரங் களைக் கேட்டார்.

நான் என்னைப்பற்றி அவரிடம் கூறும் போது, நான் சாதாரண தொழிலாளி ஐயா... என்று வெளிப்படையாகவே அவர்முன் கூறி விட்டேன்.

நான் ஒரு சாதாரண தொழிலாளி என்றதும்... ஐயா இரண்டொரு வினாடி என்னை உற்றுப் பார்த்துவிட்டு, முகத்தில் சிறுபுன்னகை மலர என்னைப் பார்த்துக் கூறினார்.

தொழில்களிலே சாதாரணம், உயர் தரம் என்று எதுவுமில்லைத் தம்பி. எல்லாமே மனித வாழ்வியக்கத்துக்குத் தேவையான தொழில்கள் தான். ஒருவர் செய்யும் தொழிலானது இன்னொருவரைத் தாங்கி வழி நடத்த உதவுகின்றது. செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவன் தெருவிலே குந்தியிருக்காவிட்டால், இன்னொருவன் நடக்கும்போது அறுந்த செருப்பை அவன் வீடுவரை காவிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். நகரசுத்தி தொழிலாளி தனது விளக்குமாற்று வண்டிலோடு நகரத்தின் மத்தியில் வலம்வராவிட்டால், இந்த நாகரிக மனிதர்கள் எல்லோரும் மூக்கைப் பொத்திக் கொண்டுதான் நடக்க வேண்டிவரும். மனிதன் என்பவன் தான், தனது சக மனிதனைச் செய்யும் தொழிலால் சாதி பிரித்து, சமத்துவமற்ற விதத்தில் வாழ்கிறானே தவிர, தொழில்கள் தொழில்களாகவே இருக்கின்றன. அந்தத் தொழில்களே அவரவரின் வயிற்றுக்கு உணவு போடுவதால், செய்யும் தொழிலை விசுவாசத்தோடும் கடமை உணர்வோடும் செய்ய வேண்டும்.

ஐயா கூறிய கருத்துக்களை என் செவிகள் உள்வாங்கியபோது, அவர் ஒரு வித்தியாசமான மனிதராகவே என் மனதுள் பதிந்து கொண்டார்.

நான் அவரிடம் கொடுத்த அந்நிய நாட்டு மோகங்கள் எனும் அந்தச் சிறுகதை அவருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. பிறிதொரு தடவை நான் அவரிடம் சென்ற போது, அந்தச் சிறுகதை குறித்து ஓரிரு குறைகளைச் சுட்டிக் காட்டி ஏனைய நிறைகளைப் பாராட்டவே செய்தார். எழுத ஆரம்பித்த அந்த நாள்களில் அவருடைய அந்தப் பாராட்டுதல் ஒன்றே என்னை மேலும் இலக்கியத் தேடலுக்கான வழிகளைத் திறந்து விட்டது என்றே கூறலாம்.

அதன்பின் நான் ஐயாவிடம் அடிக்கடி செல்ல ஆரம்பித்தேன். அவர் தன்னிடம் வருபவர்களிடம் என்னைப் பற்றி அறிமுகம் செய்து வைப்பார். இவர் ஓர் இளம் எழுத்தாளர்.. என்று கூறுவார். ஐயாவுக்கும் எனக்குமான வயசும் படிப்பும் மலைக்கும் மடுவுக்கும், சமனாக இருந்தன. ஆயினும் ஐயா என்னைப் போன்றவர்களை ஒரு நண்பராகவே கணிப்பிட்டுக் கதைப்பார்.

ஒரு தடவை ஊருக்குச் சென்று சில நாள்கள் தங்கிய பின், மீண்டும் வேலைக்குத் திரும்பியபோது, அங்கு எனக்கான இடத்தில் வேறு ஒருவரைப் பணிக்கு அமர்த்தி விட்டார்கள். நான் ஏமாற்றத்துடன் ஐயாவிடம் வந்து, விடயத்தைக் கூறிவிட்டு ஊருக்குப் புறப்பட ஆயத்தமானபோது, ஐயா பின்வருமாறு கூறினார்.

நீர் எதற்கும் கவலைப்படாமல் போம். நல்லதொரு செய்தி உம்மைத் தேடி வரும்..

அவரது வார்த்தை.. ஏதோ எனது மன ஆறுதலுக்குக் கூறுவதாக நான் நினைத்துக் கொண்டு ஊருக்குப் போய்விட்டேன்.

சுமார் இரண்டு வாரத்தின் பின்பு எனது வீட்டுக்கு ஒருவர் வந்தார். வந்தவர் சுந்தர் ஐயா கூறிய தகவலை என்னிடம் சொன்னார்.

உடனடியாக யாழ்.வைமன் றோட்டில் இயங்குகின்ற ஈழநாதம் பத்திரிகை ஊடகத்தில் பசீர்க்காக்கா என்பவரைச் சந்திக்கவும், அவர் மேற்கொண்டு எல்லா உதவிகளையும் செய்வார்.

எனக்கு எதுவும் புரியவில்லை. செய்தி கொண்டு வந்தவருக்கும் மேலதிக தகவல்கள் தெரியவில்லை. உடனே அவரை அனுப்பி விட்டு, மறுநாள் குறிப்பிட்ட ஈழநாதம் பத்திரிகை ஊடகத்துக்குச் சென்று, பசீர்க்காக்காவைச் சந்தித்தேன்.

அவர் சொன்ன தகவல் எனக்கு மேலும் அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருந்தது.

சுந்தர் ஐயா உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். இங்கு ஒப்பு நோக்குநர் பயிலுநர் வேலைக்கு உங்களை இணைத்துக் கொள்ளுமாறும், தங்குமிடம், சாப்பாட்டு வசதியையும் செய்து கொடுக்குமாறும் கூறியிருக்கிறார்.

பசீர்க்காக்கா கூறிவிட்டு, என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்.

அன்றைய நாள்... என்னால் மறக்க முடியாத.. எனது வாழ்க்கையின் பாதையை மாற்றியமைத்த நாள் என்றே கூறவேண்டும்.

எங்கோ ஒரு மூலையில், யாருடைய கண்களுக்கும் புலப்படாமல் மழையிலும், வெயிலிலும், பனியிலும், குளிரிலும் ஓர் அரிசி ஆலையில் உடல் வருத்தி இன்னொருவனின் முன்னேற்றத்துக்காக உழைத்துக் கொண்டிருந்த என்னை... தனது பரிந்துரைமூலம் ஊடகத்துறைக்குள் உள்நுழைத்துவிட்ட சுந்தர் ஐயாவை நினைத்துப் பார்க்கிறேன்.

எந்தவொரு சாதாரண தொழிலாளிக்கும் கிடைக்க முடியாத சந்தர்ப்பம் இது. எனக்குள்ளே இருந்த எழுத்தாற்றலை இனம் கண்டு கொண்ட அந்த மாமனிதர் இன்று எங்களோடு இல்லை. இருப்பினும், பத்திரிகைகளில் எனது கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் பிரசுரமாகி, அவற்றை நான் மீள வாசிக்கும்போது, அந்தப் படைப்புக்களினூடாகவே சுந்தர் ஐயா என்னைச் சுகம் விசாரிப்பதாக நான் உணருகிறேன்.

அவருடன் கூட இருந்து அனுபவித்த அவரது முகதரிசனங்கள்... ஊடகத்துறையில் இனியும் எனது முன்னேற்றத்துக்கு வித்திடும்! வெளிச்சம் தரும்!

(தொடரும்)

மனிதன் என்பவன் தான், தனது சகமனிதனைச் செய்யும் தொழிலால் சாதி பிரித்து சமத்துவமற்று வாழ்கிறானே தவிர, தொழில்கள் தொழில்களாகவே இருக்கின்றன. அந்தத் தொழில்களே அவரவரின் வயிற்றுக்கு ஆகாரம் போடுவதால், செய்யும் தொழிலை விசுவாசத்தோடும் கடமை உணர்வோடும் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையை வாழ்க்கையாக மாற்றிய ஐயாக்கண்ணு தேசிகர்

கே.எஸ்.சிவஞானராஜா

கர்நாடக சங்கீதம், பண்ணிசை, மெல்லிசை, நாட்டார் இசை, பொப்பிசை, சினிமா இசை, ஹிந்துஸ்தானி இசை, மேலைத்தேய இசை என்பவை இலங்கை மக்களின் வாழ்க்கையை ஏதோவொரு வகையில் செப்பனிட்டு, வளமாக்கி, நீடு வாழ வைத்துள்ளன. அந்த நோக்கில் கர்நாடக சங்கீதம் இன்றுவரை உயிரோடு இருப்பதற்குக் காலத்துக்குக் காலம் இந்தியாவிலிருந்து வருகை தந்து இசைப் பணியாற்றிய இந்தியக் கலைஞர்களும், பிரதான காரணகர்த்தாக்களாக மிளிர்கிறார்கள். அவர்களுள் முக்கியமானவர்களாக,

மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், மகாராஜபுரம் சந்தானம், கல்யாண கிருஷ்ண பாகவதர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, ஐயாக்கண்ணு தேசிகர், ஏ.எஸ்.இராமநாதன், பி.ஏ.எஸ்.இராஜசேகரன், ஓதுவார் மறைக்காடர் ஆகியோர், இலங்கையின் இசை வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்களாவர். இத்தகு இசை விற்பன்னர்களிடம் இசை பயின்றவர்கள் இப்போதும் வாய்ப்பாட்டு, வாத்தியம் இரண்டிலும் பிரபல்யம் பெற்றவர்களாக விளங்குகின்றார்கள் அந்தவகையில், தேசிகரிடம் யாழ்ப்பாணம் பெற்ற பேறுகளை, அவரது நூற்றாண்டு பிறந்த தினமான கடந்த 6ஆம் திகதி அனுபவித்தமை சாலவும் பொருத்தமானதாகும். ஐயாக்கண்ணு தேசிகருக்கென ஒரு பயபக்தியான இரசிகர் கூட்டமும், மாணவர்களும் சங்கீத உலகை வலம் வந்து இலங்கையில் வரலாறு படைத்திருக்கிறார்கள். இப்போதும் போற்றி வணங்குகிறார்கள்

## இசைக்கல்லூரி

இலங்கையில் 1961 ஆம் ஆண்டு, சேர் பொன். இராமநாதன் சிந்தனையில் தோன்றிய ஒரு கருவூலத்தை, அவரது மருமகனான கலாநிதி சு.நடேசபிள்ளை யாழ்ப்பாணத்தின் கண் அமைந்த மருதனார்மடத்தில் ஸ்தாபித்தார். இந்தியா போன்று இலங்கையிலும் ஓர் இசைக் கல்லூரியாக அது மிளிர்ந்தது. அதிலே முதலாவது அதிபராக மகாராஜபுரம் விஸ்வநாத ஐயரும், தொடர்ந்து சந்தானம், கல்யாண கிருஷ்ண பாகவதர், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை என்பவர்களோடு ஐயாக்கண்ணு தேசிகரும் அதிபராக இருந்து, இசை கற்பித்து யாழ்ப்பாணத்தை அலங்கரித்துள்ளார்கள். மொத்தத்தில் சங்கீதம் என்ற கலையை மாத்திரமல்ல, பணிவு, பக்குவம், பண்பாடு, பயபக்தி, பரோபகாரம், பத்திரம், பவுத்திரம், பலம், பலவீனம், ஒழுக்கசீலம் போன்ற அனைத்து வாழ்க்கை முறைகளையும் சேர்த்தே கற்பித்தார்கள். இன்னொரு விதமாகப் பார்ப்போமாக இருந்தால், அவர்களைப் பார்த்தாலே கலை தானாக வளரும். கரங்களில் மனோதர்ம வரங்களும் கிடைக்கும்.

## சிறப்பு

ஓர் இசைக்கலைஞனுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று நீதி நூல்கள் விளம்புகின்றனவோ, அவ்விதத் தகுதிகள் யாவும் ஒருங்கே சேரப் பெற்ற இசை மேதையே ஐயாக்கண்ணு தேசிகராவார். தெய்வீகக்களை பொருந்திய சுபாவம், கள்ளங்கபடமற்ற வதனம், முதிர்ந்த சங்கீத ஞானம், எம்.எம்.தண்டபாணி தேசிகரின் நெருங்கிய உறவுமுறை, மனோதர்மகல்பித சிட்சை முறை, மற்றும் நேரத்தைத் தவப்பொழுதாக்கும் ஆன்மிக வாலாயம், வந்தவர்களை வரவேற்று உபசரித்து உபகாரம் செய்து வாசல்வரை வந்து அனுப்புகின்ற தமிழர் பண்பாடு, வானொலியிலே தவழும் இசைக் கச்சேரிகளை இலயித்துக் கேட்கும் சுபாவம், மற்றவர்களையும் மற்றக் கலைஞர்களையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் குறைசொல்லாத உயர்ந்த பண்பு, தான் ஒரு கலைப் பெட்டகமாக இருந்த போதும் நான் என்ற மமதை எள்ளளவும் இல்லாத சீரிய குணம் மற்றும் எந்தவொரு நபரையும் பார்த்த மாத்திரத்திலேயே ஆரூடம் சொல்லக்கூடிய முகராசி, எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல மேடைக்கலைஞனுக்குரிய சாரீரசரீர பந்தா அமைப்பு ஆகிய யாவும் ஒருங்கு திரண்ட வடிவமே இசைமேதை ஐயாக்கண்ணு தேசிகராவார். அவரது கனிவான குரல் நையாத மனத் தையும் நைவிக்கும் வல்லமை பெற்றது.

## பல்லவி

1985, 1986 ஆம் ஆண்டுகளிலே அளவெட்டியில் ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் மாதாந்த இசை நிகழ்ச்சியை யாம் நடத்தி வந்தோம். இசை மாணவர்களுக்காக, இசை மேதாவிகள் வழங்கும் ஒரு நிகழ்வாக இது நடைபெற்று வந்தது. இந்த இசையரங்கிலே மனோதர்ம உருப்படியான பல்லவியே பிரதான வகிபாகத் தைப் பெற்றுக் கொண்டது. பதின் மூன்று பௌர்ணமி இசையரங்குகள், நிறைவு பெற்றபின் பதின்னான்காவது இசையரங்கு பேராசான் ஐயாக்கண்ணு தேசிகருக்காக ஒதுக்கப்பட்டது. இதன் பேறாக அவரை நேரடியாகச் சந்திப்பதற்கு அவர் வாழ்ந்த மானிப்பாய் வீட்டுக்குச் சென்றேன். சிறியவனாகிய என்னை எழுந்து, வணங்கி, உட்கார வைத்து, சௌக்கியம் விசாரித்து, வந்த விடயத்தை வினவும்படி பணிவோடு கேட்டுக் கொண்டார். நானும் பல்லவி விடயத்தைக் கூறினேன். அதற்கு அவர் கூறிய பதில் முக்கியமானதே!

உங்களுக்கு எந்த வகை உருப்படி வேண்டுமானாலும் யாம் பாடுவோம்! என்ன இராகத்தில் வேண்டுமானாலும் யாம் பாடுவோம். சமமா, அதீதமா, அனாகதமா எந்த எடுப்பில் அமைந்த பல்லவியாயினும் நீங்கள் கேட்பதை எம்மால் பாடமுடியும். பக்க வாத்தியங்களால் தொந்தரவுகள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். பத்துப்பேர் இருந்தாலும் பரவாயில்லை. பல்லவி, அனுலோமம், பிரதிலோமம் இரண்டிலும் மாணவர்கள் தம்மை மறந்து இலயிக்க வேண்டும். இராகமாலிகை கற்பனாஸ்வரம் கூட மாணவர்கள் விரும்பிக் கேட்பதை யாம் பாடுவோம் என்று தெய்வச் சந்நிதியில் வரம் தந்ததுபோல் கரம் தந்தார். பிறகென்ன? தேசிகரின் அரங்குக்காகத் தவமிருந்தோம். அவரது பௌர்ணமி இசையரங்கை இரசிப்பதற்காக சங்கீத பூசணம் கணபதிப்பிள்ளை, திலகநாயகம்போல், பத்மலிங்கம், வி.கே. நடராஜா, பொன்.முத்துக்குமாரு, திலகேஸ்வரன், குமாரசாமி, சண்முகராகவன், இராதாகிருஷ்ணன், இராமநாதன் ஐயா, வர்ணகுலசிங்கம், பிராணேஸ்வரி, விஜயலட்சுமி, ஞானாம்பிகை, சுபத்திராதேவி, போன்ற வித்துவான்களும் நாதஸ்வர வித்துவான் என்.கே.பத்மநாதன், சிதம்பரநாதன், மிருதங்க வித்துவான் சிவபாதம், சின்னராசா ஆகியோர் உட்பட பல மாணவர்களும், இசை ஆர்வலர்களும் ஆவலாய் இருந்தபோது, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அந்த நிகழ்ச்சி இரண்டு நாள்களுக்கு முன்னதாகவே ஒத்திவைக்கப்பட்டது. இதனால் ஏராளமானோர் மிக்க கவலையடைந்தோம்! அது கைகூடாமலே போய்விட்டது. எம் கையில் என்னதான் இருக்கிறது?

> 1961 ஆம் ஆண்டு, சேர். பொன். இராமநாதன் சிந்தனையில் தோன்றிய ஒரு கருவூலத்தை, அவரது மருமகனான கலாநிதி சு.நடேசபிள்ளை யாழ்ப்பாணத்தின் கண் அமைந்த மருதனார்மடத்தில் ஸ்தாபித்தார்.

தற்போது, அவரது சீடர் களான திருமதி ஞானகுமாரி சிவனேசன், யசோதா, சந்திரிக்கா, வி.கே. நடராஜா, பிராணேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோர் அவரது பணியைத் தொடர்ந்தும் ஆற்றி வருகிறார்கள். அவர்களது மாணவமணிகளும் அவரது புகழை நிலை நிறுத்தி வருகிறார்கள். அவர் போன்ற ஓர் இசைமேதை இனிமேல் பிறப்பது என்பது முடியாத காரியமாகும். காரணம், அவரது மாணவி யசோ கூறுவதுபோல, சன்மானம் பெறாது இசை ஞானம் வளர்த்த தன்மானமுடைய பெறுமானமுடையவரே தேசிகராவார். எல்லோருள்ளும் முதன் மாணவியாம் திருமதி ஞானகுமாரி சிவனேசன். அறிஞர் தங்கராசாவின் மகளாவார். மருதனார்மடம் கலையரங்கிலே அவரது அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற முழுமனதோடு வடிவமைத்துக் கொடுத்தவர் ஐயாக்கண்ணு தேசிகரே. அத்தகைய பொன்மனச் செம்மலாகிய தேசிகரின் நூற்றாண்டு தினத்தை யாம் பூஜித்து அவருக்குப் பேறளிப்பது எமது பொறுப்பான கடமையாகும். வெளிநாட்டிலே, அவரது பிள்ளைகள் அவரை வணங்கி, போற்றி, முழுமனதோடு முன்னின்று பெருவிழா எடுப்பது நல்லதோர் கைங்கரியமாகும். யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீடம் இத்தகு இசைப்பேராசான்களைப் போற்றி மகிழும் என்பதில் ஐயமில்லை. இருபாலை டச்சுவீதி, இலக்கம் 15, தேசிகர் இல்லத்தில் அவரது தினம் கடந்த 8 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நினைவுகூரப்பட்டது.

## சன்மானம் கருதாத சங்கீத மேதை

தஞ்சை ஜில்லாவில், வேதாரணியமெனும் திருமறைக்காட்டில், வயலின் வித்துவான் அ.ஞானசம்பந்தக் குருக்கள் பர்வதத்தம்பாள் தம்பதியினருக்குத் தவப்புதல்வராக 1916 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதியன்று ஐயாக்கண்ணு தேசிகர் அவ தரித்தார். மூன்று வயதிலே வேதா ரணியம் அருணாசல ஐயாவிடம் இசை, பண்ணிசை, பயின்று, தந்தை யாரிடமும், கும்பகோணம் இராமச்சந்திர சாஸ்திரி களிடமும் முறையாக இசை பயின்றார். மேலதிக வித்தைகளையும், பாடங் களையும் சென்னையில் தங்கி சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கற்றுத் தேர்ச்சி பெற்றார். மனோ தர்மமும், மானிட தர்மமும் இசையில் பிரகாசித்தன.

## பக்குவம்

தெய்வீகச் சூழல், தேன் போன்ற சாரீரம், தெவிட்டாத சரீரம், மெய்யான வாழ்வு, மேலோரிடத்துப் பணிவு, மேவுகின்ற பயிற்சி, அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு, அநாயசமான கற்பனை, அனைத்தும் ஒருங்கே சேர்ந்து ஐயாக்கண்ணு தேசிகருக்கு வேண்டிய சிட்சையில் தன்னிறைவு பெற்று மேடையேறக் கூடிய வெகுமதியை அளித்தது. பக்குவத்துக்கு வரைவிலக்கணம் இவரேதான்.

## அரங்கேற்றம்

மேடைப் பக்குவம் வெளிப்பட்ட காரணத்தால் இவரது பன்னிரண்டாவது வயதில், வேதாரணியம் கோயில் சந்நிதியில், தந்தையார் வயலின் வாசிக்க, அரங்கேற்றம் நடைபெற்றது. இதன் விளைவே ஆல் இந்தியா வானொலி வரை பிரகாசித்தது. நாளொரு வண்ணமும் பொழுதொரு பயிற்சியுமாக இசை விளைந்தது. 1979 ஆம் ஆண்டு யாழ்.அண்ணாமலை மன்றம், ஐயாவுக்கு இசைப்பேரரசு என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

## ஊடகம்

உலக அரங்கிலே இவரது கலையம்சம் சர்வதேச சகவாழ்வையும், சகோதரத்துவத்தையும், அன்னியோன்னியத்தையும் வளர்த்து வரும் ஓர் ஊடகமாகக் கருதப்படுகிறது. லால்குடி ஜெயராமன், காரைக்குடி மணி போன்றோரது வாத்திய பிருந்த கானத்தில் பிரகாசித்தவர். தற்போதைய இசை விற்பன்னர்களாக சுதா ரகுநாதன், நித்திய ஸ்ரீ, பொம்பை ஸ்ரீ, நெய்வேலி சந்தான கோபாலன், ஓ.எஸ். அருண், ஓ.எஸ்.தியாகராஜா போன்றவர்கள் பின்பற்றவல்ல ஊடக இசையை எங்கும் வியாபிக்கச் செய்துள்ளார்.

அவரது பிள்ளைகளான, சிவறஞ்சினி, ஞானசுந்தரம், நர்மதாரவிச்சந்திரா, சோமசுந்தரம்தேசிகர், பாலசுப்பிரமணியம் ஆகியோர் தந்தையாருடைய இசைப் பொக்கிசத்தை, அதன் தேவை கருதி, ஓர் உலக ஊடகமாக விஸ்தாரம் செய்கின்றனர். இலங்கை, இந்திய, உலக வானொலிகள் தேசிகரை ஓர் உயர்ந்த ஊடக விருட்சமாகக் கணிப்பிட்டு அவரைக் கௌரவிக்கின்றன. இலங்கையிலும் யாழ்ப்பாணத்தில் லயன்.காண்டீபன் பெரியாருடைய இல்லத்தில் (இருபாலையில்) தேசிகரை நினைவுகூர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. மெய்யாகவே ஐயாவை நாமும் உணர்ந்து பேறாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மேசை அலங்காரப் பொருள்

மேசை அலங்காரப் பொருள்கள் அறிமுகமாகியுள்ளன. உலோகப் பொருள்களில் இருந்து வடிவமைக்கப்பட்ட உருவங்கள் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. அன்பளிப்புப் பொருளாகவும் அலங்காரப் பொருளாகவும் பயன்படுத்த முடியும். இவை 450 ரூபா தொடக்கம் 750 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# இது புதுசு



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 800 | 700 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 500 | 200 | – |
| கணவாய் | 600 | 700 | 500 | 500 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 700 | – | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 600 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 500 | 600 | 300 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | – | – |
| கும்பிளா | 400 | 500 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 450 | 300 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | 500 | 300 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 400 | 300 |
| நகரை | 250 | 300 | – | 250 | 600 | – | 320 |
| ஆடை | 150 | 200 | 100 | 200 | 200 | – | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 200 | 400 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | – | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | – | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 200 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |

## நாளை
வைகாசி-06
வியாழக்கிழமை - 19.05.2016
திதி: திரயோதசி மு.இ.11.18 வரை
நட்சத்திரம்: சித்திரை
பி.ப.02.34 வரை
ராகுகாலம்: 01.22-02.52 வரை
சுபநேரம்: 07.22-08.52 வரை
பிரதோஷ விரதம்

## வெங்காய சாதம்



**தேவையான பொருள்கள்**
அரிசி – 2 சுண்டு
வெங்காயம் (பொடியாக நறுக்கியது) – 4
பச்சை மிளகாய் – 3
கராம்பு – 2
ஏலக்காய் – 2
பட்டை – சிறிது
வெண்ணெய் – 1 கப்
உப்பு – சிறிது
வறுத்த முந்திரி – ஒரு கைப்பிடி

**செய்முறை:**
அரிசியை நன்கு களைந்து ஊற வைக்கவும்.
குக்கரில் வெண்ணெய் சேர்த்து அது உருகியதும் ஏலக்காய், கராம்பு, பட்டை சேர்த்துத் தாளிக்கவும்.
அதில் வெங்காயத்தையும், கீறிய பச்சை மிளகாயையும் போட்டு பொன்னிறமாக வதக்கவும்.
நன்கு வதங்கியதும் அரிசியையும் போட்டு வதக்கவும்.
பிறகு 4 கோப்பை தண்ணீர் ஊற்றி உப்பைச் சேர்த்து வேக விடவும்.
அரிசி நன்கு வெந்தவுடன் இறக்கி, வறுத்த முந்திரி கொண்டு அலங்கரிக்கவும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 80 | 120 | – | 40 | 70 |
| கத்தரி | 140 | 80 | 80 | 100 | 100 | 140 | 70 | 80 |
| கரட் | 120 | 120 | 80–200 | 100 | 160 | 140 | 70 | 140 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50 | 80 | 40 | 40 |
| பயிற்றை | 200 | 120 | 80 | 140 | 170 | 100 | 90 | 100 |
| பாகல் | 140 | 120 | 130 | 140 | 160 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 100 | 140 | 100 | 160 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 40 | 40 | 15 | 35 |
| தக்காளி | 100 | 140 | 140 | 180 | 160 | 240 | 140 | 180 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 30 | 40 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 200 | 200 | 200 | 300 | 300 | 60 | 200 |
| புடோல் | 100 | 60 | 120 | 60 | 60–80 | 80 | 30 | 80 |
| கோவா | 140 | 120 | 100 | 120 | 120–140 | 160 | 90 | 100 |
| வெண்டி | 100 | 80 | 80 | 120 | 100–120 | 120 | 50 | 80 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 180 | 180 | 200 | – | 180 |
| லீக்ஸ் | 200 | 160 | 100–160 | 120 | 160 | 250 | 100 | 140 |
| தேங்காய் | 40 | 20 | 50 | 40 | 30–40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 | 100–120 | 100 | 75 | 120 |
| தேசிக்காய் | 500 | 350 | 600 | 350 | 300–400 | 250 | 350 | 350 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 15 | 15–20 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 140 | – | 200 | 140 | 150–160 | 160 | – | 150 |
| இராசவள்ளி | 150 | 140 | 180 | 150 | 160–180 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 150 | 150 | 120–180 | 240 | 150 | 150 |

எம் எல்லோரையுமே திரும்பிப் பார்க்க வைக்கும் ஒரே விடயம் அழகு தான். இதனால் தான் நாமும் அழகுடன் வலம் வர விரும்புகின்றோம். அதேபோல எம்முடைய வாகனம், வீடு உள்ளிட்டவற்றையும் அழகுபடுத்த முயற்சிக்கின்றோம்.. இந்த முயற்சியில் வீடு அழகு படுத்தல் என்பது உண்மையிலேயே ஒரு கலையே. சிலர் வீட்டை மாதத்துக்கு ஒரு முறை மாற்றியமைப்பார்கள்.
வீட்டை அலங்கரிப்பது என்பது தனிக் கலை. இதற்காக அதிகம் சிரமப்பட வேண்டாம். சின்னச் சின்ன ரசனையோடு, எமக்கு கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வீட்டை அலங்கரிக்கலாம். இவ்வாறு செய்தாலே போதும், எமது வீடும் கூட அரண்மனை போல மாறும்.
உங்கள் வீட்டை அழகாக மாற்ற இதோ சில ஆலோசனைகள்.

**மகிழ்ச்சி, புத்துணர்ச்சி தரும் பூக்கள்:**
வீட்டின் நுழைவு வாயிலின் வலது பக்க மூலையில் வட்டமான பாத்திரத்தில், தண்ணீர் நிரப்பி, அதில் உங்களது வீட்டுத் தோட்டத்தில் பூக்கும் சிறு பூக்களை அடர்த்தியாய் அழகாக பரப்பி விடவும். இந்த பூக்கள் அலங் காரத்தை பார்க்கும் போதே மனதில் புத்துணர்ச்சி எழும்.

**இயற்கைக் காட்சிகள் :**
வீட்டின் ஹோலில் நுழைந்தவுடன் கண்ணில்படும் இடத்தில் சுவரில் இயற்கைக் காட்சிகளின் படம் அல்லது குழந்தைகளின் படத்தை மாட்டி வைக்கலாம். இவை பார்த்தவுடன் உற்சாகத்தை தரும். ஹோலின் 'ரீப்போ' மீது மடித்து வைத்த பேப்பர்கள், தாமிரத்திலான சிரிக்கும் புத்தர் அல்லது பிள்ளையார் பொம்மை ஒன்றை வைக்கலாம். அல்லது மெழுகுவர்த்தியை ஸ்ராண்டுடன் வைக்கலாம். சின்ன ஷோகேஸ் செய்து ஹோல் சுவர் நடுவே அமைத்து அதில் அலங்கார பொருள்களை வைக்கலாம். டீபாய் மேல் சின்னதாய் ஒரு பூச்சாடி வைத்து உங்களது வீட்டுத் தோட்டத்தில் பூத்த பூக்களை அன்றாடம் பறித்து அலங் கரிப்பதும் வீட்டை உயிரோட்ட முள்ளதாக மாற்றும்.



# வீட்டை அழகாக்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




மௌவல்

வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் திரும்பிப் பார்க்கும் போது முகத்தில் ஒரு புன்னகை வரக்கூடிய வகையில் வாழ்ந்து விட்டால் போதும்.

# விஜயுடன் படப்பிடிப்பில் இணைந்த கீர்த்திசுரேஷ்!

''தெறி'' படத்துக்குப் பிறகு தற்போது நடித்துவரும் தனது 60 ஆவது படத்தில் நடித்து வருகிறார் விஜய். "அழகிய தமிழ் மகன்" படத்தை இயக்கிய பரதன், இந்தப் படத்தை இயக்குவதன் மூலம் 9 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் "இளையதளபதி" விஜயுடன் இணைந்திருக்கிறார். "அழகிய தமிழ் மகன்" படத்தில் மதுரைப் பின்னணியில் கதைக்களம் அமைத்திருந்த பரதன், "விஜய்60" படத்துக்காக திருநெல்வேலி பின்னணியைக் களமாக்கியிருக்கிறார். குடும்ப ரசிகர்களைக் கவரும் வகையில், கிராமத்துப்படமாக உருவாக உள்ள இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடியாக முதல் முறையாக கீர்த்தி சுரேஷ் நடிக்கிறார். அதே போல் சந்தோஷ் நாராயணன், விஜய் படத்துக்கு இசையமைப்பதும் இதுவே முதல்முறை. ''தெறி'' படத்தின் வெளியீடு காரணமாக படப்பிடிப்பு நடைபெறாமல் இருந்தது. இந்த நிலையில், தற்போது முழுவீச்சில் "விஜய்60" படத்தின் படப்பிடிப்பு திருநெல்வேலி சுற்று வட்டாரங்களில் நடைபெறுகிறதாம். இந்தப் படப்பிடிப்பில் தற்போது நடிகை கீர்த்தி சுரேஷும் இணைந்திருக்கிறார்.



படித்ததில் பிடித்தது

## இம்சை தத்துவங்கள்!!

தையல் காரரும், சிகை அலங்கரிப்பவனும் வெட்டி வெட்டித் தான் சாம்பாதிக்கிறாங்க. அதனால் அவங்களை வெட்டி வேலை செய்யறாங்கள் என்று சொல்ல முடியுமோ...?

ரயில் எவ்வளவு தான் வேகமாகப் போனாலும் கடைசி பெட்டி கடைசியாகத் தான் போகும்.

பேப்பர் போடுறவன் பேப்பர் காரன். பால் கொடுப்பவன் பால் காரன். தபால் கொடுக்கிறவன் தபால் காரன்.... நான் கேட்கிறேன்.... அப்போ பிச்சைப் போடுறவன் பிச்சைக்காரனா?

பாம்பு எத்தனை தடவை படம் எடுத்தாலும் சரி. அது தியேட்டரில் ரிலீஸ் ஆகாது.

என்னதான் நீங்க அகிம்சாவாதியாக இருந்தாலும், அமைதியை நேசிப்பவராக இருந்தாலும்.... ரொட்டியைச் "சுட்டு" தான் சாப்பிடணும்.

தையல் போடுறாங்க என்பதற்காக மருத்து வரை எல்லாம் ரெய்லர்கள் என்று சொல்லக்கூடாது.

என்ன தான் "தி.மு.க" காரர்கள் மாடுகளுக்குச் செல்லம் கொடுத்து ஆசை ஆசையாய் வளர்த்தாலும், அது "அம்மா" என்று தான் கத்தும்.

என்ன தான் நீ மாடா உழைச்சாலும் உனக்குத் தலையிலை கொம்பு முளைக்காது.

நீங்க எவ்வளவு பெரிய கோபக்காரனாக இருந்தாலும், மகா வீரனாக இருந்தாலும், குளிர் அடிச்சாலும் கரெண்ட் அடிச்சாலும் உங்களால் திருப்பி அடிக்க முடியாது.

நான் கேட்கிறேன்.... கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பானால், அது பேப்பர் சாப்பிடுமா? சீனி சாப்பிடுமா?

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | 6 | | |
| | | | | 8 | 5 | 7 | | |
| | 8 | | | | | | | |
| 1 | | 5 | | 9 | | 3 | | 8 |
| 6 | | | 1 | | | | | 7 |
| 8 | | | 2 | | | 9 | | |
| | | | | 7 | | 8 | 5 | |
| | 4 | | | | | | | |
| | 9 | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 5 | 4 | 7 | 9 | 3 | 6 | 8 |
| 4 | 3 | 6 | 2 | 8 | 1 | 7 | 5 | 9 |
| 9 | 7 | 8 | 6 | 3 | 5 | 2 | 4 | 1 |
| 6 | 8 | 4 | 9 | 5 | 7 | 1 | 3 | 2 |
| 3 | 5 | 9 | 8 | 1 | 2 | 4 | 7 | 6 |
| 7 | 2 | 1 | 3 | 6 | 4 | 9 | 8 | 1 |
| 1 | 6 | 7 | 5 | 2 | 3 | 8 | 9 | 4 |
| 5 | 4 | 3 | 1 | 9 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 9 | 2 | 7 | 4 | 6 | 5 | 1 | 3 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழை க் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



**மேடம்:** மனதில் புதிய சிந்தனை உருவாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**இடபம்:** பிறர் விமர்சனம் வருத்தம் தரலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கும் அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. பாதுகாப்பு குறைந்த இடத்துக்குச் செல்வது கூடாது. பிள்ளைகளின் செயற்பாடு நிம்மதி தரும்.

**மிதுனம்:** பணி நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். விடாமுயற்சியால், தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பெண்கள் சிக்கனம் மூலம், செலவைக் குறைக்க முயல்வர்.

**கடகம்:** அடுத்தவர் நலன் காப்பதில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேறுவதற்கான, புதிய வாய்ப்பு கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினருக்கு தாராளமாக செலவழிப்பீர்கள்.

**சிங்கம்:** செயலில் தகுந்த முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் தேவை. சுப விடயத்தில் தாமதம் உண்டாகும்.



**கன்னி:** கருணை மனதுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். நிலுவைப் பணம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**துலாம்:** குடும்ப விடயம் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் இலாபம் காண்பீர்கள். உடல் நலனில் அக்கறை தேவை. உறவினர்களிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும்.



**விருச்சிகம்:** உறவினருக்கு உதவும் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். வாகனப் பயணம் மூலம் இனிய அனுபவம் உண்டாகும்.

**தனுசு:** பேச்சில் அன்பும், பண்பும் கலந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சி பெற, புதிய திட்டம் தீட்டுவீர்கள். காணாமற் போன பொருள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்களால் உதவி உண்டு.

**மகரம்:** உங்களின் யதார்த்தப் பேச்சு பிறரைச் சங்கடப்படுத்தும். தொழிலில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

**கும்பம்:** செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்புத் தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள் செலவுக்குக் கடன் வாங்க நேரிடும். உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** பிறரிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் பன்மடங்கு உயரும். சுப விடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அறைகூவல் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வு, முள்ளிவாய்க்கால் கிழக்கில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழர்களின் வாழ்வில் இரத்தம் தோய்ந்த சரித்திரம் எழுதப்பட்ட நாள் இன்று. மனிதாபிமானத்துக்கான போர் என்று பன்னாடுகளுக்குப் பகிரங்க அறைகூவல் விடுத்து, ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் மனிதாபிமானமின்றிக் கொன்றொழித்த கொடுந்துயர் நாள். பன்னாட்டுச் சட்டங்கள், போர் விதிமுறை மீறல்கள் என்று எவற்றைப் பட்டியலிட்டுள்ளதோ, அத்தனை மீறல்களையும் புரிந்து நடத்தப்பட்ட போர் முடிவுக்கு வந்த நாள்.

சாவுகளைக் கண்டு துவண்டு விடவில்லை. அவற்றிலிருந்து நாம் மீண்டு வந்திருக்கின்றோம். நினைவுகளை நிலை நிறுத்திக் கொள்ளவேண்டும். இந்த நினைவுகளினூடாக, முள்ளிவாய்க்கால் நிலப்பரப்பில் பறித்தெடுக்கப்பட்ட உயிர்களின் சாவுகளுக்கு நீதி தேடிய பயணத்தில் ஆக்ரோசமாகப் போராடவேண்டியிருக்கின்றோம்.

கொல்லப்பட்ட உயிர்கள் எமக்கு மீளக் கிடைக்கப் போவதில்லை. ஆனாலும் அந்த உயிர்களைக் கொன்றெடுத்தவர்களுக்குத் தக்க தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்தத் தண்டனைகள், எதிர்காலத்தில் இவ்வாறானதொரு மனிதப் பேரவலம் நிகழாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமையவேண்டும்.

நீதி தேடிய இந்த நெடிய - இடரிய பயணத்தில் ஒவ்வொரு தமிழனும் பங்கெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். எமது உறவுகளுக்காக - எமக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்களுக்காக, இந்தப் பேரவலத்தின் பின்னரும் எஞ்சியிருக்கும் நாம் தான் நீதி தேடவேண்டும்.

நீதிக்கான பயணத்தின் ஓர் அங்கமாக, நினைவேந்தல் நிகழ்வில் நாம் அனைவரும் பங்கேற்க வேண்டும். எமது தார்மீகக் கடமையைப் பிறர் மீது சுமத்துவதை விடுத்து - சாக்குப் போக்குச் சொல்லிதட்டிக்கழிப்பதைவிடுத்து, செவ்வனே நிறைவேற்ற ஒன்றுகூட வேண்டும். ஈழத் தமிழினம் தனது ஒன்றிணைந்த எழுச்சியை வெளிப்படுத்த, முள்ளிவாய்க்கால் மண்ணில் அனைவரும் அணி திரள வேண்டும் - என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-வ-5)

## ஈழப்

விடுத்துள்ளது. அத்துடன் இன்று மாலை 6.05 மணிக்கு மரணித்துப் போன ஒவ்வொரு உறவுகளையும் நெஞ்சுருகி நினைவு கூர்ந்து ஈகச் சுடரேற்றுமாறும் அந்த இயக்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் 18 மே இயக்கம் விடுத்துள்ள ஊடகச் செய்திக் குறிப்பில்,

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி, தமிழர் வாழ்நாளில் கறுப்பு நாள். செங்குருதி தோய்ந்த துக்க நாள். ஈழத்தின் மிகப் பெரிய துயர் படிந்த நாள்.

முள்ளிவாய்க்கால் தந்த துயர வலிகளை மனங்களில் நிறுத்திக் கொண்டு, உயிர் பறித்தெடுக்கப்பட்ட தமது உறவுகளுக்காகச் சுடரேற்றி அஞ்சலி செய்யும் நிகழ்வுகளில் தமிழ் மக்கள் இன்று ஈடுபட வேண்டும். அத்துடன் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காக இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும் விசேட வழிபாடுகளில் ஈடுபட வேண்டும். தமிழ் இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஆகப் பிந்திய - மிக மோசமான இந்தப் படுகொலையின் பெரும் துயரை நினைவேந்தும் நிகழ்வுகள் இன்று புலம் பெயர் நாடுகளிலும் நடைபெறுகின்றன. முள்ளிவாய்க்கால் தந்த வலியை - அந்தக் கணங்களை வலிமை கொள்ள வைக்கும் கணங்களாக மாற்றுவதற்கு அனைத்துத் தமிழ் மக்களும் இன்று அஞ்சலி செலுத்தவேண்டும்.

முள்ளிவாய்க்காலில் மூர்ச்சையாகிப் போனவர்களுக்கு எந்தப் பெறுமதியையும் இந்த உலகம் தரவில்லை. வெறுங்கையோடு மாத்திரம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. எம் மீது திணிக்கப்பட்ட வன்கொடுமைகளின் நினைவுகள் மட்டும்தான் எம்மிடம் எஞ்சியிருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் கொடுந்துயரின் பின்னரும் எஞ்சியிருக்கும் அந்த நினைவுகளையாவது நாம் இறுகப் பற்றிக் கொள்ள முயற்சிக்கின்றோம். அந்தத் துயர வலிகள், நினைவுகளால் ஒத்தடம் பெறுவதை உணர்கின்றோம்.

எனவே, எமது நினைவுகளை மீள் நிறுத்தி, எம்மின விடிவுக்காக மூச்சடங்கிப் போனவர்களுக்கும், கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட மக்களுக்காகவும் நாம் நினைவேந்தலில் பங்கேற்க வேண்டும். நினைவேந்தலின் முதன்மை நிகழ்வு, கொடுந்துயர் தந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் காலை 9 மணிக்கு இடம் பெறுகின்றது. அதில் தாயகத் தமிழர்களை, தங்கள் வேலைகளை - கடமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அணி திரண்டு பங்கெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் மாலை 6.05 மணிக்கு உயிரிழந்த எங்கள் உறவுகள் ஒவ்வொருவரையும் மனதில் நிறுத்திச் சுடரேற்றுமாறும் கேட்டுக் கொள்கின்றோம். வீடுகளில், ஆலயங்களில், பொது இடங்களில் ஈகச் சுடரேற்றுமாறு 18 மே இயக்கம் கேட்டுக்கொள்கின்றது. (து-வ-5)

## இந்திய

பரிந்துரைக்கு அமைவாக, குறித்த 21 இந்திய மீனவர்களும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டு நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ் ராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

குறித்த மீனவர்களில் 20 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததோடு, வயது குறைந்த சிறுவர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக மன்னாரில் உள்ள சிறுவர் காப்பகம் ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 21 பேரையும் விடுவித்த மன்னார் நீதிவான், அவர்களை மன்னார் மாவட்ட கடற்றொழிற் திணைக்கள அதிகாரிகள் ஊடாக இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார். (து-வ-4-56)

## மரண அறிவித்தல்கள்

### குருநாதர் விஸ்வநாதர் (காசிஐயா)

(ஓய்வு பெற்ற நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியர்)



புத்தூர் வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குரு நாதர் விஸ்வநாதர் (காசிஐயா) நேற்று (17.05.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதர் இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சரவணபவான் (ஜேர்மனி), கணேசமூர்த்தி (நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியம், கௌரியம்மா ஆகியோரின் அன்புக் கணவரும் தர்சினி, சாந்தினி, உமாசுதன், ஞானகுருபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரன் (மலேசியா), பரமேஸ்வரா (முகாமைத்துவ உதவியாளர் நகரசபை பருத்தித்துறை) ஆகியோரின் மாமனாரும் மாதினி, கீதசாய், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும் மூத்த விநாயகர் கோயிலடி ஆனந்தம் ஐயாவின் மருமகனும் கனகசபை, குமாரசாமி, சண்முகநாதன், தனபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் கஜேந்திரன், வித்தியாதரன், அபிராமி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று புத்தூர் வடக்கு கிந்துசிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 353 0368

## மரண அறிவித்தல்

### சூசைமுத்துஜோசப் ஞானராசா

(ஜீவா - பிரபல வர்த்தகர் )

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரம் மற்றும் கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைமுத்து ஜோசப் ஞானராசா அவர்கள் 04.05.2016 புதன்கிழமை கனடா Brompton இல் இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.05.2016) வியாழக்கிழமை அஞ்சலிக்காக அன்னாரினது முல்லைத்தீவு இல்லத்தில் (Mosque Lane) காலை 6.00 மணி தொடக்கம் வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு முல்லைத்தீவு புனித அம்பேதுருவார் ஆலயத்தில் இறுதியாத்திரைத் திருப்பலி ஒப்புக் கொடுத்த பின்னர் முல்லைத்தீவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வினோதராஜா
077 770 9391



தோற்றம்
25.08.1950

மறைவு
04.05.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் கேள்வி கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் திருப்பணித் திட்டத்தில் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

1. 515 சதுர அடிப்பரப்பளவு கொண்ட சிறிய வீடுகள் மூன்று நிர்மாணித்தல்.

2. நாகசாந்தி மடப் புனரமைப்பும், நீராடும் சிறு தடாகம் அமைத்தலும் இப் பகுதிக்கான அணைச்சுவர் அமைத்தலும்.

- வீடுகளுக்கான கட்டுமானப் பொருள்கள் யாவும் வழங்கப்படும்.
- நாகசாந்தி மடப் புனரமைப்புக்கும்- குறித்த ஏனைய நிர்மாண வேலைக்கும்-கட்டுமானப் பொருள்கள் உட்பட கூலியும் ஒப்பந்தகாரரின் பொறுப்பாகும்.

கேள்விப் பத்திரப் படிவங்களை 20.05.2016 தொடக்கம் கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுநாள் 31.05.2016 பி.ப 5.00 மணி.**

கேள்விப் பத்திரங்களை கோயில் அலுவலகத்தில் இதற்கென வைக்கப் பட்டுள்ள பெட்டியில் இடலாம் அல்லது 31.05.2016 இன் முன் கிடைக்கும் படி பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம். பதிவஞ்சலில் அனுப்பும் போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'கேள்வி கோரல்' எனக் குறிப் பிட வேண்டும்.

**அன்னையின் பணியில்**
**பொ. அன்பரசன் (செயலாளர்)**
**ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்,**
**அறங்காவலர் சபை, நயினாதீவு.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை பல்கலைக்கழக அலுவலர்களின் பாவனைக்கு வாடகைக்கு வீடு தேவை

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீட, விவசாயபீட மற்றும் தொழில்நுட்ப பீடங்களின் விருந்தினர் / அலுவலர் விடுதிக்கான சகல வசதிக ளுடனும் கூடிய பெரிய, நடுத்தர வீடுகள் அறிவியல் நகரை அண்மித்த பகுதிகளில் வாடகைக்குத் தேவை.

வீட்டை வாடகைக்குத்தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 01.06.2016 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு க் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "யாழ். பல்கலைக்கழக அலுவலர்களுக்கான வீடு" என குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக் கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

* தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517

பதிவாளர்.

---

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

**யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட/விவசாயபீட /தொழில் நுட்பபீட அலுவலர்களின் உபயோகத்துக்கான வீடு**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ........................ ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்துக்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை பல்கலைக்கழகத்துக்கு குத்தகைக்குத்தர விரும்புகிறேன்.

வீடு/கட்டடம் பற்றிய விவரங்கள்

1) வீடு அமைந்திருக்கும் இடம்
........................................................................
........................................................................

2) வீட்டு சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்
........................................................................
........................................................................

3) தொடர்புகொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
பெயர் : ............................................................
முகவரி : ............................................................
............................................................
தொலைபேசி இல: ............................................................

4) (a) வீட்டின் பரப்பளவு (சதுர அடி) ............................................
(b) வீடு அமைந்துள்ள காணியின் பரப்பளவு : ..................................

5) அறைகளின் எண்ணிக்கை ..................................................
குளியல் அறைகளின் எண்ணிக்கை ..........................................
மலசல கூடங்களின் எண்ணிக்கை ...........................................

6) மின்சார வசதி உண்டு / இல்லை ..........................................
விவரம் ............................................................

7) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர்
விவரம் ............................................................

8) எதிர்பார்க்கும் குத்தகை / மாதாந்த வாடகை .................................

9) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு .........................................

10) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள் / நிபந்தனைகள் (இருப்பின்) ......................
........................................................................
........................................................................

................................          ................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

## தாழமுக்கம்

விடுப்பதற்குரிய உரிய தொழில்நுட்ப வசதி இலங்கையில் இன்னும் இல்லை என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

இலங்கைக்கு மேலாகக் காணப்பட்ட தாழ முக்கம் நாட்டுக்கு அப்பால் சென்றுள்ள போதிலும், வடக்கில் இருந்து அது முழுமை யாக நீங்கவில்லை என்றும் அவர் கூறி யுள்ளார். நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற கால நிலை, அதனால் ஏற்பட்டுள்ள இடர் கள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக வியலாளர் மாநாடு நேற்று நண்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடை பெற்றது. இதில் வளிமண்டலவியல் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் லலித் சந்திரபாலவும் கலந்துகொண்டார்.

இதன்போது அமைச்சர் தெரிவித்துள்ள தாவது:-

கடந்த 15 ஆம்,16 ஆம்,17 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் கூடுதல் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. 300 மில்லிமீற்றரையும் தாண்டி மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. திடீ ரென இவ்வாறு கூடுதல் மழைவீழ்ச்சி ஏற்படும் என்பதனை முன்கூட்டியே அறியும் தொழில்நுட்ப வசதி எம்மிடம் இல்லை.

இலங்கைக்கு மேலாகக் காணப்பட்ட தாழ முக்கம் நாட்டுக்கு அப்பால் சென்றுள்ள போதிலும், வடக் கில் இருந்து அது முழுமையாக நீங் கவில்லை. எனவே, வடக்கில் அடுத்த சிலநாள்களுக்கும் காற்றுடன் மழை பெய்வதற்குரிய சாத் தியம் காணப்படு கின்றது. அதே போல் நாட்டின் ஏனைய பகுதிக ளிலும் இடையி டையே மழை பெய்யக் கூடும்.

அத்துடன், சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவார ணம்வழங்கும்பணி கள் அரச அதிபர் கள் ஊடாக முன் னெடுக்கப்பட்டுவரு கின்றன. இதற்காக 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்க ளின் உறவினர்க ளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீத மும், சேதமாகி யுள்ள வீடுகளுக் குச் சேதத்தின் தன் மைக்கு ஏற்பவும் காப்புறுதித் தொகை வழங் கப்படும். இடம் பெயர்ந்துள்ள மக் களுக்கு உலர் உணவுப் பொருள் களை வழங்கு வதற்குரிய நடவ டிக்கைகளும் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், முறை யற்ற விதத்தில் கட்ட டங்கள் அமைப் பதாலேயே மலை யகத்தில் மண் சரிவுச் சம்பவங் கள் அதிகம் இடம் பெறுகின்றன.

எனவே, மேற்படி சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப் படும் - என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட வளிமண்டலவி யல் திணைக்களத் தின் பணிப்பாளர், காலநிலை மாற் றம் குறித்து கடந்த 10ஆம் திகதி அறி விப்பு விடுக்கப்பட் டது. இருப்பினும், மழைவீழ்ச்சி எவ் வளவு பதிவாகும் என்பது உள்ளிட்ட விவரங்களைச் சரி யாகக் கணித்துக் கூறுவதற்குரிய தொழில்நுட்பம் இல்லை. எதிர் காலத்தில் இது சரி செய்யப்படும் - என்றார். (கு-வ-5)

# Holy Family Convent, Jaffna Past Pupil's Association Annual General Meeting - 2016

All members of the above association are invited to the **Annual General Meeting,** which will be held on the 21st **of May, 2016 (Saturday), at 3.30 pm in the school hall.**

All members are kindly requested to renew their membership (membership fee: Rs.100/-) during the annual general meeting Past Pupils who wish to join the association may do so at the beginning of the meeting.

-Principal.        -Secretary.

# பதவிக்கான தேடல்

நீங்கள் O/L தகைமையுள்ளவரா? எமது American DMI நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு .வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கவுள்ளது.

1. வயதெல்லை 18-30
2. அனுபவம் அவசியமற்றது
3. மேற்பார்வையாளர் விற்பனைப் பிரதிநிதிகள்
4. தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு
5. 20 பேர் மட்டும் தேவை.

தொடர்புகளுக்கு: **077 556 6224** (Jaffna Branch)
**077 700 9820** (Jaffna Branch)
**077 230 2795** (Mullaithivu Branch)

# துயர் பகிர்கின்றோம்



எமது குடும்ப நண்பராகிய

**கந்தையா தனபாலசிங்கம்**
(மணியம் மெக்கானிக்-கொடிகாமம்)

அவர்கள் கடந்த 15.05.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக் கின்றோம்.

பயனியர் அரிசி ஆலை,
பயனியர் கவின் சேவிஸ் ஸ்ரேசன்,
கண்டி வீதி, கொடிகாமம்.

# இறுதிக் கருத்தரங்கு

இறுதிக் கருத்தரங்கு, S.L.A.S, S.L.E.A.S
(OPEN & LTD)
நுண்ணறிவு, பொது அறிவு, விரிவுரை :
நா.தனஞ்செயன் (S.L.A.S)

**காலம் : 23.05.2016 திங்கட்கிழமை**

**நேரம்: 9.00-4.00 மணி**

**இடம்: நாவலர் கலாசார மண்டபம்**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

மேலதிக விவரம் : 077 776 4519

புதிய நுண்ணறிவுத் துணுக்குகள், நுண்ணறிவு நூல்.

# பனை அபிவிருத்திச் சபை
# PALMYRAH DEVELOPMENT BOARD

## விற்பனை உதவியாளர் பதவி (தற்காலிகம்)

பனை அபிவிருத்திச் சபையின் நெடுந்தீவுப் பிரதேசத்தில் அமைந்துள்ள கற்பக விற்பனை நிலையத்தின் விற்பனை உதவியாளர் பதவிக்கு தகைமையுடைய பொருத்தமான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் யாவும் கீழ்வரும் முகவரிக்கு பதி வுத்தபால் மூலம் எதிர்வரும் 2016.05.25 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு: நெடுந்தீவு பிரதேச விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்**

**தலைவர்**
**பனை அபிவிருத்திச் சபை,**
**தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம்,**
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்

பிரிவுகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம், கரையோரப் பகுதிகளில்காற்றுவீசும்என்றும்குறிப்பிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுக் காலை 8.30 மணி வரை யாழ்.திருநெல்வேலியை அண்மித்த பகுதியில் 77.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் திணைக்களம் கூறியுள்ளது.

**யாழ்ப்பாணம்**

யாழ். குடாநாட்டில் நேற்றுமுன்தினம் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்படி யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 572 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 19 வீடுகள் முழுமையாகவும் 220 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பெய்த மழை காரணமாக பருத்தித்துறை மற்றும் கரவெட்டிப் பகுதிகளில் வீசிய மினிசூறாவளி காரணமாக பல வீடுகளினதும் கூரை மரங்கள் தூக்கி வீசப்பட்டுள்ளன. அவ்வாறே ஒடுகளும் தூக்கி வீசப்பட்டுள்ளன. பல இடங்களிலும் பனை மரங்கள் பாறி விழுந்துள்ளன. காரைநகர் வீதியில் நடப்பட்டுள்ள மின்சாரத் தூண்களும் சரிந்த நிலையில் காணப்பட்டன.

அதுமட்டுமன்றி, திக்கம், இன்பர்சிட்டி, அல்வாய் மேற்கு உள்ளிட்ட பகுதிகளில் மின் கம்பிகள் மீது தென்னை மரம் முறிந்து விழுந்ததனால், மின் கம்பிகள் அறுந்து வீதியில் தொங்குகின்றன. அதனால் நேற்று முன்தினம் தொடக்கம் அங்கு மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொழிந்த மழையின் காரணமாக இதுவரை 292 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 12 பேர் பாதிப்படைந்துள்ளதுடன். 18 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் இடம்பெயர்ந்து நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், மாவட்டத்தில் 11 வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளதுடன் மேலும் 38 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இந்துபுரம், அமைதிபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து 16 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியேறியுள்ளன. அவர்களுக்கான உலருணவுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட செயலகத்தினால் கூறப்பட்டுள்ளது.

அங்கு மழை வெள்ளம் காரணமாக பயிரழிவு மிகமோசமாக ஏற்பட்டுள்ளதாக அங்குள்ளகமக்கார அமைப்புக்கள் கூறுகின்றன. தாழ் நிலங்களும் வெள்ளக்காடாக மாறியுள்ளதோடு, பாடசாலைகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. முல்லைத்தீவு வட்டுவாகல் நீர் ஏரியிலும் வெள்ளம் பெருக்கெடுத்து பாலத்தின் மேலால் பாய்ந்தது. முல்லைத்தீவு 3ஆம் கட்டையில் உள்ள வயல் நிலங்கள் கடந்த போகத்தைப் போன்று மீண்டும் நீரில் மூழ்கியுள்ளன.

மேலும், வற்றாப்பளைக் கோவில் வளாகத்தில் ஆங்காங்கே வெள்ளம் நிறைந்திருந்தது.எனினும் தற்போது நீர் வடிந்து வருகின்றது. முள்ளியவளை கலைமகள் வித்தியாலய வளாகம் எங்கும் வெள்ளம் தேங்கி நின்று சேறும் சகதியுமாக காணப்பட்டன. இதனால் மாணவர்கள் கற்கக்கூடிய சூழ்நிலை காணப்படாவிட்டாலும், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கக்கூடாது என்ற வகையில் பாடசாலை மாணவர்களுடன் இணைந்து அதிபர், ஆசிரியர்களும் வகுப்பறைகளில் தேங்கி நின்ற வெள்ளத்தினை வெளியேற்றிய பின், கல்வி செயற்பாடுகளில் ஈடுபட்டனர். முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரியிலும் இரண்டு வகுப்பறை மண்டபங்களுக்குள் வெள்ளம் புகுந்து வெளியேறியமை காரணமாக, அவை நேற்று மாணவர்களால் சுத்தம் செய்யப்பட்டன. முல்லைத்தீவு தண்ணீரூற்று இந்து வித்தியாலயத்தின் வளாகம் மாணவர்கள் நடமாடமுடியாதளவுக்குச் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

வட்டுவாகல் கடல் நீரேரி நிரம்பியதால், கடலுக்கும் வட்டுவாகல் கடல் நீரேரிக்குமான தொடுவாய் உடைக்கப்பட்டுப் பெருங்கடலுடன் தொடுத்துள்ளது. அத்தோடு வட்டுவாகல் பாலத்துக்கு மேலாக நீர் மேவிப் பாய்ந்துள்ளது. இதனால் பிரதான வீதியில் மீன்கள் காணப்பட்டன. மீனவர்கள் தடிகளுடன் அவ்விடங்களில் நின்று மீன்களை அடித்துப் பிடிப்பதை அவதானிக்க முடிந்தது.

அத்துடன் மீனவர்கள் ஏனைய இடங்களில் பாலங்களுக்கு அருகேயும் ஏனைய நீர்நிலைகளிலும் வீச்சு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதையும் அவதானிக்க முடிந்தது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 636 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 841 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அத்துடன் 620 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 50 பேர் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று 110 வீடுகள் சேதமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள்களாகத் தொடர்ந்து கொட்டிய மழையின் காரணமாக கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் சடுதியாக 25 அடியினைத் தொட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய குளமான இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் மிகச் சடுதியாக உயர்வடைந்துள்ளது. குறித்த குளத்தின் நிர்மாணப்பணிகள் கடந்த மூன்று மாதங்களாக மிக வேகமாக இடம்பெறுவதனைத் தொடர்ந்து, சிறுபோக நெற்செய்கையும் நிறுத்தப்பட்டு குளத்து நீர் வெளியேற்றப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் கடந்த சனிக்கிழமை இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 12 அடியாக காணப்பட்டது. இந்த நிலையில், தற்போது 25 அடியினை எட்டியுள்ளது.

**வவுனியா**

வவுனியா மாவட்டத்தில் இதுவரைக்கும் 734 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 781 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 24 வீடுகள் முழுமையாகவும் , 56 வீடுகள்பகுதியளவிலும்சேதமடைந்துள்ளன. வவுனியா தெற்கு பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. வவுனியா வடக்கு பிரிவில் 309 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 150 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அத்துடன் 43 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தள்ளதாகவும் 21 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 56பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அத்துடன் 2வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் 3வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. மழை வெள்ளம் காரணமாக வவுனியா மரக்காரம்பளை பகுதியில் பொது நோக்கு மண்டபத்தில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 43பேர் தற்காலிகமாக தங்கியுள்ளதாகவும் அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும், அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் 394 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 413 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன் 10 வீடுகள் முழுமையாகவும், 11 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. மேலும் சீரற்ற காலநிலையால் கடற்றொழிலாளர்களின் 41 படகுகளும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-வ-4-101-ரி7-26-102-108)

---


## மரண அறிவித்தல்

### முத்தையா மாணிக்கம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் 17/1, கோயில் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மாணிக்கம் நேற்று (17.05.2016) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

17/1, கோயில் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
சாந்தினி மாணிக்கம் (மகள்)
077 636 5774


---


## மரண அறிவித்தல்

### கந்தையா தனபாலசிங்கம்
(மெக்கானிக் மணியம்)

அன்னை மடியில் 16 . 10 . 1949



இறைவன் அடியில் 15 . 05 . 2016

யாழ். பளை வேம்பொடுகேணியைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் 15.05.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் தவமலர் அவர்களின் பாசமிகு கணவரும் நிறஞ்சன் (இத்தாலி), சகிலன்(ஆசிரியர்/ கிளி பிரமந்தனாறு மகா வித்தியாலயம்), வாசுகி(லண்டன்), சஞ்சீவன்(கிளி மாவட்ட செயலகம்- விலை நிர்ணய கட்டுப்பாட்டு சபை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான தவமலர், செல்வகுலசிங்கம் மற்றும் தருமகுலசிங்கம் (முன்னாள் அதிபர் யாழ்/ செங்குந்தா இந்துக் கல்லூரி) , தவமணி, செல்வராணி(நெதர்லாந்து), குமார குலசிங்கம்(தேங்காய் வியாபாரம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஸ்ரெல்லா (இத்தாலி), யசிந்தா(அபிவிருத்தி உத்தியோகத்தர்- பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கனகராஜா, செல்வராஜா, பத்மாவதி, யோகராஜா, நடராசா, யோகேஸ்வரி, புனிதவதி, புனிதமலர், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, பத்மராஜா மற்றும் சிவபாதம், சிவமணி, சிவஞானமணி, சிவப்பிரகாசம், சிவயோகநாதன், உதயகுமாரி ஆகியோரின் அருமை மைத்துனரும் றஜனன், ரேஸ்னவி ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் கட்டை பறிச்சான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 233 6338, 077 481 5914


---


## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் கந்தையா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல 62, டச்சுவீதி , உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் கந்தையா நேற்று (17.05. 2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் பொன்னம்பலம், செல்வரட்ணம், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகாலக்சுமி (பவளம்-பிரான்ஸ்), தேவநாயகி (மங்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிலிப்பானந்தம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நாகேந்திரம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மெல்வின்-தட்சாயினி (கொழும்பு), பசில்டகீந்திரன்-சபானா (பிரான்ஸ்), ஜோன்சன்-ஜெயமதி (லண்டன்), ரெனிசன்-சுகந்தினி (ஆஸ்திரேலியா), நவநீதன் (பொறியியலாளர் சிறீலங்கா ரெலிக்கொம்)-அருந்ததி , நவதாசன்(அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் காரைநகர்)-தயாளினி, நவரூபன் (பொறியியலாளர் நீர் வடிகாலமைப்பு அதிகாரசபை யாழ்ப்பாணம்) -துஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஜோய்லின், லவணியா, லெர்வின், கெவின், லஷான், சாமினா, செகான்,ஜோஸ்வினா, துசாஜினி, டக்சாயினி,ஷஜீவன், அக்ஷனா, சந்தோஷ், ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2016) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 62, டச்சு வீதி,
உடுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
021 224 0906


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


## இருந்திட்டா மட்டும்

ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணியின் நட்சத்திர வீரரான மக்ஸ்வெல் காயம் காரணமாக விலகியுள்ளார். இருப்பினும் மக்ஸ்வெல்லின் விலகலால் பஞ்சாப்புக்குப் பின்னடைவு ஏற்படுவதாக உணரப்படவில்லை.

பஞ்சாப் அணி, தான் எதிர்கொண்ட 12 ஆட்டங்களில் 8 ஆட்டங்களில் தோல்வியடைந்து பிளே ஓவ் வாய்ப்பை இழந்துவிட்டது. இந்த நிலையில் மக்ஸ்வெல்லும் காயமடைந்து தொடரிலிருந்து விலகியுள்ளார். இருப்பினும் மக்ஸ்வெல்லின் விலகல் பஞ்சாப்புக்குச் சிக்கலை ஏற்படுத்தாது. ஏனெனில், அந்த அணியிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. மட்டுமல்லாமல் மக்ஸ்வெல் நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில், தான் களமிறங்கிய 11 ஆட்டங்களில் 179 ஓட்டங்களை மட்டுமே எடுத்துள்ளார். (ம)







## பயிற்சியாளராக ராவிட்; பொண்டிங்கின் கருத்து

இந்திய அணியின் பயிற்சியாளராக ராகுல் ராவிட் நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான பொண்டிங், ராவிட்டின் பயிற்சியில் இந்திய அணி அதிக அளவில் சாதிக்கும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த் பல மாதங்களாக இந்திய அணி பயிற்சியாளர் இல்லாமலேயே விளையாடி வந்தது. ஆனால் அடுத்த ஒரு வருடத்தில் அந்த அணி குறைந்த பட்சம் 16 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட உள்ளது. வேறு தொடர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம். இதனால் அந்த அணிக்கு பயிற்சியாளர் ஒருவரை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே புதிய பயிற்சியாளர் ஒருவரை நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முனைப்புக் காட்டி வரும் நிலையில் பொண்டிங்கின் தெரிவாக ராவிட் உள்ளார்.

ராவிட்டை பயிற்சியாளராக்குவது தொடர்பாக பொண்டிங் தெரிவிக்கையில் - இந்திய அணியின் பயிற்சியாளராவதற்கு உரிய தகுதியும் திறமையும் ராவிட்டிடம் அதிகம் உள்ளது. அவர் நுட்பங்களைக் கரைத்துக் குடித்த ஒருவர். ஆனால் நான் ஒருவன் முடிவு செய்தால் மட்டும் போதாது, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தான் அதை முடிவு செய்ய வேண்டும். ஆனால் ராவிட்டை விட ஒரு சிறந்த பயிற்சியாளரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் கண்டு பிடிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை என்றார்.

பொண்டிங்கின் தெரிவு இவ்வாறிருந்தாலும், இந்தியாவின் பயிற்சியாளராக யார் வருவது என்ற விடயத்தில் 70 சதவீதமான முடிவை எடுப்பவர்கள் டோனியும் கோக்லியுமாகவே இருப்பார்கள். (ம)

## வில்லியர்ஸ் சாதனை

ஐ.பி.எல். தொடரில் ஒரு சீசனில் அதிக பிடியெடுப்புக்களை நிகழ்த்தியவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் பெங்களூரின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான வில்லியர்ஸ்.


நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவை 9 இலக்குகளால் வென்றிருந்தது பெங்களூர். இந்த ஆட்டத்தில் கொல்கத்தா வீரர் மனிஷ் பாண்டே கொடுத்த பிடியெடுப்பை வில்லியர்ஸ் கச்சிதமாக நிகழ்த்தினார். நடப்புத் தொடரில் வில்லியர்ஸின் 14ஆவது பிடியெடுப்பு இதுவாகும். இதன் மூலம் ஒரு சீசனில் அதிக பிடியெடுப்பை நிகழ்த்திய வீரர்களான மில்லர், பிராவோ ஆகியோரின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார். (ம)



## பாகிஸ்தான் - மே.தீவுகள் தொடர் இலங்கையில் நடைபெற வாய்ப்பு

பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான இருதரப்புக் கிரிக்கெட் தொடரொன்றை இலங்கையில் நடத்துவது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பரிசீலனை செய்து வருகிறது.

பாகிஸ்தானிலுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக, பாகிஸ்தானில் நடைபெற வேண்டிய தொடர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தப்பட்டு வந்தன. எனினும் அங்கு காணப்படும் உயர் செலவுகள் காரணமாக, இந்தத் தொடரை இலங்கையில் நடத்த பாகிஸ்தான் தீர்மானித்தது. எனவே இதற்கான நிதி மதிப்பீட்டை வழங்குமாறு இலங்கை கிரிக்கெட் சபையிடம், பாகிஸ்தான் சபை கோரியுள்ளது. அவ்வாறான கோரிக்கை கிடைத்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ள இலங்கை கிரிக்கெட் சபை, அதற்கான மதிப்பீட்டை விரைவில் அனுப்பவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. (ம)




## சிறந்த முகாமையாளராக றனேரி

நடப்பு வருடத்தின் இங்கிலாந்து பிறீமியர் லீக் முடிவடைந்ததையடுத்து சிறந்த முகாமையாளராக லெய்செஸ்டர் அணியின் கிளாடியோ றனேரி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கிளாடியோ றனேரி ஓர் இத்தாலியர். வழக்கமாக இங்கிலாந்து அல்லது அயர்லாந்தைச் சேர்ந்த முகாமையாளர்களே சிறந்த முகாமையாளருக்கான விருதைக் கைப்பற்றுவார்கள். ஆனால் அவ்வாறு அல்லாமல் வேறு நாட்டவர் ஒருவர் இந்தக் கௌரவத்தை அடைவது இது இரண்டாவது முறை. மட்டுமல்லாமல் இத்தாலி கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த முகாமையாளருக்கான விருதுகளையும் றனேரி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆஸி. அணிக்கு சிகா எச்சரிக்கை



மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பய ணம் மேற்கொள்ளவுள்ள ஆஸ்திரேலிய அணிக்கு சிகா வைரஸ் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா, மேற் கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையி லான முத்தரப்பு ஒரு நாள் தொடர் அடுத்த மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. கயானா, செயின்ட் கிட்ஸ், பார்படோஸ் ஆகிய இடங்களில் தொடர் நடைபெறவுள்ளது. சமீபத்தில் கயானாவில் சிகா வைரஸ் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அங்கு செல்ல இருக்கும், ஆஸ்தி ரேலிய அணியினருக்கு, மருத்துவ குழு எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம)

### கடுகன்னாவ

இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சகோதர - சகோதரியின் குடும்பம் என அறியமுடிகின்றது. இதில் 46 வயதுடைய தாய் மற்றும் அவரது இரு புதல்வர்களும், 49 வயதுடைய தாய் மற்றும் அவரது இரு புதல்வர்களும் மண் சரிவில் புதையுண்டனர்.

நேற்று மாலை வரை மேற்கொள்ளப்பட்ட மீட்புப்பணிகளில் 10 வயது மொஹமட் ஷிஹான், 15 வயதுடைய மொஹமட் அம்ஜட் மற்றும் 46 வயதுடைய பீன் ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் 49 வயதுடைய மும்தாஜ், 24 வயது டைய ரஸ்வின் மொஹமட் மற்றும் 16 வயதுடைய சபீக் மொஹமட் ஆகியோரை மீட்கும் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, அந்தப் பகுதியில் மண் சரிவு அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், அந்தப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ள னர் என்று கடுகன்னாவ பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு கண்டி பிரதான வீதியில் கடுகன்னாவ - இலுக்குவத்த சந்தியிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ரம்மலக எனும் மலைப்பாங்கான கிராமத்திலே குறித்த இடர் இடம்பெற்றுள்ளது. (து-வ-4)

### போரில்

மைப்பின் சார்பில் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இவ் வாறு அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது அவர், முள்ளிவாய்க்காலில் மடிந்த உறவுகளுக்காக இந்த உயர் சபையில் அனைவர் சார்பிலும் அஞ்சலியைச் செலுத்துகிறேன் - என்றார். (து-வ-5)

### புதிய

அவசியமானது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலை வரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் அமெரிக்காவின் முன்னாள் பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ், எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது, இரா ணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் தனியார் காணிகளின் விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற பல் வேறு விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர், அமெரிக்காவின் முன்னாள் பிரதி இரா ஜாங்கச் செயலாளருக்குத் தெளிவுபடுத்தினார்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளாகக் காணப்படும் இந்த விடயங்கள் தொடர்பில் அரசானது இன்னும் ஆர்வமாகவும் வேகமாகவும் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர், இந்த விடயங்கள் தொடர்பில் உடனடி நிவாரணங்கள் - தீர்வுகளை வழங்குவதிலிருந்து அரசு விலகி நிற்க முடியாது என்றும் எடுத்துரைத்தார்.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், புதிய அரசமைப்பில் தேசிய பிரச் சினைக்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டுவது மிகவும் அவசியாமானது எனவும் கூறினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந் திரனும் கலந்துகொண்டார். (து-வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மெய்வன்மை


யாழ்ப்பாணம், மே 18
வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான இருபாலாருக்குமான மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலக செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் இ.குருபரன், யாழ். போதனா வைத்தியசாலையின் விளையாட்டுப் பிரிவு மருத்துவர் வைத்திய கலாநிதி ச.அறிவுச்செல்வன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபர் ச.வேலழகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)

# ரெட்றேஞ்சர்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 18
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணி சம்பியனானது.

நாமகள் வி.கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சாவற்கட்டுமகாத்மா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணி மோதியது. இதில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. ஆட்டநாயகனாக மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணியின் தயானந்தும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் ஜெனிஸும் தெரிவானார்கள். தொடராட்ட நாயகனாக சாவற்கட்டு மகாத்மா அணியின் லேகேஸ்வரன் தெரிவானார். (ம-23)



# அதிக ஐ.பி.எல். ஓட்டங்கள் கோக்லி மற்றொரு சாதனை

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் தனது அசாத்தியத் துடுப்பாட்டம் மூலம் தொடர்ந்து சாதனைகளுக்கு மேல் சாதனை படைத்து வருகிறார் கோக்லி. அந்த வரிசையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்திலும் அவரால் ஓர் புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் ஒரு சீசனில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் வரிசையில் கெயில், மைக்கல் ஹசி இருவரும் முதலிடத்தில் இருந்தனர். இந்த இருவரும் 733 ஓட்டங்களைக் குவித்திருந்தனர். இந்தச் சாதனை நேற்றுமுன்தினம் கோக்லியால் முறியடிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களை எடுத்த தன் மூலம் கோக்லி இதுவரை களமிறங்கிய 12 ஆட்டங்களில் 752 ஓட்டங்களைக் குவித்துள்ளார். சராசரி 83 ஓட்டங்களாகும்.

மட்டுமல்லாமல் இந்தத் தொடரில் மூன்று சதங்களை இதுவரை பதிவுசெய்துள்ள கோக்லி, ஒரு தொடரில் அதிக சதங்களைப் பதிவுசெய்தவர்கள் வரிசையிலும் முதலிடத்தில் உள்ளார். (ம)

# யாழ். மேசைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 18
யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 15வயது, 19 வயது இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டத் தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி முதலாமிடத்தையும், பெண்கள் பிரிவில் வடமாரட்சி மத்திய பெண்கள் பாடசாலை முதலாமிடத்தையும் தமதாக்கிக் கொண்டன. 19 வயது ஆண்கள் பிரிவில் ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை முதலாமிடத்தையும், பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்தையும் தமதாக்கின.

15 வயது ஆண்கள் பிரிவில் இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே அராலி சரஸ்வதி மகா வித்தியலாயம், யாழ். இந்துக் கல்லூரி ஆகியவை தமதாக்கின. குறித்த வயது பெண்கள் பிரிவில் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை இரண்டாம் இடத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை மூன்றாம் இடத்தையும் தமதாக்கின.

19 வயது ஆண்கள் பிரிவில் இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவை தமதாக்கிக் கொண்டன. குறித்த வயது பெண்கள் பிரிவில் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை இரண்டாம் இடத்தையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் கைப்பற்றின. (ம-23)

# கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மே 18
கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதவுள்ளது. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம-422)


# வெளியேறுகிறார் ரசல்? சிக்கலில் கொல்கத்தா

கொல்கத்தா அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான ரசல் உபாதைக்கு உள்ளாகியிருப்பது பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறுவதைப் பொறுத்த மட்டில் அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் 19ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசிக் கொண்டிருக்கும் பொழுது நிலத்தில் வீழ்ந்து தசைப்பிடிப்புக்கு உள்ளானார் ரசல். இதனால் கொல்கத்தா களமிறங்கவுள்ள அடுத்த இரு லீக் ஆட்டங்களிலும் அவர் களமிறங்குவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஒருவேளை ரசல் களமிறங்காவிட்டால் அந்த இரு ஆட்டங்களிலும் கொல்கத்தா தோல்வியடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. 12 ஆட்டங்களில் விளையாடி 7 ஆட்டங்களில் வென்றுள்ள கொல்கத்தா அடுத்த இரு ஆட்டங்களில் ஒன்றை வென்றால் பிளே ஓவ் சுற்றை நினைத்துப் பார்க்கலாம். மாறாக இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்தால் தொடரை விட்டு வெளியேறவேண்டிய நிலையும் ஏற்படும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் ரசலில் உபாதை அந்த அணிக்கு தலையிடியாய் வந்து சேர்ந்துள்ளது. (ம)

# பிற்போடப்பட்டது பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 18
வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் மன்னார் உள்ளரங்கில் இன்று நடத்தப்படவிருந்த பூப்பந்தாட்டம் சீரற்ற காலநிலை காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இதன்படி நா[illegible] எதிர்வரும் சனிக்கிழமை[illegible] நடைபெறும். (ம-422)



மிக அண்மையில் பெண்குழந்தைக்கு தந்தையான இந்திய அணியின் நட்சத்திர வீரர் ரெய்னா தனது குழந்தையின் படத்தை தனது முகப்புத்தகம் மற்றும் டுவிட்டர் பக்கங்களில் வெளியிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.சி.சி. - இலங்கையிடையே
## வெடித்தது கருத்து மோதல்

குசல் ஜெனித் பெரேராவின் வழக்குத் தொடர்பாக ஏற்பட்ட பண விரயம் தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபைக்கும் இலங்கை கிரிக்கெட் சபைக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.
இலங்கை அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் குசல் ஜெனித் பெரேரா, ஊக்கமருந்து விவகாரத்தில் தவறுதலாகச் சிக்கியமையால் செலவிடப்பட்ட தொகை தொடர்பாகவும் அதை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) மீளச்செலுத்த வேண்டுமா என்பது தொடர்பாகவும் தொடர்ந்தும் குழப்பம் நிலவுகிறது. பல மாதங்கள் நீடித்த குசல் பெரேரா தொடர்பான விவகாரத்தில், அவர் குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதற்கு 13 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதனால் குறித்த தொகையை ஐ.சி.சி. தமக்குத் தரவேண்டும் என்பது இலங்கையின் வாதமாக உள்ளது.
ஆனால் இதை மறுத்துள்ள ஐ.சி.சி., ஆய்வு கூடத்தில் ஏற்பட்ட தவறுக்கு, சர்வதேச கிரிக்கெட் சபை பொறுப்பானது அல்ல என்று குறிப்பிட்டுள்ளது. (ம)



## கோப்பாய் பிரதேச செயலகம் சம்பியன்:
### மாவட்ட கடற்கரைக் கரப்பந்தாட்டத்தில்

யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட கடற்கரைக் கரப்பந்தாட்டத் தொடரில் இருபிரிவுகளிலும் கோப்பாய் பிரதேச செயலக அணிகள் நடப்பு வருடச் சம்பியன்களாகின.
வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் யாழ். பிரதேச செயலக அணியும் மோதின. இதில் கோப்பாய் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் பலப்பரீட்சை நடத்தின. இதிலும் கோப்பாய் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. (ம-108)



# புனேக்கு பயனற்ற வெற்றி
# டெல்லிக்கு மேலும் தலையிடி

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற புனே-டெல்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் புனே அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற புனே முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. புனேக்கு இந்த ஆட்டம் மிகவும் அவசியமான ஒன்றல்ல. ஏனெனில் அந்த அணி வெளியேறிவிட்டது. ஆனால் டெல்லி பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேற வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெறுவதன் மூலம் தனக்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்திக் கொள்ளலாம். எனவே அதிகப்படியான அழுத்தங்கள் டெல்லியின் மீதிருந்தன. ஆரம்ப வீரர்களாக குயின்டன், மற்றும் ஐயர். இருவருமே நிலைக்கவில்லை. ஹொக் இரண்டு ஓட்டங்களுடனும் ஐயர் எட்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இருவரையும் வெளியேற்றியவர் டின்டா. சாம்சன், நாயர் இணை இலக்குச் சரிவை உணர்ந்து அதிகம் நிலைக்க பவர் பிளே முடிவில் டெல்லி 28-2. சாம்சனை வெளியேற்றினார் சாம்பா. வந்த வேகத்தில் விடைபெற்றார் பன்ட். ஓர் முனையில் இலக்குச்சரிவு மறுமுனையில் நாயரின் அளவுக்கு அதிக நிதானம் என இருமுனை நெருக்கடியில் சிக்கியது டெல்லி. 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் நாயர். இதற்காக அவர் 43 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். மத்திய வரிசை அச்சுறுத்தலான டுமினையும் வெளியேற்றினார் டின்டா. 19 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் டெல்லி 99-6 என்றிருந்தது. இறுதிப்பந்துப்பரிமாற்றத்தை வீச அழைக்கப்பட்டார் பெரேரா. சிக்சர்கள், பவுண்டரிகள் என 22 ஓட்டங்களை விளாசினார் மொறிஸ், முடிவில் 121 ஓட்டங்கள் என்ற கௌரவமான ஓட்டங்களை எட்டியது டெல்லி. மொறிஸ் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் புனேயின் சார்பாக டின்டா, சாம்பா இருவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய புனேக்கு ஆரம்ப வீரர்களான ரகானே மற்றும் கவாயா இணை நீண்ட நேரம் நிலைக்க வில்லையானாலும் இலங்கை எட்டும்படியான நம்பிக்கையை வழங்கியது. அணியின் ஓட்டம் 31 ஆக இருந்தபொழுது மொறிஸால் வீழ்த்தப்பட்டார் கவாயா. ரகானேயுடன் பெய்லி இணைய பவர்பிளே முடிவில் புனே 44-1. மழை குறுக்கிடுவதும், பின்னர் ஆட்டம் தொடருவதுமாக புனேயின் இன்னிங்ஸ் நகர்ந்து கொண்டிருந்தது. டக்வோர்த் லூயிஸ் முறைப்படி பார்த்தால் புனேக்குச் சாதகமாகவே ஆட்டம் முடியக்கூடிய வகையில் ரகானேயும், பெய்லியும் விளையாடிக் கொண்டிருந்தனர். அந்த அணி 11 பந்துப் பரிமாற்றங்களில் 76-1 என்ற நிலையில் இருந்தபொழுது இரண்டாவது முறையாக மழை குறுக்கிட்டது. 9 இலக்குகள் கையிருப்புக்கு 54 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலமை. டக்வோர்த் லூயிஸ் முறை செயற்படுத்தப்பட 19 ஓட்டங்களால் வென்றது புனே. (ம)

## கோக்லிக்கு கட்டாய ஓய்வு

ஐ.பி.எல். தொடரையடுத்து நடைபெறவுள்ள இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான தொடரில் விராட் கோக்லிக்கு ஓய்வுகொடுக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.
இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையில் 3 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும் 3 ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரும் அடுத்த மாதம் 11ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இந்தத் தொடர்களுக்கான இந்திய அணியிலிருந்து கோக்லிக்கு ஓய்வு கொடுக்கப்படவுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் இருந்து கோக்லி தொடர்ச்சியாக விளையாடி வருகிறார். அவர் 17 டெஸ்ட், 10 ஒருநாள் மற்றும் 15 ரி-20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். அத்துடன் தற்போது ஐ.பி.எல். சீசனிலும் விளையாடி வருகிறார். சிம்பாப்வே தொடரைத் தொடர்ந்து இந்தியா மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்கிறது. இதனால் தீவுகளுக்கு எதிரான தொடரில் சிறப்பாகச் செயற்படுவதற்காக சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் கோக்லிக்கு ஓய்வு கொடுக்கப்படவுள்ளது. டோனி டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றுள்ளதால் அவருக்குத் தேவையான அளவுக்கு ஓய்வு கிடைக்கிறது. இதனால் டோனிக்கு ஓய்வு கொடுக்க வாய்ப்பில்லை. சிம்பாப்வேக்கு எதிரான தொடருக்கான இந்திய அணி தொடர்பான முழுமையான விபரங்கள் இந்த வாரம் உத்தியோகபூர்வமாக வெளியாகலாம். (ம)





## சிறந்த வீரராக ஜோ ரூட் தெரிவு

இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் சிறந்த டெஸ்ட், மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களுக்கான வீரராக ரூட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் விருது வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் சிறந்த டெஸ்ட் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களுக்கான வீரராக ரூட் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த 12 மாதங்களில், டெஸ்ட் ஆட்டங்களில் 3 சதங்களையும் 10 அரைச் சதங்களையும் குவித்த அவர், ஒருநாள் ஆட்டங்களில் 4 சதங்களையும் 4 அரைச் சதங்களையும் ரி-20 ஆட்டங்களில் 3 அரைச்சதங்களையும் குவித்திருந்தார்.
சிறந்த கிரிக்கெட் வீராங்கனைக்கான விருதை, அனியா சரப்சோல் கைப்பற்றினார். அவர் கடந்த 12 மாதங்களில், அனைத்து வகையான ஆட்டங்களிலும் 32 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார்.
மாற்றுத் திறனாளிகள் அணியின் சிறந்த வீரராக கலம் பிளின் தெரிவானார். (ம)

## இன்றைய மோதல்கள்

யங்ஹென்றிஸ் வி.கழகத்தால் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதவுள்ளது. மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதவுள்ளது. (ம-422)

## ஐ.பி.எல். கிண்ணம்




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org